# கணேஷ் வசந்த்

in

# ஆயிரத்தில் இருவர்

## சுஜாதா

## 1

"ஓயே ஓயே ஓஓயே..." என்றான் வசந்த்.

"வசந்த், இன்னும் ஒரு வாட்டி இந்தப் பாட்டை பாடினே, உனக்கு சீட்டை கிழிக்கப் போறேன்."

"ஏன் பாஸ் இந்தப் பாட்டுத்தான் தற்காலத்தில் ஹிட் கல்யாண்ஜி ஆனந்த்ஜி மையாமி சவுண்ட்மிஷின்லிருந்து தட்டிருக்காங்க. அன்னிக்கு உஷா உத்துப்புகூட பாடினாங்களே கேக்கலை?"

"கேக்கலை."

"ஞான சூன்யம்! இல்லை, மனசுக்குள்ள என்ன எண்ணம் சுப்புடுன்னா?"

"ஒரு எண்ணமும் இல்லை" என்று கணேஷ் 'எவிடன்ஸ் ஆக்ட்'டின் கோல் வால்கரின் வியாக்கியானத்தைப் புரட்டினான்.

"ஆக்டில என்ன வேணும் சொல்லுங்க" என்றான் வசந்த்.

"ஏதும் வேண்டாம். "ஓயே ஓயே" பாடாம இருந்தா சரி."

"இப்படி ஊக்கம் தராம எத்தனை டாலண்ட் மேலுக்கு வராம தவிச்சிருக்கு தெரியுமா?" என்றான் வசந்த்.

காலை நேரம் ராமகிருஷ்ணாவிலிருந்து பையன் இட்லி, வடை சர்க்கரை குறைவாக காபி கொண்டு வைத்துவிட்டு போகையில் 'ஓயே ஓயே' என்ற போது வசந்த் கணேஷைப் பார்த்துச் சிரித்தான், "நல்லது வெளியே வந்தே தீரும்னு கன்புஷியஸ் சொன்னாரு தெரியுமா?"

"என்ன ஒரு ஜனங்கப்பா" அன்றைய தினசரிகளின் தலைப்புச் செய்திகளை மேய்ந்தான்; வசந்த் 'இந்து'வை மடக்கி வைத்துக்கொண்டான்.

"க்ராஸ் வேர்டா."

"இல்ல பாஸ். கிரிபிரசாத் உபன்யாசம் போட்டிருக்கும். ரொம்ப உருக்கமா இருக்கும்."

"ஹிந்து ரிப்போர்ட்ஸ் தி நைட் லைஃப் ஆஃப் மெட்ராஸ்னு ஜானகிராமன் சொல்லியிருக்கார்."

"ஆயிரத்தில் இருவர் வரதட்சணை கொடுமையால் செத்துப்போகிறார்கள்" என்றது தினமணி.

"ஸ்டாட்டிஸ்டிக்ஸ்."

"ஆயிரத்தில் ரெண்டு பேர் பல்பொடில பல் தேக்கறாங்கன்னு பேப்பர்ல போட்டுட்டா கண்டுப்பாங்களா! இல்ல ஆயிரத்தில் ரெண்டு பேர் கொலை பண்றாங்கன்னு!"

"செய்திங்கறது அச்சடித்த பொய்னு சொன்னாங்க. பேசும்போதே உண்மை பாதிக்கப்படுகிறது."

www.writersujatha.com

வசந்த் தன் பழைய சட்டையை எடுத்துக்கொண்டு பாத்ரூமுக்குப் போனான்.

"துணி தோய்க்க போறியா?"

"இல்ல பாஸ். போட்டுக்கப் போறேன்"–சட்டையை கரிசனத்துடன் பார்த்து, "அழுக்கா இருக்கா என்ன?"

"உனக்கே தெரியலையா? எத்தனை வாரமாடா ஒரு சட்டையைப் போட்டுப்ப. கோர்ட்டிலே சகிக்காம அட்ஜர்ன் பண்ணிட்டே இருக்காங்க. பனியன் போடறது வம்சத்திலேயே இல்லை!"

"அடுத்த வாரம் கண்டிப்பா மாத்திறேன் பாஸ். ஓயே ஓ...ஸாரி..."

அவன் பாத்ரூமுக்குள் செல்ல, ஒரு அப்பாவும் பெண்ணும் உள்ளே நுழைந்து காத்திருந்தார்கள். அவருக்கு அறுபது வயசிருக்கும். நரைத்த தலைமேல் நிறைய மயிரிருந்தது. வேஷ்டியும், முழங்கை வரை சட்டையும் போட்டு ஒரு கோலின்மேல் ஊன்றிக்கொண்டு உட்கார, இளம்பெண், "இவர்தான் போலிருக்கு அப்பா" என்றாள்.

"யாருங்க?" என்றான் கணேஷ்,

"கணேஷுங்கறது...?"

"நான்தான்."

"அப்பா, இவர்தான்..."

www.writersujatha.com

அவர் நிமிர, மெல்ல திரும்பியதிலிருந்து அவருக்குக் கண் பார்வை சரியில்லை என்பது தெரிந்தது. குரல் வந்த திசையில் பொதுவாக நோக்கி வணங்கினார். “வணக்கம். என் பேரு சதாசிவம். இவ ப்ரதிமா."

"ஹாய்" என்றாள். காலேஜ் போகிறவள்போல. கையில் நோட்டுப் புஸ்தகத்துடன் புதுசாக தலைவாரிக் கொண்டு, 'எத்னிக் சிக்' என்று சொல்கிறார்களே, அந்த வகையில் காவிக் கலரில் சொக்காயும், அதன் மேல் கிளிப் பச்சை மேல் துண்டும். காதில் நீலத்தில் ப்ளாஸ்டிக்கும் பொருத்தியிருந்தாள், சிரிக்கும்போது பல்லை நேராக்க க்ளிப் அணிந்திருந்தாலும், முகம் சதைப்பற்றாக ஆரோக்கியமாக இருந்தது. "நைஸ் மீட்டிங் யூ மிஸ்டர் கணேஷ்" ஆங்கிலத்தில் எத்திராஜ் தெரிந்தது.

"சிட்டவுன் ப்ரதிமா, என்ன வேணும், உங்களுக்கு?"

"இட் அபவுட் மை சிஸ்டர். மிஸ்டர் கணேஷ்! உங்களுக்கு அரைமணி இருக்குமா?"

"சொல்லுங்க. ஒம்பது மணிக்கு கிளம்பணும்" என்று கடிகாரத்தைப் பார்த்தான்.

"சொல்லுங்கப்பா" என்று அவர் புஜத்தை தொட்டாள். அவர் பையிலிருந்து செய்தித்தாள்களை எடுத்தார். கடந்த வருஷத்துக்கு பேப்பர் போல பழுப்பாக இருத்தது. செய்தித் துணுக்குகள் வெட்டப்பட்டு ஸ்டேப்பிள் அடித்திருந்தன. 'இளம் பெண் மரணம்' 'கேஸ் வெடித்து இளம் பெண் மரணம்.' 'தீ விபத்தில் வீட்டுப் பெண்மணி பலி."

அதில் தேர்ந்தெடுத்து "அகமதாபாத்தில் காந்திநகரில் ஐஸ்வர்யா ஃப்ளாட்டில் வாழ்ந்து வந்த திருமதி மகேந்திரன் (29) இன்று காலை சர்க்கார் ஆஸ்பத்திரியில் தீக்காயங்களுக்கு பலியானார். சமையலறையில் காஸ் வெடித்ததில் நிகழ்ந்த தீ விபத்தில் மரணம் சம்பவித்திருக்கிறது. விபத்து நிகழ்ந்தபோது கணவன் திரு.மகேந்திரன் ஐ.ஏ.ஸ். அலுவலகத்தில் இருந்தார்.

'திரு.மகேந்திரன் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். குஜராத் மாநில அரசில் டெபுட்டி செக்ரட்டரியாக இருப்பவர்...'

"மிஸஸ் மகேந்திரன்ங்கறது..."

"என் பெண். பேர் நாராயணி. இவளோட சிஸ்டர்."

"ஸாரி! காஸ் விஷயங்கள்ல கொஞ்சம் ஜாக்கிரதையா இருக்கணும். 'இண்டேன்'ல நிறைய விளம்பரம் பண்றாங்களே..."

"அது விபத்து இல்லை கணேஷ்" என்றான் ப்ரதிமா.

அப்போது வசந்த், "ஓயே...ஓயே" என்று பாடிக்கொண்டு வெளியே வந்தான். இடுப்பில் ஒரு டர்க்கிடவல் மட்டும். மார்பில் மொச மொசவென்று மயிர்த்தடாகம். சொட்டச் சொட்டத் தலைமயிர் 'ஊப்ஸ்' என்று மின்னலாக, பாத்ரூமுக்குள் மறைந்தான். 'பாஸ், சொல்லக் கூடாதா?"

"அவர்தான் வஸந்தா?"

"ஆமாம்."

"உங்களைப் பார்த்தா கேஸ் போடலாம்னு என் ப்ரெண்டு சாரங்கபாணி சொன்னார்" என்றார் பெரியவர்.

"என்ன கேஸ்?"

"எங்க ஐ.ஏ.எஸ். மாப்பிள்ளை மேல!"

"யு மீன்?"

"எங்கக்காவை கொலை செய்ததுக்கு."

"அவர் சம்பவத்தின்போது ஆபீஸ்ல இருக்கறதான்னா..."

"எல்லாம் பொய் கணேஷ்."

www.writersujatha.com

பெரியவர் அவன் பக்கம் திரும்ப, அவர் கண்களில் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. "கணேஷ் என் மகளைக் கொன்னுட்டாங்க கணேஷ். இட்ஸ் ஏ கான்ஸ்பிரஸி! பெரிய சதி."

"யாருடைய சதிங்கறிங்க?"

"கவர்மெண்ட், போலீஸ், எல்லோரும் சேர்ந்து... லுக் அட் திஸ் லெட்டர்."

கணேஷ் அந்தக் கடிதத்தைப் படித்தான்.

"அன்புள்ள அப்பாவுக்கு... இந்த நரகத்திலிருந்து என்னை முதன்முதலில் விடுவித்து அழைத்துச் செல்லுங்கள். நாளுக்கு நாள் மூன்று பேர் கொடுமையும் தாங்கவே முடியவில்லை. நாய்க்குக்கூட சரியாக சோறு போடுகிறார்கள். என்னைப் பட்டினி போடுகிறார்கள். எனக்குப் பைத்தியம் என்று டாக்டரிடம் அழைத்துப்போக திட்டமிட்டிருக்கிறார்கள்..." கணேஷ் நிமிர்ந்து இருவரையும் பார்த்தான்.

"மூணு பேர்ங்கறது..."

"கணவன், மாமனார், மாமியார்."

கணேஷ், பத்திரிகைச் செய்தியை மறுபடி புரட்டிப் பார்த்தான். "இன்ஸ்வெஸ்டிகேட் திருப்திகரமா நிறைவேறி, விபத்தால ஏற்பட்ட மரணம்னு முடிச்சிருக்காங்க. இது எப்ப நடந்தது?"

"போன வருஷம்."

"எரிச்சாங்களா? புதைச்சாங்களா?"

"நாங்க போறதுக்குள்ள எரிச்சாச்சு."

"கைல ஒரு பையன், மூணு வயது."

"க்ருயல்" என்றான் கணேஷ்.

வசந்த் இதற்குள் சட்டை மாற்றிக்கொண்டு புதுசா தலை சீவி வெளியே வந்து, "ஹாய். அதிகாலையிலே தரிசனம் கொடுத்ததுக்கு ஆயிரம் மன்னிப்புகள். நீங்கதானே ப்ரதிமா?"

"ஆமா. அட எப்படி என் பேர் தெரிந்தது?"

"ஒரு சித்தர் எனக்கு சித்தி சொல்லிக் கொடுத்திருக்கார்."

"இல்லைங்க. உங்க நோட்டை பாத்திருக்கான். நீங்க பார்க்கலை."

"பாஆஆஸ் ஊத்தாதீங்க! ஆமா, என்ன விஷயமா வந்திங்க?"

"ஏதாவது லிட்டிகேஷனா, வீட்டுத் தகராறா, இல்லை ரோட்டில போறப்ப..."

வசந்த் மேஜை மேல் வைத்திருந்த செய்திக் குறிப்புகளைப் படித்தான்.

"மிஸஸ் மகேந்திரன்ங்றது..."

www.writersujatha.com

"என் ஸிஸ்டர்."

"ஸாரி ஸாரி. காஸ் கம்பெனிய குடாஞ்சு காம்பன்சேஷன் கேட்டுரலாமா."

"இல்லை வசந்த், அவங்க இது விபத்தில்லைங்கறாங்க."

"பின் என்னவாம்?"

"மர்டர்."

"திஸ் இஸ் இண்ட்ரஸ்டிங். யாரு மகேந்திரனா? பாஸ்? இதுவரைக்கும் நாம் ஐ.ஏ.எஸ். ஆளுங்களோட மோதியிருக்கோமா?"

"சட்டத்துக்கு இந்தப் பக்கத்திலதான் அவங்களை சந்திச்சிருக்கோம்."

"வசந்த், அந்த ஃபாமிலில மூணு பேரும் ஜெயிலுக்குப் போகணும்!"

"அனுப்பிச்சுட்டா போச்சு."

"வசந்த்! இந்த லெட்டரைப் படிச்சுப் பாரு."

வசந்த் படித்துவிட்டு, "ச்ச்ச் உங்க தலையைத் தடவிக் கொடுத்து ஆறுதல் சொல்லணும் போல வரது, ப்ரதிமா. என்ன ஒரு கஷ்டகாலம். உயிரோட ஒரு அக்காவை பறி கொடுக்கறதுன்னா என்ன ஒரு அக்னி; என்ன ஒரு துக்கம், சோகம்"– என்று அவளருகில் செல்ல கணேஷ் முறைத்தான்.

ப்ரதிமா அழ ஆரம்பித்தாள்.

"அய்யோ... அழாதீங்க. ப்ளீஸ். அந்த ரூமுக்கு வாங்க. சமாதானமாயிடும். பாஸ், நீங்க தாத்தா கூட பேசிண்டிருங்க. நான் போய் ப்ரதிமாவுக்கு மூஞ்சி அலம்பிக்க பாத்ரூம் காட்டிட்டு வரேன்."

"ஸிட்டவுன் வசந்த்."

"ஸார், உங்க பேர் சொல்லையே?"

"நடேசன்."

"ஜமாய்ச்சுடலாம். பயப்படாதீங்க. கவலைப்படாதீங்க, அந்தாளை உள்ள தள்ளாட்டி இனி எனக்கு உறக்கமில்லை."

"என்ன ஜமாய்க்கலாம் சொல்லு வசந்த்."

"என்ன பாஸ்?"

"தி கேஸ் வாஸ் க்ளோஸ்ட். ஒரு வருஷமாச்சு கேஸ் க்ளோஸ் ஆயி."

"பத்து வருஷம்னாலும் ஓப்பன் பண்ணலாம். சின்னதா ரிட் போட்டுட்டு."

"என்னடா ஔர்றே. இப்ப குஜராத் ஐ கோர்ட்டிலயா?"

"வேண்டாம்" என்றாள் ப்ரதிமா. "நீங்க அவங்களை முதல்ல சந்திச்சு சில விஷயங்களை விசாரிக்கணும்."

"அதுபோதும்" என்றார்,

"குஜராத் போலாமா ஒரு நடை? வரிங்களா ப்ரதிமா?"

"தேவையில்லை. அவங்க இங்க இருக்காங்க" என்றாள் ப்ரதிமா.

www.writersujatha.com

## 2

மாருதியை ஒற்றைக் கையால் ஓட்டிக் கொண்டு, வசந்த் 'ஓயே ஓயே' பாடும் விருப்பத்தைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு, "சொல்லுங்க பேசாம வந்தா எப்படி? மௌனமா இருந்தா உங்க அழகு பயங்கரமா ஜாஸ்தி ஆயிட்டிருக்கு" என்றான்.

பின் சீட்டில் வீற்றிருந்த ப்ரதிமா, "நான் அவங்களைப் பார்க்க வரலை. வீட்டை மட்டும் காண்பிக்கிறேன். ஐ ஹேட் தெம்" என்றாள்.

"சேச்சே, நீங்க வராட்டா எப்படி? உண்மையை எப்போதும் சந்திக்கவும்னு மகாத்மா காந்தி சொல்லியிருக்கிறார்—இல்லை க்ருபானந்த வாரியாரா?"

"வரலை" என்று பலமாக தலையை ஆட்டினாள்.

"என்ன வரலை? மீட் யுவர் ப்ரதர் இன் லா டாக்ட் ஓவர்."

"முதல்ல நீ ரோட்டைப் பார்த்து ஓட்டு."

"பாஸ், நான் ரோடை பார்த்துதான் ஓட்டறேன்."

"இல்லை ரியர் வ்யு மிர்ரரை..."

சதாசிவம், "கணேஷ் நீங்க முதல்ல பார்த்துப் பேசுங்க. அப்புறம் தேவைப்பட்டா நாங்க சந்திக்கிறோம்" என்றார்.

www.writersujatha.com

"என்ன பேசணுங்கறிங்க?"

ப்ரதிமா சுருக்கமா, "கேஸ் போடப் போறோம்னு சொல்லிருங்க."

"கேஸ் எல்லாம் போட முடியாதுங்க. போலீஸ் கம்ப்ளெயிண்ட் கொடுக்கலாம்."

"அதுக்கு எதுக்கு நேர்ல சந்திக்கணும்?" என்றான் வசந்த்.

"கணேஷ்தானே சொன்னார்."

ஃபோர் ஷோர் எஸ்டேட்டில் தனிப்பட்ட ஃப்ளாட் வகை வீடுகளின் முன் நிறுத்த, "ஏ—செவன். நாங்க கார்லேயே காத்திருக்கோம்" என்றாள் ப்ரதிமா.

வசந்த், "காஸட் போடட்டுமா?" என்றான்.

"வேண்டாம், பாட்டு கேக்கற மூடில இல்லை."

அந்த ப்ளாட்டை அணுகும்போது, "பாஸ்! எதுக்காக நாம பார்க்கப் போறோம்? கொஞ்சம் கோடி காட்டுங்க."

"வசந்த் எல்லா கேஸ்லயும் ரெண்டு கட்சி இருக்கு. இரண்டாவது கட்சியையும் கேட்டுகிட்டுதான் இதை நாம எடுக்கறமான்னு முடிவு பண்ணணும்."

"ப்ரதிமாவோட கண்ணைப் பார்த்ததுமே முடிவு பண்ணிட்டேன் பாஸ்."

"கேஸ் என்னன்னு முழுசா தெரியாம?"

"தெரியவேண்டியதில்லை பாஸ். எப்போதும் நம்ம கட்சிக்காரன்தான் நியாயம்-- அமெரிக்கன் அப்ரோச்."

கதவை, ஒரு பத்து வயது சிறுமி வேலைக்காரிபோல் இருந்தாள்; திறந்தாள்.

"யாரு வேணும்?"

"மகேந்திரன்ங்கறது..."

"யாருப்பா?" என்று ஒரு பெரியவர் வந்தார்.

"மிஸ்டர் மகேந்திரனைப் பார்க்கணும்."

"குளிக்கிறோர். உள்ளே வாங்கோ, உட்காருங்கோ"

கணேஷும் வசந்தும் உள்ளே வர, ஃப்ளாட்டில் புதிதாகக் குடி வந்திருப்பதின் தற்காலிகம் தெரிந்தது. பார்சல்கள் பிரிக்காமல் இருக்க, டி.வி. பெட்டிக்கு ஆண்டென்னா கூடத்தில் படுத்திருந்தது. ஒரு நாய் வந்து வாலாட்டி விசாரித்துவிட்டு, யாரோ 'லூஸி' என்று அதட்ட உள்ளே மனம் மாறிப் போனது.#

"டாபர்மேன்" என்றார் பெரியவர்.

"என்ன சாப்படறீங்க, காஃபி?"

"இன்னும் செட்டில் ஆகலை, பல பார்ஸல் பிரிக்கலை. போன வாரம்தான் அகமதாபாத்திலிருந்து மாத்தி வந்திருக்கோம். ட்ரான்ஸிட் காம்ப் மாதிரி, இவன் போஸ்டிங் கூட இன்னும் க்ளியராகலை. டில்லிலருந்து செக்யூரிட்டி க்ளியரன்ஸ் வேணுமாம்."

லட்சுமிகரமாய் ஒரு பாட்டி வந்து எட்டிப் பார்த்துவிட்டுச் சென்றாள்.

கொஞ்ச நேரம் முழங்காலை இடுக்கிக் கொண்டு இருவரும் வீற்றிருக்க, அந்தப் பெண் காப்பி கொண்டு வந்து வைத்தாள். மூணு வயசுப் பையனை தாத்தா உள்ளேயிருந்து எடுத்து வந்து, "பாரு மாமாக்கு குட்மார்னிங் சொல்லு" என்றார்.

"குட்மார்னிங், மை நேம் ஈஸ் எம்.வினோத்" என்று அந்தக் குழந்தை ஒப்பித்தது.

"ரொம்ப சூட்டிகை. ஹி இஸ் மிஸ்ஸிங் ஹிஸ் மதர்"

"யாருப்பா?" என்று உள்ளே வந்த மகேந்திரன், பனியனுக்கு மேல் டர்க்கிஷ் டவல் போர்த்திக் கொண்டு முகத்தைத் துடைத்துக் கொண்டு அவர்களை அணுகினார்.

கணேஷ் எழுந்து, "மிஸ்டர் மகேந்திரன், ஐம் கணேஷ், திஸ் இஸ் வசந்த். எங்களை உங்களுக்கு..."

"தெரியும். லாயர்ஸ்."

"ஆமா."

"அப்பாவைப் பார்க்க வந்தேளா?" அப்பாவின் மூக்கு தப்பாமல் இருந்தது.

"இல்லை–உங்களைத்தான்."

கணேஷ் அவர் மார்பைப் பார்க்க, "ஸாரி, ஐல் வேர் சம்திங் டீஸண்ட் அண்ட் கம்."

உள்ளே சென்றதும்,

"பாஸ் இடத்தை பார்த்தா, சனங்களைப் பார்த்தா அப்படியொண்ணும் கொடுமைக்காரங்களா தெரியலையே."

அலமாரியில் போட்டோ அருகே பூ வைத்திருந்தது. சாயலில் ப்ரதிமா. "படம் வெச்சு வெள்ளிக்கிழமை பூப் போடறாங்க!"

மெலிதான நீல நிறத்தில் சட்டை அணிந்து, புன்னகையுடன் உள்ளே வந்த மகேந்திரனுக்கு முப்பத்து மூன்று வயதிருக்கும்.

மீசையில், புருவங்களின் சங்கமும் இன்னமும் இளைய தோற்றத்தை தந்தது. நாய் அவரை அணுகி காலடியில் வாலாட்டிக் கொண்டிருக்க, எதிரே உட்கார்ந்து களங்கமற்ற, தயக்கமற்ற கண்களுடன் இருவரையும் நேராகப் பார்த்தார். "சொல்லுங்கோ. என் மாமனார் அனுப்பிச்சாரா?"

"ஆமாம்."

"என்னவாம்?"

வசந்த் தயங்க, "கணேஷ், அவங்க சந்தேகப்படறாங்க இல்லையா?" என்றார்.

"ஆமாம்."

"நான் அப்பா அம்மா மூணு பேரும் சேர்ந்து சதி பண்ணி–இந்த நாயும் உண்டா? நாலு பேர் சதி பண்ணி நாராயணிய கொன்னுட்டமாமா?"

கணேஷ் பேச்சற்றிருக்க.

"அப்பா, அம்மா நீங்க வாங்கோ."

கணேஷ் இந்த நேரடியான வார்த்தைகளை எதிர்பார்க்கவில்லை. மகேந்திரனின் தந்தையும் தாயும் உள்ளே நுழைய "என்னப்பா எதுக்குக் கூப்ட்ட?"

"கொஞ்சம் இவங்க முன்னால் நில்லுங்கப்பா, அம்மா நீயும்தான்."

"கணேஷ். நீங்க ரொம்ப புத்திசாலின்னு கேள்விபமட்டிருக்கேன். உங்க காரியர்ல எவ்வளவோ பேரைச் சந்திச்சிருப்பீங்க. விதவிதமான கிரிமினல் மைண்ட்ஸை சொல்லுங்க, எங்க மூணு பேரையும் பாருங்க. எங்களை பார்த்தா பொண்ணை, சதி பண்ணி, தீர்மானிச்சு கொலை பண்றவங்க போலவா இருக்கு?"

கணேஷ் பிரமித்துப் போய் மூவரையும் பார்த்தான். அப்பாவின் முகத்தில் பச்சாதாபமும் பயமும் இருக்க அம்மா கண்களில் நீர் வடிய, "செல்லமா என் பொண்ணு மாதிரி வளர்த்தேன். வெள்ளிக்கிழமையும் அதுவுமா குளிச்சிரும்மான்னு சொன்னேன். ஹீட்டர் சரியால்லை. காஸ்ல வெந்நீர் போட்டுக்கறேன்னா, இந்த வினோத்."

"அம்மா சும்மாருக்கியா, பாருங்க கணேஷ், எதுக்காக, எதுக்காக நாங்க அவளைக் கொல்லணும்? நோ ரைம் ஆர் ரீஸன் எதுக்காக? என்ன லாபம்? எதுக்காகன்னு சொன்னாரா? தே ஆர் பகிங் அஸ். அந்த பொண்ணு போன் பண்றது–எங்கக்காவை கொன்னுட்டேன்னு எஸ்டிடிலே சொல்றது. திஸ் மான், திஸ் ப்ளைண்ட்கூட இஸ் இன் காரிஜிபிள். எதுக்காக நான் என் பெண்டாட்டியை கொல்லணும். என்ன அப்படி? சொத்தா? எதுக்காக சந்தோஷமா இருந்த வாழ்க்கையை நான் சேதப்படுத்தணும், பின்னப்படுத்தணும். ஏதாவது காரணம் இருக்கணுமில்லையா? லுக் மிஸ்டர் கணேஷ், ஷி வாஸ் எக்ஸ்ட்ரீம்லி ஹாப்பி வித் அஸ்."

கணேஷ், "சில லெட்டர்ஸ் காண்பிச்சார் சதாசிவம்"

"என்ன லெட்டர்ஸ்?"

"உங்க மனைவி அவருக்கு எழுதியது."

"என்னன்னு?"

"மூணு பேரும் கொடுமைப்படுத்தறதா"

அவர் ஆச்சரியப்பட்டு "நோ இட் காண்ட் பி. இட் இஸ் ஜஸ்ட் நாட் பாஸிபிள்."

இப்போது மகேந்திரன் கணேஷின் பார்வையைத் தவிர்த்தார்.

"அம்மா அந்த எம்ராய்டரியைக் கொண்டு காமி, நாணி போட்டாளே."

"அலமாரில இருக்கு"

அப்பா, அதை எடுத்துக் கொண்ட வந்து காண்பித்தார்.

"அப்பா, அம்மா மகே, வின்னு நாணி" என்று ஒரு பூவில் ஆறு இதழ்களில் எழுதியிருந்தது. "அப்பான்னுதான் கூப்பிடுவா என்னை."

"வாட் த மீனிங் ஆஃப் திஸ் கணேஷ்?"

கணேஷ், "ஃபாரங்க்ஸி ஐயம் கன்ஃப்யுஸ்டு" என்றான்.

"ஓல்டு மேன் சொல்றதையெல்லாம் அப்படியே நம்பாதிங்க. டிஸ்–பாஷனேட்டா பாருங்க. இட் வாஸ் அன் ஆக்ஸிடண்ட். ஐல் கிவ் யூ ஆல் தி ரிப்போர்ட்ஸ்."

"வேண்டாம், வேண்டாம், கேஸ் அடுப்பு வேண்டாம்னும் அடிச்சண்டேன்."

மகேந்திரன், "நீங்க என்ன ஆக்ஷன் வேணும்னாலும் எடுக்கலாம். திஸ் இஸ் எ ப்ரீ கண்ட்ரி. அந்த முட்டாள் பெண்ணிடம் சொல்லுங்கள். கண்டபடி போன் பண்ண வேண்டாம்னு–காலை ட்ரேஸ் பண்ண முடியும்னு. இந்த ஃபைல்ல எல்லாம் தேதி வாரியா இருக்கு. படிச்சுப் பார்த்துட்டு..."

"படிக்க வேண்டாம் ஸார். சில கேள்விகளுக்கு பதில் கிடைச்சா போதும்."

ஸாரி, எக்ஸ்க்யுஸ் மீ. எஸ்.ஏ. வரார் இன்னைக்கு. அதனால் ஞாயிற்றுக்கிழமை வாங்கோ சாவகாசமா நடந்தது என்னன்னு சொல்றேன்."

"சரி."

"அப்ப வரட்டுமா?"

"காப்பி சாப்பிடலையே!"

கணேஷும் வசந்தும் மௌனமாக காப்பி சாப்பிட மகேந்திரனின் அப்பாவை சிறுவன் வினோ கேட்டுக் கொண்டிருந்தான்.

"தாத்தா, அம்மா உம்மாச்சியை பார்க்க போயிருக்காதானே?"

"ஆமாண்டா கண்ணா. இப்ப வந்துருவா." அவன் வாயில் விரல் செருகிக்கொள்ள, வேலைக்காரப் பெண் அவனை வாங்கிக் கொள்ள, மகேந்திரன் அம்மா மூக்கு சிவந்து, "என் செல்லமே, கொஞ்சம் சாக்கிரதையா இருந்திருக்க கூடாதா? இந்த குடும்பத்தை எப்படிச் சமாளிக்கப் போறேன்? மலைப்பா இருக்கே."

கணேஷ் தன் கூலிங் க்ளாஸை மேஜையில் விட்டுவிட்டுப் புறப்பட்டான்.

## 3

**வ**சந்த் கார் கதவைத் திறந்து காத்திருந்தான். கணேஷ் வெளியே நின்றுக்கொண்டு கைக் கடிகாரத்தைப் பார்த்தான்.

"பாஸ், ராகுகாலம் பார்க்கிறீங்களா?"

"இல்லை வசந்த், கூலிங்கிளாஸை விட்டுட்டு வந்திருக்கேன்."

"போய் எடுத்துட்டு வரவா?"

"அதுக்கு முந்தி நம்மைப் பத்தி என்ன பேசிக்கிறாங்கன்னு..."

"ஒட்டு கேக்கணும். அவ்வளவுதான். ரத்தத்தில் பொறந்தாச்சே!"

கணேஷ் காத்திருக்க, ப்ரதிமா, "என்ன கணேஷ்?" என்றாள்.

"ஒண்ணுமில்லை சின்ன விஷயம்."

காரில் ஒரே திக்காகப் பார்த்துக் கொண்டிருந்த சதாசிவம், "என்னங்கறான் என் சம்பந்தி கோவிந்த ராஜன்?" என்றார்.



www.writersujatha.com

"எல்லாமே விபத்துன்னுதான் சொல்றார்!"

"அப்ப லெட்டர் எல்லாம் என்னவாம்?" என்றாள் ப்ரதிமா.

வசந்த் திரும்பி வந்தான்.

"என்னடா?"

"கூலிங்கிளாஸைப் பார்த்துட்டு ஸாரே கொடுக்க வந்திருக்கார்."

அவன் பின்னால் வந்த மகேந்திரன், "நல்லவேளை நீங்க கிளம்பலை. இங்கேயே இருந்திருக்கீங்க" என்றபடி கணேஷைப் பார்த்தார்.

அந்தப் பார்வையில் "உன் சாகசம் எனக்குத் தெரிந்துவிட்டது என்று சொல்லாமல் சொன்னார். "ஹலோ ப்ரதிமா!" என்று தன் மச்சினியைப் பார்த்துப் புன்னகைத்தார்.

ப்ரதிமா பேசவே இல்லை. முகத்தைக் கடுப்பாக வைத்துக் கொண்டு "கணேஷ் போகலாமா" என்றாள்.

"நீங்க எல்லாரும் எங்கமேல சந்தேகப்படறீங்கன்னு நெனைக்கிறேன், மாமா நீங்க கூடவா?"

சதாசிவம், "உன்னோட பேச விரும்பலை மகேந்திரா, என் பொண்ணை கொன்னவன் நீ?" என்றார் உதடுகள் துடிக்க.

"ஆ, கம் ஆன்! கணேஷ் நீங்க நாராயணியைப் பத்தி முழுக்க தெரிஞ்சுண்டு சந்தேகப்படுங்க."

"என்ன தெரிஞ்சிக்கணும்? ஸாரே ஒரு லிஸ்ட் கொடுத்துட்டார்."

"அவ சந்தோஷமாத்தான் இருந்தா. விபத்தில் செத்துப்போனா. இட் வாஸ் ஜஸ்ட் என் ஆக்ஸிடெண்ட் நத்திங் மோர். ப்ரதிமா, ப்ளீஸ் பிலீவ் மீ. ஸார் சதாசிவம் நீங்க இதைப் பெரிசு பண்றதுக்கு என்ன காரணம்னு எனக்கு வியப்பா இருக்கு."

கணேஷ் தீர்மானித்து, "மிஸ்டர் மகேந்திரன், நாம வார்த்தைகள்ல விளையாட வேண்டாம். இவங்ககிட்ட இருக்கிற உங்க மனைவி எழுதின கடிதங்களைப் படிச்சா எவருக்கும் சந்தேகம் வரும். அதில உங்களைப் பத்தியோ உங்க பெற்றோரைப் பத்தியோ அப்படி ஏதும் சிலாக்கியமா எழுதலை. இன்பாக்ட் அதை ஏதாவது பெண் போலீஸ் ஆபீஸர்கிட்ட காட்டினா சாப்பிட்ட கை கழுவாம அரஸ்ட் வாரண்டோட வருவாங்க."

"என்ன எழுதியிருந்தா?" என்றார் கவலை நிறைந்த முகத்துடன்.

"மூணு பேரும் சேர்ந்து அவளை ரொம்ப இல்ட்ரீட் பண்றதாகவும், அவளுக்குச் சித்தபிரமைன்னு சொல்லி ஆஸ்பத்திரியில அட்மிட் பண்ண முயற்சிக்கிறதாகவும் அதான் சொன்னனே..."

"ஸார் ரெண்டாவது கல்யாணம் பண்ணிக்கப் போறப்பல" என்றான் வசந்த் திடீரென்று.

"அது வந்து..."

வசந்த், "ஹால்ல இன்விடேஷன் பார்த்தேனே, ப்ரஸ்லருந்து வந்து கத்தை கத்தையா காத்திருக்கு."

"அப்படியா!" என்றான் கணேஷ் ஆச்சரியத்துடன்.

"மிஸ்டர் மகேந்திரன், இதையெல்லாம் ஒண்ணோட ஒண்ணு கூட்டிப் பார்த்தா பன்னிரண்டு வருது."

மகேந்திரன் மெல்ல அவனை அணுகி, "வசந்த், ஒரு ஆசாமி, பெண்டாட்டி இறந்து போனவுடன் ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்கிறது பெரிய குற்றமா?"

"பெண்டாட்டி நார்மலா செத்திருந்தா குற்றமே இல்லை!" என்றாள் ப்ரதிமா.

"அப்நார்மலா செத்திருந்தாகூட குற்றம் இல்லை" என்றான் கணேஷ். "இட்ஸ் யுவர் லைஃப்."

"எப்படி அவ அந்தக் கடிதம் எழுதியிருக்க முடியும்? அதனோட காப்பி தர்றீங்களா!"

"எதுக்கு?"

"அதை நான் பார்க்கணும். எங்களுக்குத் தெரியாம ஏதோ கற்பனை உலகில அவ இருந்திருக்கா."

"அவங்க சிஸ்டரை கேட்டா, அப்படி ஒண்ணும் கற்பனை உலகமில்லை என்கிறார். ரொம்பக் கடுப்புல இருக்காங்க, என்ன ப்ரதிமா?"

"ப்ரதிமா, உன்னை நான் தனியா சந்திக்க விரும்பறேன்."

"நான் விரும்பலை."

மகேந்திரன் அடிபட்ட பார்வையுடன், "ப்ளீஸ் உங்களுக்கு எப்படிப் புரிய வெக்கறது...?"

"முயற்சி பண்ணவேண்டாம். போகலாமா கணேஷ்!"

கணேஷ் காரில் உட்கார்ந்து கொள்ள வசந்த், "மறுபடி சந்திக்கலாம்" என்று புறப்பட்டான்.

மகேந்திரன், கிளம்பின காருடன் கூட நடந்து வந்து, "வசந்த் நீங்க என்னை நம்பவேண்டாம். எங்க பேரண்ட்ஸை நம்பறீங்களா?" வயசானவங்க பொய் சொல்லுவாங்களா? அவங்களோட ஒருநாள் சாவகாசமா பேசிப் பாருங்க. நடந்ததெல்லாம் சொல்லுவாங்க."

"மூணு பேரும் சேர்ந்துண்டுதாண்டா அவளைக் சொன்னீங்க!" என்றார் சதாசிவம். அவர் கைகள் இன்னும் நடுங்கிக் கொண்டிருந்தன.

கணேஷ், "சரி சார். வர்ற வெள்ளிக்கிழமை மறுபடி வர்றம்."

காரில் திரும்பிச் செல்லும்போது, "கணேஷ், இந்த ஆளைப்பத்தி என்ன நினைக்கிறீங்க?" என்றாள் ப்ரதிமா.

"எதுவும் நினைக்க முடியல. அப்பா அம்மாவையெல்லாம் பாத்தா சதி பண்ணி எதுவும் செய்திருப்பாங்கன்னு தோணலை."

"உங்களுக்குக் கோவிந்தராஜனைத் தெரியாது..."

"கடிதம்?"

"நீங்க ரெண்டு பேரும் சாயங்காலம் வந்துருங்க. அதுக்குள்ள மகேந்திரனைப் பத்திக் கொஞ்சம் தகவல் சேகரிக்க முடியுமா பாரு வசந்த்...ப்ரதிமா, வி ஆர் ஸ்டில் கன்ஃப்யூஸ்டு."

www.writersujatha.com

மாலைக்குள் வசந்த் நிறைய தகவல்கள் சேகரித்தே விட்டான்.

கையில் சின்னதாக ஒரு ரெமிமார்ட்டின், குண்டு டம்ளரில் கலக்கிக்கொண்டு குறிப்புப் புத்தகத்திலிருந்து வாசித்தளித்தான்.

"மகேந்திரன் குஜராத் கேடர். ஆமதாபாத்தில ஒரு ஸ்டேட் அண்டர் டேக்கிங்கில மானேஜிங் டைரக்டரா இருந்தவர். நிறைய பணப் புழக்கம் உள்ள போஸ்ட். அதில ரொம்ப நேர்மையா இருந்தவர்னு பேர் வாங்கியிருக்கார். அப்பழுக்கற்ற குணாதிசயங்கள். கெட்ட பழக்கங்கள் ஏதும் கிடையாது."

"எதுக்கு சென்னைக்கு வந்திருக்கார்?"

"அது கொஞ்சம் ரகசியமா இருக்குது பாஸ். நந்தம்பாக்கத்தில முகமில்லாத ஒரு சென்ட்ரல் கவர்மெண்ட் கட்டிடத்தில் என்னவோ ஸ்ட்ராட்டிஜி இன்ஸ்ட்யுட்ங்கறாங்க. அதில புதுசா போஸ்டிங்காகியிருக்கார்னு தோணுது."

"ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்க போறது யாரை?"

"ஆபீஸில அவருடைய அசிஸ்டெண்ட் ஒருத்திய. பேரு ரஞ்சனி ஷர்மாவாம்."

"வடக்கத்திக்காரி?"

"இப்ப ஷர்மான்னு பலபேர் வச்சுக்கறாங்க."

"அந்தப் பொண்ணை நாம சந்திக்க முடியுமா?"

www.writersujatha.com

"அதுக்கு முன்னாடி அந்த வீட்டு வேலைக்கார பொண்ணு இருக்குது பாருங்க. அதை கொஞ்சம் சாக்லேட் வாசனை காட்டி அழைச்சுட்டு வந்திருக்கேன். சசிகலா இங்க வா!"

வசந்தின் அசாதாரண ஏற்பாடுகளை வியக்குமுன் வேலைக்காரப் பெண் உள்ளே வந்து, "எதுக்காக வரச் சொன்னீங்களாம்..."

"அய்யாதான் வரச்சொன்னாரு. காசு கொடுக்கறன்னாங்க..."

"சொல்லு, சசிகலாவா நீ? பேர் நல்லாவே இருக்கு இன்னா வயசு உனக்கு?"

"எட்டுங்க."

"பள்ளிக்கூடம் போறியா? வளத்தியப் பாத்தா எட்டு வயசா தெரியலையே! வயசுக்கு வந்துட்டியா?"

"எனக்கு எட்டு வரைக்கும்தான் தெரியும்"

"ரிப்பனைக் கடிக்காதே, சீ! வந்து அய்யா வீட்டில எத்தனை நாளா வேலை செய்துகிட்டு வர்ற?"

"வின்னி பொறந்ததில இருந்துங்க. செங்கல்பட்லருந்து கூட்டியாந்தாங்க. அங்க போயிருந்தேன். ஆதாபாத்..."

"அகமதாபாத்?"

"ஆமாங்க."

"அந்தம்மா நாராயணியைப் பத்தி தெரியுமா?"

"தெரியுங்க. அவங்கதாங்க எனக்கு மாலைலாம் வாங்கிக் கொடுத்தாங்க."

"ஏன் எறந்து போனாங்க?"

அந்தப் பெண் கண்களை உருட்டி யோசித்து, "கேஸ் வெடிச்சுருச்சு" என்றது.

"அப்ப நீ இருந்தியா?"

"இல்லைங்க மார்க்கெட் போயிருந்தேன்."

"யார் போகச் சொன்னாங்க?"

"தாத்தாங்க."

"கெழவரா? சர்த்தான் பாஸ்"

"அவர்தான். 'சசிகலா, மார்க்கெட் போயி லிஸ்டில உள்ளதெல்லாம் வாங்கிட்டு வந்துருன்னாங்க. வரத்துக்குள்ள அம்மா செத்துட்டாங்க. டபார்னு வெடி சத்தம் மாதிரி கேட்டுதாம். பக்கத்து வீட்டு தாப்பா சொன்னான்."

"அந்தம்மாவும், அய்யாவும் சண்டை போட்டுப்பாங்களா?"

"போட்டுப்பாங்க. குலாவவும் குலாவுவாங்க."

"பாட்டி எப்படி?"

"பாட்டி நல்லவங்கதான். செலப்பதான்."

"மாமியாரும் மருமகளும் புகைஞ்சுப்பாங்களா?"

"வாக்குவாதம் பண்ணிப்பாங்க. மகேன் அய்யா இவங்களுக்கு சமாதானம் பண்ணுவாரு. தாத்தா வந்து பெரியம்மாவுக்கு சமாதானம் பண்ணுவாங்க."

"நகை பத்தி பேச்சு வருமா?"

"வருங்க."

"அம்மா உங்கிட்ட ஏதாவது சொல்லி அழுதிருக்காங்களா?"

"இல்லீங்க. தபால் எழுதி அவங்களுக்கு தெரியாம போட்டுட்டு வரச் சொல்லுவாங்க."

அப்போது வாசலில் ஆட்டோ ரிக்ஷா வந்து நிற்க, அதிலிருந்து இறங்கியவரைப் பார்த்து அந்தப் பெண் பேதலித்துப்போய், "அய்யோ! தாத்தாங்க, இவரையும் கூப்ட்ருக்கீங்களா?"

"இல்லையே" என்றான் வசந்த். "இலவசமா வந்திருக்காரு!"

உள்ளே வந்த கோவிந்தராஜன், "சரி! இங்க என்ன பண்ற நீ?"

அந்தப் பெண் நாக்கு உலர்ந்துபோய், "இந்த அய்யாதான் காசு தரேன்னு..."

அவர் வசந்தை முறைத்துப் பார்த்து, "மிஸ்டர் வசந்த்...திஸ் இஸ் வெரி பாட். அந்தப் பெண் ஏழைங்கறதனால அதை எக்ஸ்ப்ளாயிட் பண்ணி...ச்சே சேச்சே... உங்களுக்கு ஏதாவது விவரம் வேணும்னா நான் தர்றேன். இந்த மாதிரி வேலைக்கார பெண்ணுங்ககிட்ட ஸ்னீக் பண்றது நல்லாலை. சசிகலா, வீட்டுக்குப் போ!"

"அய்யா...அய்யா... என்னை மன்னிச்சிருங்க. அம்மாகிட்ட சொல்லாதீங்க. வீறிப்புடுவாங்க."

"நீ வீட்டுக்குப் போ முதல்ல."

அவள் செல்ல—வசந்த், "பொண்ணு இந்தப் பக்கம் போயிண்டு இருந்தது..."

"சும்மா பொய் சொல்லாதீங்க" என்றவர் நாற்காலியில் உட்கார்ந்தார்.

"நான் வந்த விஷயம் வேற. நாராயணி எழுதின இந்தக் கடிதங்களைப் பாருங்க" என்று மேசைமேல் சில கடிதங்களை வீசினார். வசந்த் அதில் ஒன்றை எடுத்து படிக்கத் துவங்கினான்.

"டார்லிங் பிரேம்..."

"சரிதான் பாஸ்...கதைக் கரு வலுக்கிறது."

## 4

"மைடியர் ப்ரேம், உன்னிடமிருந்து கடிதம் இல்லை. கல்யாணத்திற்குப் பிறகு என்னை மறந்தே விட்டாயா? அதற்கும் நம் நட்புக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. I find I cannot exist without you..."—வசந்த் நிமிர்ந்து, "பாஸ், கீட்ஸ்!" என்றான்.

"I cannot exist without poetryன்னான் கீட்ஸ்" என்று கணேஷ் திருத்த, கோவிந்தராஜன் வசந்தை முறைத்துப் பார்த்து, "என்ன சொல்றிங்க?" என்றார்.

"இந்தக் கடிதம் உங்க டாட்டர் இன்லா-- மறைந்த நாராயணி எழுதினதுங்கறிங்க—"

"ஆமாம். வேணும்னா ஒப்பிட்டு பாத்துக்கங்க."

"எதோட?"

"சதாசிவம்தான் அவளோட லெட்டர் எல்லாம் கொடுத்திருக்கானே."

கணேஷ் கடிதத்தை பார்த்து, "இந்தக் கடிதத்தை எங்ககிட்ட காட்டி என்ன தெரிவிக்க விரும்பறிங்க? இதற்கும் நாராயணியோட மரணத்துக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குதுங்கறிங்களா?"

"இல்லை. உண்மையை மேம்போக்கா பார்க்காதிங்க. துப்புரவா விசாரித்தா என்ன என்னவோ பாம்புங்கள்ளாம் வெளியே வரலாம்."

"ப்ரேம்கறது யாரு?"

"எனக்குத் தெரியாது...கவலையும் இல்லை. இறந்து போனவங்க அந்தரங்கத்தைக் குடையறது அநாகரிகமான செயல்."

"மெய்தான்."

கணேஷ், "மிஸ்டர் கோவிந்தராஜன்! நாங்க அனாவசியமா ஒருத்தர் மேல பழி போடமாட்டோம். கவலைப்படாம போங்க."

"ஷி வாஸ் வைல்டு" என்றார்.

"யாரு?"

"நாராயணி. என் மகனுக்கு ரொம்ப தொந்தரவு கொடுத்தா. கண்ட நேரத்தில கண்ட இடங்களுக்குப் போவா. காந்தி நகர்ல டிஸ்கோவோ என்னவோ சொல்றாங்களே அங்க ராத்திரி பன்னிரண்டு வரைக்கும்."

"காந்தி நகர்ல எங்க டிஸ்கோ இருக்கு ஸார்? ரீல் விடறிங்களே."

"வசந்த், அவர் சொல்றது அகமதாபாத் காந்தி நகர்"

"ஆமாம். திடீர்னு ஆசிரமத்துக்கு போவா. திடீர்னு ஜெ.கிருஷ்ணமூர்த்தி, திடீர்னு ஸ்காட்ச் பாட்டில் வெச்சுப்பா. அப்பா! அவகூட நாங்க பட்ட பாடு."

"அப்படின்னா தற்கொலை சாத்தியமும் இருக்கில்லை அவங்களே பத்த வெச்சிருக்கலாம். காஸ் அடுப்பை திறந்துட்டு இருக்கலாம்."

"ப்ரேம்ங்கறது யாரு? உங்களுக்குத் தெரியாது?"

"தெரியாது."

"ரஞ்சனி ஷர்மா?"

அவர் திடுக்கிட்டு, "கேள்விபட்ட பேரா இருக்கு" என்றார்.

"உங்க மகனோட ஆபீஸ்ல அஸிஸ்டண்டு. அவளைத்தான் அவர் கல்யாணம் செய்துக்கப்போறதா ஒரு கிசு."

"பொய்."

"இருக்கலாம். அப்ப..." கிளம்பறிங்களா என்று சொல்லாமல் சொன்னான்.

"போறதுக்கு முன்னாடி, கண்ணாடி அறையில் கல்லெறியறதுக்கு உண்டான சாக்கிரதை வேணும் உங்களுக்கு. அவ்வளவுதான் சொல்ல வந்தேன்."

"நல்ல உதாரணம். ராத்திரி பூரா சிந்தனையில என்னை ஆழ்த்த போறது. வாங்க."

www.writersujatha.com

அவர் போனதும் கணேஷ், "வாட்டு யூ மேக் ஆஃம் இட்?"

"எதையோ மறைக்க விரும்புறாங்க."

"எதை?"

"பாஸ், தாத்தாவையும் பாட்டியையும் பார்த்தா முதல் இம்ப்ரெஷன் நாட் கில்ட்டி."

"இந்தக் கடிதத்தையும் சதாசிவம் காட்டின கடிதத்தையும் ஒப்பிட்டுப் பார்த்துட்டா போவுது."

"அந்தக் கடிதங்கள் இருக்குதா?"

"இல்ல பாஸ். ஒரு நடை எத்திராஜ் போய்ட்டு வாங்கி வந்துர்றேன்."

"சரி வா போகலாம்."

"அய்யய்யே... நீங்க எதுக்கு? உங்களுக்கு ரொம்ப ஜோலி இருக்கு."

"அந்த ஜோலிகள்ள ஒண்ணு வசந்த் காலேஜ் வாசல்கள்ள மிஸ் பிஹேவ் பண்ணாம பார்த்துக்கறதும்தான்."

"ரொம்ப கடிப்பிங்க பாஸ். என்னை பார்த்தா யாராவது பொம்பளை பொறுக்கின்னு சொல்வாங்களா?"

"சொல்ல மாட்டாங்க. அதான் டேஞ்சர்."

"என்னவோ நுங்கம்பாக்கம் ஏரியாவே க.பா.செ. மாதிரி."

www.writersujatha.com

கணேஷ் அவனை முறைத்துப் பார்த்தபோது, "கற்பு பாதுகாப்பு செயலாளர்னு. பாஸ், உங்களுக்கு சேஃப்டி பெல்ட்டுன்னா என்னான்னு தெரியுமா?"

"வாடா, எனக்கு இரண்யா பெல்ட்டுதான் தெரியும்."

வசந்த் காரில் பிங்க் ஃப்ளாய்டு போட்டு அலறவைக்க கணேஷ் அதைக் குறைத்தான். "என்னடா பாட்டு இதெல்லாம்?"

"உங்களுக்கு பூச்சி சீனிவாச ஐயங்கார்னாதான் பிடிக்கும். அவாள்ளாம் காஸட் யுகம் வரதுக்குள்ளேயே மறைந்து போய்ட்டா, நல்லவேளை."

கணேஷ் எத்திராஜ் வாசலில் காரை நிறுத்த, மலர்க் கொத்துபோல பெண்கள் க்ளாஸ்விட்டு வெளியே சிதறிக் கொண்டிருந்தார்கள்.

"பாஸ்! கதம்பவனம், டுட்டி, ஃப்ருட்டி, ஜிஜிபி..."

"என்னடா ட்ரஸ்ஸு. சாஸ்திரிகள் பஞ்ச கச்சம் மாதிரியா..."

"அமெரிக்கால இப்ப என்ன தெரியுமா லேட்டஸ்ட், மேல சல்வார். கீழ ஸ்கர்ட்டு."

"இவாள்ள ப்ரதிமாவை எப்படிக் கண்டுபிடிக்கிறது."

வசந்த் காரைவிட்டு இறங்கி ஒரு பெண்ணை தேர்ந்தெடுத்து, "எக்ஸ்க்யூஸ் மி" என்றான்.

அவள் திரும்பிப் பார்த்து, "ஷவ் ஆஃப்" என்றாள் தோழிகளைப் பார்த்துச் சிரித்து, மறுபக்கம் கடந்தாள்.

"வாட்டர் வாட்டர் எவ்ரி வேர்னு காலரிஜ் ஏன் சொன்னான்னு இப்பதாம் பாஸ் புரியுது."

"லுக் ஃபார் ப்ரதிமா."

"ஒருத்தரும் பேசமாட்டேங்கறாங்க. பார்த்த உடனே ஒரு மாதிரி ஆய்ட்றாங்க. காதல்னால பேச்சே நின்று போய்டறது!"

"கிலியாகவும் இருக்கும். கண்ணாலேயே உரிச்சுருவியே நீ."

"இல்லை பாஸ், கன்னுக்குட்டி மாதிரி பார்த்துண்டுதான் கேக்கறேன்."

கணேஷ் இறங்கி, "மிஸ் லுக்கிங் ஃபார் ஒன் ப்ரதிமா."

அந்தப் பெண் புன்னகைத்து, "எந்த கோர்ஸ்?" என்றாள்.

வசந்த், 'இத பார்றா நான் கேட்டா எடக்கு, பாஸ் கேட்டா புன்னகை. எல்லாம் மச்சம்' என்று முணுமுணுத்தபடி, "பிகாம் பாஸ்" என்றான்.

"எந்த இயர்?"

"தர்ட் இயர்னு நெனைக்கிறேன்."

"ப்ரதிமா, ப்ரதிமா ஈவினிங் கிளாஸா?"

"ஏன்?"

'–ஈவினிங் கிளாஸ்னா அந்த கோஷ்டியில இருக்க மாட்டாங்க."

"உங்க பேர் என்ன?" என்றான் வசந்த்.

"ப்ரதிமா."

"வாட் எ கோயின் ஸிடன்ஸ், உங்க பேரு?" என்ற மற்றொரு பெண்ணைக் கேட்க, அவளும் ப்ரதிமா என்றபடி "வாட் எ கோயின்ஸிடன்" என, அவர்கள் அனைவரும் சிரிக்க, "வார்றிங்களே" என்றான் வசந்த். அப்போது நிஜ ப்ரதிமா வருவதை கணேஷ் அடையாளம் கண்டுகொண்டு ஹார்ன் அடிக்க, அவள் வந்து, 'ஹலோ வசந்த்! எங்க வந்தீங்க? கேர்ள்ஸ்! திஸ் இஸ் தி ஃபேமஸ் வசந்த்."

"இந்தப் பேட்டையில எல்லாரும் ப்ரதிமாவா?"

"டோண்ட் மைண்ட் தெம். இப்பல்லாம் காலேஜ் பொண்ணுங்க பழைய மாதிரி இல்லை."

"தெரியுது. சுளுக்கு எடுத்து விட்டுருவாங்க போல இருக்கு. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வுன்னு சொன்னாப்பல, சேர்ந்துட்டா பயங்கரம். இருந்தாலும் இவங்களை ஒண்ணு கேக்க விரும்பறேன்..."

ப்ரதிமா பின் ஸீட்டில் ஏறிக்கொள்ள, "ஸீயு கர்ள்ஸ்" என்றான்.

"ஸியு வசந்த். உங்களை பார்த்த உடனே என்ன ஆச்சு தெரியுமா எங்களுக்கெல்லாம்?"

"பாத்ரூம் போகணும் போல ஆய்டுத்தும்பிங்க. ஆளைவிடுங்க. ஹோப் யு ஹாவ் எ நைஸ் மோஷன்."

ப்ரதிமா வசந்தையே கண் கொட்டாது பார்த்து, "அவங்களையெல்லாம் தனியா சந்திச்சா காப்ரா ஆய்டுவாங்க."

"சந்திக்காமயா போறேன்! அந்தப் புள்ளி புள்ளி, யெல்லோ ஷர்ட்டை பொட்லமா மடக்கி முத்தம் கொடுக்கலைன்னா எம் பேரு வசந்த் இல்லை."

"ப்ரதிமா, அந்தக் கடிதங்களை மறுபடி பார்க்கணும்."

"வீட்டில இருக்கு. வரிங்களா?"

"வந்தா போச்சு. இதைப் பாருங்க" என்று கோவிந்தராஜன் கொடுத்த கடிதத்தைக் காட்டினான்.

அதை அவள் படித்து சற்று அச்சத்துடன் நிமிர்ந்து "யார் அந்த பிரேம்?"

"உங்களைக் கேக்கலாம்னு வந்தோம்."

"இதை கோவிந்தராஜன் கொண்டு வந்து கொடுத்தாரா?"

"ஆமாம்"

"இதில இருக்கறது உங்க அக்கா கையெழுத்தா?"

ப்ரதிமா பார்த்து சற்றே கலவரத்துடன், "அப்படித்தான் தோணறது. யார் இந்த பிரேம்?"

"பார்த்தா லவ் லெட்டர் மாதிரி இருக்கு."

"சே! நாராயணியா."

கணேஷ் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தவன் காரைக் கிளப்பி பெண்களின் ஊடே ஹார்ன் அடித்தான்.

"ஹாய் வஸந்த்" என்று அந்த மஞ்சள் உடைக்காரி கையை அசைத்தாள்.

"ஹாய் கிளியோபாட்ரா. சரியான சிகாடி!"

"இதைப் பார்த்தா ஒரு லவ் லெட்டர் மாதிரித்தான் இருக்குது."

"ப்ரதிமா உங்க சிஸ்டரை உங்களுக்கு முழுக்க தெரியுமா?"

"ஏன்?"

"கல்யாணம் ஆனப்பறம் அவங்க வீட்டில நடந்த சம்பவங்கள் அனைத்துமே உங்களுக்கு எழுதியிருக்காங்களா? வஸந்த், கவனிக்கிறியா?"

"சரியான சாலு மால் பாஸ். ஆகஸ்ட்டு பதினஞ்சு, என்ன சொல்ல வந்தீங்க?"

"சொல்லுங்க ப்ரதிமா. உங்க சிஸ்டரை எவ்வளவு தூரம் உத்திரவாதமாக, கணவருக்கு ஃபெய்த்ஃபுல்லா இருந்தாங்கன்னு சொல்ல முடியுமா?"

ப்ரதிமா பதில் சொல்லவில்லை.

"இந்தக் கடிதம்..."

"இது எனக்கு விந்தையாகத்தான் இருக்கு."

"கேஸ் போடவோ, ரிட் போடவோ எங்களுக்குத் தயக்கமில்லை. ஆனா இதெல்லாம் டபுள் எட்ஜ் வெப்பன்பாங்களே அதுமாதிரி. நாம புரளியைக் கிளப்பினா அவங்களும் இந்த மாதிரி கிளம்புவாங்க தயாரா?"

"இது ஒண்ணுதான் கடிதமா?"

"சொல்லலை அவர். நிறையவும் இருக்கலாம். வார்ன் பண்ணிட்டு போனார்."

"என்னன்னு?"

"கண்ணாடி அறையிலே இருந்து கல்லெறியாதேன்னு."

அவள் தயங்கி, "அப்பாவை கேட்டுரலாம்" என்றாள்.

"அதான் உத்தமம். கொஞ்சம் ஆடிட்டேன். எத்திராஜ் பொண்ணுகளைப் பார்த்து கல்தாயிடுத்து. அத்தனையும் மல்ட்டி!"

"வசந்த், என்னடா பரிபாஷை இதெல்லாம்?"

"நான் சொல்றேன்" என்றாள் ப்ரதிமா.

"மல்ட்டி, காரமால், ஜிஜீபி எல்லாம் பல்வேறு பெண்களைக் குறிக்கும் பெயர்கள்."

"காப்பி!"

"கிடைக்கும். வாங்க. நான்கூட எத்திராஜ்தான் வாங்க."

ப்ரதிமாவின் வீட்டை அடைந்தபோது வாசலில் கூட்டமாக இருந்தது.

# 5

அவர்கள் போய்ச் சேர்ந்தபோது வீட்டு வாசலில் கூட்டமாக இருந்தது. ப்ரதிமா பதற்றத்துடன், "அப்பாவுக்கு என்னவோ ஆய்டுத்து வஸந்த்!" என்றாள். வசந்த் அவள் கையைப் பற்றிக் கொண்டு, "டேக் இட் ஈஸி! டேக் இட் ஈஸி!" என்றபடி புறாவைப் போல கையைத் தடவிக் கொடுத்தான்.

கணேஷ் காரை விட்டு இறங்கி வர வீட்டு வாசலில் சதாசிவம் அபத்தமாக உட்கார்ந்திருந்தார். அவருக்கு ஆசுவாசப்படுத்தி யாரோ காப்பி கொடுத்துக் கொண்டிருக்க இன்னொரு யாரோ விசிறிக் கொண்டிருந்தார்.

"என்ன ஸார் ஆச்சு, சதாசிவம்?" குரல்களைக் கேட்டதும் சதாசிவம், "வா கணேஷ், வா ப்ரதிமா! ஏன் லேட்டு?"

"என்ன ஆச்சு பா? அப்பா என்ன ஆச்சு?"

"என்னைக் கொல்லப் பார்த்தான் அவன்."

"எவன்?" என்றான் வஸந்த். ப்ரதிமாவை இதுதான் சாக்கு என்று அணைத்துக்கொண்டு. "இந்தச் சமயத்தில் ப்ரதிமா, நீங்க பதட்டப்படவே கூடாது. அண்டர்ஸ்டாண்ட்!"

"எல்லாம் என் மாப்பிள்ளை அனுப்பிச்சது. நாராயணி புருஷன் ஐ.ஏ.எஸ். கிராதகன்! என்னைக் கொன்னுட்டா போதுமா? உண்மையைக் கொல்ல முடியுமா கணேஷ்."

"என்ன நடந்ததுன்னு விவரமா சொல்லுப்பா!"

"ப்ரதிமா. வாங்க ரெஸ்ட் எடுத்துக்கலாம்."

"இரு வஸந்த்!" என்று கையைப் பிடுங்கிக் கொண்டாள்.

சதாசிவம் மெல்லச் சொன்னார். "நானே காப்பி போட்டுண்டு டபரா டம்ளரோட ஹால்ல வரேன். யுஜிஸி ப்ரொக்ராம் டிவில போட்டு கேட்டுண்டிருப்பேன்! ஜன்னல்ல சப்தம் கேட்டது. யாரு யாருன்னு கேக்கறேன் பதில் இல்லை. சட்டுன்னு வாக்கிங் ஸ்டிக்கை எடுத்து தயாரா நீட்டிண்டு நிக்கறேன். அவன் பின்பக்கமா வந்து கழுத்தை மூச்சுத் திணர்ற மாதிரி நெருக்கினான்."

"இதுக்கு முன்ன கேட்டிருக்கீங்களா அவன் குரலை?"

"இல்லை. பின்பக்கத்திலிருந்து தாக்கி நெரிக்கிறான். அப்படியே ரத்தம் செத்துப் போய் அரை மயக்கமாயிட்டேன்."

"ஏதாவது பேசினானா."

"ஆமாம். காதுங்கிட்ட... 'ஏய் பொட்டைக் கிழவா. கேஸ் போடப் போறியா மாப்பிள்ளை மேல. உம் பொண்ணு வண்டவாளத்தை அவுத்துவிடட்டுமா?"ன்னும் அதுக்கப்புறம் ஞாபகமே இல்லை. மயக்கம் மாதிரி வந்துடுத்து. கொஞ்ச நேரம் விட்டு, நினைப்பு வந்ததும் சட்டை கிழிஞ்சிருக்கிறதைப் பார்த்தேன்... கீழவந்தேன். இன்னும் கொஞ்சம் தண்ணி ப்ரதிமா! ப்ரதிமா வேண்டாம் போதும். கேஸ் ஏதும் வேண்டாம். அந்தக் கிராதகப் பய என்ன அநியாயம் வேணும்னாலும் செய்யத் தயாரா இருக்கான் ப்ரதிமா!"

ப்ரதிமா, "அப்பா, சும்மா அப்படியே விட்டுட்டா எப்படி?" என்று அவரைக் கைத்தாங்கலாக அழைத்துச் செல்ல... "எதுக்கு வாசல் கதவைத் திறந்து வெச்சுக்கறீங்க! நான் போறப்ப சொன்னேனா இல்லையா? மகேந்திரன் எதுவும் செய்ய துணிஞ்சவன்னுட்டு."

"நான் இப்படி இதை எதிர்பார்க்கலை ப்ரதிமா! ஒரு குருடனை இந்த மாதிரி தாக்கறது எத்தனை கோழைத்தனம்!"

அவர்கள் வீட்டுக்குள் நுழைய, வஸந்த் சுற்றிலும் பார்த்துக்கொண்டே பின்தொடர்ந்தான். "போங்கப்பா, போங்கப்பா; வேடிக்கை பார்க்கவா வந்தீங்க? போங்க! தி ஷோ இஸ் ஓவர்!"

உள்ளே சதாசிவம் நாற்காலியில் உட்கார்ந்து பிரமிப்பாக ஒரே திசையில் பார்த்துக் கொண்டிருந்தார். "வண்டவாளம்னு வார்த்தையை உபயோகப்படுத்தியிருக்கானா ஸார்?" என்றான் வஸந்த்.

"அப்படித்தான் ஞாபகம். ஏன்?"

"அதிலிருந்து கண்டுபிடிச்சுரலாம்."

"அப்படியா?"

"இல்லை ஸார். புருடா விடறான். நான் இதைப் பத்தி ஒரு போலீஸ் கம்ப்ளையிண்ட் கொடுக்கவா!"

"வேண்டாம் கணேஷ்!"

"ஏன்?"

"என்னை அடிக்கடி கூப்பிட்டு உயிரை வாங்குவாங்க. என் மாப்பிள்ளை ஐ.ஏ.எஸ். அதிகாரி. அரசாங்க உபத்திரவம் நிறைய ஏற்படுத்தக் கூடியவன்."

"இந்த ஏரியா ப்யூஸை பிடுங்கிட்டான் நேற்றிக்கு!" என்றாள் ப்ரதிமா.

"அப்படியா?" என்றான் கணேஷ்.

"ஜெனரேட்டர் ஒண்ணு வாங்கிண்டுர்றது நல்லது. கரண்ட் எப்ப வேணும்னாலும் போகலாம்."

"வஸந்த் இப்ப ஜெனரேட்டரைப் பற்றியா பேச்சு."

"இல்லை பாஸ். என்ன செய்யணும் சொல்லுங்க."

'முதல்ல ஒரு பெட்டிஷன் தயார் பண்ணு. டீட்டெய்ல்ஸ் வாங்கிண்டு. நாராயணியின் மரணம் பற்றிய கேஸை மறுபரிசீலனை செய்ய."

"காரணம்."

"புதிதாகக் கிடைத்த தகவல்கள்."

"ஏதாவது பத்திரிகையில இதைப்பத்தி ஒரு ஆர்ட்டிக்கல் போடச் சொல்லலாமே."

"இப்ப வேண்டாம்" என்றார் சதாசிவம்.

"அப்பா ரொம்ப கலங்கி போயிருக்கார்."

"ஏதாவது சூடா சாப்பிடக் கொடுங்க! நான் வேணா வாங்கிண்டு வரவா? சோமாசி ஏதாவது..."

"வேண்டாம்."

www.writersujatha.com

"அப்ப நான் வரட்டுமா" என்றான் கணேஷ்.

"ஓகே பாஸ், போயிட்டு வாங்க. நான் மற்றதெல்லாம் துப்புரவா விசாரிச்சுட்டு..."

"வஸந்த், நீயும் வர்ற!" என்றான் கணேஷ் உறுதியாக.

"கில் ஜாய்!" என்று அவளை ஒருமுறை விரலால் சுட்டுவிட்டு, "அப்ப ப்ரதிமா, மறுபடி எப்ப சந்திக்கலாம்? கேஸ் விஷயமா உங்ககிட்ட விவரமா பேசியே ஆகணும்."

சதாசிவம், "கேஸ் வேண்டாம்" என்றார்.

"சேச்சே, இதுக்கெல்லாம் பயப்படாதீங்க. இப்படித்தான் ஒரு சாமியார் கேஸ்ல எங்க ரெண்டு பேத்தையும் பிரகலாதன் மாதிரி மலையிலிருந்து உருட்டி விட்டாங்க. இல்லை பாஸ்?"

"இல்லை! வா! ப்ரதிமா, உங்க சிஸ்டர் எழுதின கடிதங்கள் வேணும்."

ப்ரதிமா கடிதங்களைக் கொடுத்துவிட்டு "நான் போன் பண்றேன் கணேஷ். பை வஸந்த்!"

"இந்தக் கேஸை எடுத்தே ஆகணும் பாஸ்" என்றான் மாருதியைக் கிளப்பிக்கொண்டே.

"அவங்க முதல்ல தீர்மானிக்கட்டும்!"

"என்ன ஒரு கிராதகத்தனம் பார்த்தீர்களா! கழுத்தெல்லாம் நீலம் பாரிச்சிருந்தது. அப்படி அழுத்தியிருக்கான்!"

கணேஷ் சற்றுநேரம் சிந்தனையிலிருந்தான். "வஸந்த் அந்த வீட்டில லேடி யார் யார் இருக்காங்க?"

www.writersujatha.com

"கவனிக்கலை."

"நீ என்ன கவனிச்சிட்டிருந்தேன்னு எனக்குத் தெரியும்."

"பாஸ், ஐம் இன் லவ்!" என்று கழுத்தைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

"எத்தனாவது முறை இது?"

"திஸ் டைம் இட்ஸ் ரியலி பாஸ். அவ கையை என் கைக்குள்ள பத்திரப்படுத்தினபோது அப்படியே என் இதயம் தபால் புறா மாதிரி அடிச்சுண்டுது. காது நுனியெல்லாம் சிவந்து சூடாயிடுத்து; க்ளுக்கோஸ் இன்ஜெக்ஷன் மாதிரி."

கணேஷ் மௌனமாக இருக்க, "இதுக்கெல்லாம் என்ன அர்த்தம்."

"உடம்பு சரியில்லை. டாக்டர்கிட்ட காட்டுன்னு அர்த்தம்."

"இல்லை பாஸ். இது காதல்தான் காரண்டி. அந்த ப்ரதிமாங்கற ராக தேவதை! பனி நாள் தென்றல்!"

"அதிகமா சினிமாப் பாட்டு கேக்கறே! அச்சா...இப்ப என்ன பண்றே எனக்கு...மூணு ப்ரஸிடெண்ட் தேவைப்படுது. நம்ம நாகார்ஜூன் வர்ஸஸ் அபிராமி இண்டஸ்ட்ரீஸ் கேஸ்..."

www.writersujatha.com

"அது ஊத்திடுச்சு பாஸ்!"

"ஏன்?"

"ப்ரஸிடெண்ட்டே இல்லை."

"கமான் வஸந்த். நீ பார்க்காம பேசாதே! எட்டு ஒன்பது ப்ரஸிடெண்ட் இருக்கு!"

வஸந்த் மௌனமாக இருக்க, "உன் மனசு எங்கேயோ அலையுது."

"எங்கேயும் இல்லை. 'அண்மையில் பார்த்த பெண்மையினால் ஆயிரம் விளக்குகள் மனத்தினிலேன்னு பாரதி சொன்னாப்பல..."

"பொய். பாரதி அப்படி ஏதும் எழுதவே இல்லை. கவிஞர் வசந்த் பாரதி!"

மாலை கணேஷ் எம்ஸிஸி சென்று ஒரு பாட்டம் ஸ்க்வாஷ் ஆடிவிட்டு, ஃபூல் பக்கத்தில் பிரம்பு நாற்காலியில் பனியன் டிராயருடன் உட்கார்ந்திருக்க, வசந்த் ரம்மியில் பாயிண்டுக்கு பத்து ரூபாய், மிடில் கவுண்ட் ஐநூறு ஃபுல் கவுண்ட் ஆயிரம் என்று ஆடிக்கொண்டிருந்தவன் சற்று தூரத்தில் ஒரு பெண் அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தான்.

ஒன் மினிட் என்று சீட்டு மேடையை விட்டு விலகி அவளிடம் நேராகச் சென்று, "ஹலோ ஐயம் வசந்த்."

"ஹலோ!" என்று அவன் நீட்டின கையை மறுத்தாள்.

"ரொம்ப நேரம் என்னையே வச்ச கண் வாங்காம பார்த்துக்கிட்டு இருந்தீங்க. அதான் என்ன விஷயம்னு விசாரிக்கலாம்னுட்டு..."

www.writersujatha.com

"மை நேம் இஸ் ரஞ்சனி ஷர்மா!"

"ரஞ்சனி ஷர்மா. இருங்க. கேட்ட பேரா இருக்கு. மனசுக்குள்ள சின்னதா ஒரு மணி அடிக்குது ரஞ்சனி...ரஞ்சனி" கையைச் சொடக்கி "காட் இட்! நீங்கதான் மகேந்திரன் ஐ.ஏ.எஸ்.ஸை மறுமணக்கப் போறவங்க!"

"ஆமாம். எப்படித் தெரியும்?"

"இட்சிணி வேலை எனக்கு சின்னப் பிள்ளைலேர்ந்தே பழக்கம். சொல்லுங்க என்ன விஷயமா என்னை பாத்துக்கிட்டிருக்கீங்க. அவ்வளவு கவர்ச்சிகரமாவா இருக்கேன்?"

"வஸந்த். ஐம் இன் ட்ரபிள்" என்றாள். கரும்பச்சை நிறத்தில் ஷிஃபான் ஜார்ஜெட் அவள் தோளிலிருந்து நழுவ தயாராக இருந்தது. சின்ன மார்பகங்களின் பிரிவில் சன்னமான தங்கச்சங்கிலி தன் டாலரை இழந்திருந்தது.

"ட்ரபிள் இஸ் மை செகண்ட் நேம். சொல்லுங்க!"

"இந்தக் கல்யாணத்துக்கு ஏன்தான் சம்மதிச்சோம்னு கவலையா இருக்கு?"

"ஏன்?"

"மகேந்திரன் மேல நீங்க கேஸ் போடப் போறீங்களாமே! கேள்விப்பட்டேன்."

"ஆமாம். முதல் மனைவியைக் கொன்னதாக?"

"கொன்னாரா?"

"சரியா சொல்ல முடியலை?"

அவள் உதடுகள் சின்னச் சின்ன பவழம் போல இருந்தன. இருக்கிற அழகுக்கு நேர்த்தியான அலங்காரத்தால் மிகைப்படுத்தியிருந்தாள். விரல்களிலும் உடலின் பளபளப்பிலும் படு கவனம் தெரிந்தது.

"உங்களைப் பார்த்தா பாரத் சர்க்கார் ஆபீஸ்ல வேலை செய்யற ஜாதியா தெரியலை. விமல் விளம்பரத்தை கால்மணிக்கு முன்னாலதான் முடிச்சாப்பல இருக்கீங்க!"

"ஆபீஸ்ல வேற மாதிரி ட்ரஸ்!"

"பாருங்க மிஸ். ரஞ்சனி...மிஸ்ஸா மிஸஸ்ஸா?"

"மிஸ்தான்?"

"பாருங்க. சுற்றுப்புற சாட்சிகளைப் பார்த்தா நாராயணி இறந்த விதம் ஒரு விபத்து இல்லைன்னு நினைக்க வெக்கறது."

"அப்படியா?" என்று குரல் நடுங்க கேட்டாள்.

"உங்களுக்கு எப்படித் தோணுது?"

"நாராயணி மனசு சரியில்லாத கொஞ்ச எர்ராட்டிக்கான பெண். கண்ட வேளையில வருவாங்க. கண்ட சினேகிதம் வெச்சிருந்தாங்க! இப்படியெல்லாம் சொன்னார். எவ்வளவு தூரம் உண்மைன்னு சொல்ல முடியலை. அவரைப் பார்த்தா பரிதாபமாத்தான் இருந்தது. ஹி இஸ் லோன்லி மேன்."

"நாராயணி எழுதின கடிதங்களைக் காட்டினார் பெரியவர். அதில ப்ரேம்னு யாருக்கோ எழுதியிருந்தாங்க!"

"ப்ரேம்ங்றது ஆண்பிள்ளை பேராவும் இருக்கலாம். பெண் பிள்ளையாவும் இருக்கலாம்."

"அந்தக் கடிதங்களை எங்கிட்டயும் காட்டியிருக்கார்."

"அப்படியா?"

"உண்மையான கடிதங்கள்தான்னு தோணுது."

"சொல்ல முடியாது."

"ஏன்?"

சதாசிவம் அதாவது நாராயணியின் அப்பாகிட்ட அந்தப் பெண் எழுதின கடிதங்கள் இருக்கு. அதையும் நான் பார்த்திருக்கேன்."

"அதில் என்ன எழுதியிருந்தது?"

"என்ன எழுதியிருந்தது என்பதைவிட எப்படி இருந்தது என்பதுதான் முக்கியம். ரஞ்சனி ஷர்மா... இந்த கேஸ்ல எந்தக் கட்சி பொய் சொறாங்கன்னு தீவிரமா தெரியலை. ஒரே நாரயணி எழுதினதா சொன்ன இரண்டு கட்சி கடிதங்களிலேயும் கையெழுத்து கூர்ந்து பார்த்தா கொஞ்சம் வித்தியாசமா இருக்குது. இதில நிஜ நாராயணி யார்?"

அவள் முகத்தில் கலவரம் மிகுந்து, "வசந்த், நான் இப்ப என்ன பண்றது?"

"ஒண்ணு செய்யுங்க. என் ரூமுக்கு வாங்க. உங்க கையெழுத்தையும் கொஞ்சம் பார்க்கலாம்" என்றான்.

## 6

**வ**சந்த் ரஞ்சனி ஷர்மாவை முழுசாப் பார்த்து, "என்ன சொல்றீங்க? ஒரு மாதிரி திருதிருன்னு முழிக்கிறீங்க?"

"வசந்த், எனக்கு ரொம்ப குழப்பமாவே இருக்குது."

"எதப் பத்தி?"

"கல்யாணத்தைப் பத்திதான்."

"கல்யாணத்தைப் பத்தி என்ன குழப்பம்? எத்தனையோ எலிஜிபிள் பாச்சலர்ஸ் இருக்கறப்ப இவரைப் போய் எதுக்கு இரண்டாம் கல்யாணமா?"

"அதானே!"

"உங்க தீர்மானத்தை ஒத்திப் போடறீங்களா?"

"கார்டு அடிச்சாச்சு!"

"மற்றொரு கார்டு அடிச்சு போஸ்ட்போன் பண்ணிரலாம். பயப்படாதீங்க பணம் வாங்கியிருக்கீங்களா?"

"யார்கிட்ட?"

"அதான் மிஸ்டர் மகேந்திரன் ஐ.ஏ.எஸ். கிட்ட."

"சேச்சே; ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பித்தான்."

"நீங்க கீட்ஸ் படிப்பிங்களா?"

அவள் வியப்புடன் நிமிர்ந்து, "எதுக்கு திடீர்னு சப்ஜெக்ட் மாத்தறீங்க?"

"இல்லை. உங்களைப் பார்த்தா கீட்ஸ் படிக்கிற ஆசாமி மாதிரி தோணுது."

"வசந்த், அவர் ரொம்ப நல்லவர். தொந்தரவு கொடுக்காதீங்க. அவர் மனைவி இறந்தது ஒரு விபத்துதான்."

www.writersujatha.com

"சரி."

"கேஸ் போடப்போறீங்களா?"

"மறுபடி மறுபடி கேக்கிறீங்களே! கேஸ் போடறதுன்னு நாங்க இன்னும் தீர்மானிக்கலை போதுமா?"

"எப்ப தீர்மானிப்பீங்க?"

"கல்யாணம் எப்ப?"

"அடுத்த மாதம் பத்தாம் தேதி."

"அதுக்குள்ள தீர்ந்துடும், ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்கிறதில் உள்ள சிக்கல்களை யோசித்துப் பார்த்தீங்களா?"

"ரெண்டு பேருக்குமே ரெண்டாம் கல்யாணம் வசந்த் இது."

வசந்த் திடுக்கிட்டு, "ஆ, அப்படியா? ஆளை விடுங்க." என்றான்.

"ராத்திரி பத்தரை மணிக்கு உங்களையும் கணேஷையும் வந்து சந்திக்க விருப்பம்!"

"தாராளமா! அதும் ராத்திரின்னா ரொம்ப உசிதம்" என்றான்.

இரவு கணேஷ் வசந்திடம், "ஏய் காண்ட்ராக்ட் ஆக்ட்டில இண்டரஸ்ட் பேமெண்டை பெனால்ட்டிக்கு எடுத்துக்கறதுக்கு ஒரு செக்ஷன் உண்டே, அதை எடு."

www.writersujatha.com

"செக்ஷன் எழுபத்து நாலு பாஸ். காண்ட்ராக்ட் ஆக்ட்டையே முழுங்கியிருக்கேன். சீனிச்சாமி கேஸ் தானே?"

"என்ன சொல்லுது?"

"ஸ்டிப்புலேஷன் ஃபார் இன்க்ரீஸ்டு இண்ட்ரஸ்ட். ஆமாம். இந்த ப்ரதீமா கேஸ் என்ன தீர்மானிச்சீங்க?"

"மகேந்திரன் மேல கேஸ் போட வேண்டியதுதான்."

வசந்த் ஆச்சரியத்துடன், "என்ன பாஸ் திடீர்னு."

"தீர்மானிச்சாச்சு, அந்தக் கடிதங்களை கோவிந்தராஜன் நம்மகிட்ட காட்டினார் இல்லை?"

"ஆமா."

"அத்தனையும் ஃபேக்."

"எப்படி சொல்றீங்க?"

"கையெழுத்து எக்ஸ்பர்ட்கிட்ட காட்டிட்டேன். அவர் சொல்படி இரண்டு கையெழுத்தும் ஒண்ணுபோல இருந்தாலும் வேற வேற ஆள்னு ஸைண்டிப்ஃபிக்கா காட்டிட்டாரு பேரன்ஸிக் லாப்ல இருக்கற நம்ம பரமேஸ்வரன்."

"அதாவது, நடேசன் கோஷ்டி காட்டின கையெழுத்தும் நம்ம கோவிந்தராஜன் காட்டின லெட்டரும் வேற வேற கையெழுத்து, அப்படித்தானே சொல்றீங்க?"

"ஆமாம்"

"யார் பொய் சொல்றான்னு எப்படி தீர்மானிக்க முடியும்?"

"போட்டுக் குழப்பாதே."

"பாஸ்! ம்ஹூம் போதாது! ரெண்டு கடிதங்களும் வேற ஆள் எழுதியதுன்னு சொன்னா, எது நாராயணின்னு எப்படி தீர்க்க முடியும், சொல்லுங்க?"

"என்ன சொல்ற நீ?"

"அவசரப்பட வேண்டாம்!"

"ரஞ்சனியைப் பாத்த இல்லை."

"நிறையவே பார்த்தேன்."

"வாட் டு யூ ஃபீல்?"

"கார்ஜியஸ்."

"உடம்பைப் பத்தி கேக்கலை."

"ஏதோ ஒரு பதற்றத்தில இருக்கலாம்னு தோணுது. ஏதோ ஒரு தயக்கம். அவகூட ரெண்டாம் கல்யாணமாம்."

"உதைக்குது" என கணேஷ் சிந்தித்தான்.

"கேஸ் துப்புரவா இருக்குது பாஸ்! காஸ்ட் அயர்ன் அலிபி. சம்பவம் நடந்தபோது ஸார் வீட்டில இல்லை. ஆபீஸ்ல இருந்திருக்கார்."

"அப்படி சாட்சி சொன்னது யாரு?"

"யாரு?"

"ரஞ்சனி ஷர்மா. அதும் உதைக்குது. ஒரு காரியம் பண்ணு. அந்த அம்மாவை நோண்டிப் பாரேன். எதுக்கும் வர திங்கட்கிழமை வரைக்கும்தான் இந்த கேஸை கவனிக்கப் போறோம். அதுக்கப்புறம் ரெண்டில ஒண்ணு தீர்மானிச்சாகணும்."

"பார்க்கலாம், இன்னைக்கு ராத்திரியே சந்திக்க முயற்சி பண்ணப் போறேன்."

"சரி!"

"ராத்திரி அவ வரதா சொல்லியிருக்கா."

"எத்தனை மணிக்கு?"

"பத்து, பத்தரை. அப்பதான் எனக்கு மூளை சுறுசுறுப்பா வேலை செய்யும்.

"உனக்கு ஒரு பெக் ரம் அடிச்சா எப்ப வேணா சுறுசுறுப்பாயிடுவே."

"பழக்கத்தை விட்டுட்டேன் பாஸ். தேசிய விடுமுறை நாட்களில் ரம் குடிக்கிறதில்லை. காந்தி கோவிச்சுப்பார்."

கணேஷ் அவனை முறைத்துப் பார்த்து, "காந்தி யாருன்னு தெரியுமாடா உனக்கு?"

"1869–ல் போர்பந்தரில் பிறந்த மகாத்மா..." என்று ஆரம்பித்தவனை தடுத்து நிறுத்தி, "அவ இங்க வர்றப்ப நீ சமத்தா இருக்கணும். தெரியுமா?" என்றான்.

கணேஷ் டெலிபோனை சுழற்ற, வசந்த் அங்கிருந்தே "இப்ப எதுக்கு மகேந்திரனுக்கு போன்?" என்றான்.

"சில நேரத்தில என்னைக்கூட ஆச்சரியத்திலே ஆழ்த்தறடா நீ. எப்படி தெரியும் உனக்கு நான் மகேந்திரனுக்குத்தான் போன் பண்றேன்னு?"

"அவர் போன் நம்பர் இரண்டுல ஆரம்பிக்கிறது. உங்க முதல் 'கிர்ரக்' ரெண்டும் சுருக்கமா இருந்தது."

"மகேந்திரன் இருக்காரா?"

"யார் பேசறது?"

"நான்தான் கணேஷ்."

"கணேஷ், நான் கோவிந்தராஜன். மகேந்திரன் இல்லையே. இன்னைக்கு ப்ளேன் ஏறி டில்லிக்குப் போயிருக்கான், ஈவினிங் ப்ளைட்டில. ரெண்டு நாள்ல வருவான். ஏதாவது சொல்லணுமா?"

"இல்லை. அவர் வந்ததும் நான் போன் பண்ணதா சொல்லுங்க. எப்ப போனார்?"

"புறப்பட்டு ஒரு மணி ஆயிருக்கும். அர்ஜண்டா ஏதாவதா?"

"அர்ஜண்டா ஏதும் இல்லை. வணக்கம், வெச்சுரவா?"

போனை வைத்து, "டில்லி போயிருக்காராம்."

"நல்லதா போச்சு. தாத்தாவை அணுகி கொஞ்சம் 'தேர்டு டிகிரி' பண்ணிப் பார்க்கலாமா?"

"வேண்டாம். முதல்ல இந்தக் கையெழுத்துச் சமாசாரத்தைப் பாக்கணும். சீனிச்சாமி கேஸ்ல ரெண்டு பேருமே பொய் சொல்றாங்கடா" என்று விஷயத்தை மாற்றினான்.

"குறைவா பொய் சொல்றது நம்மக் கட்சிக்காரர்தான். டாக்ஸை குறைச்சு கட்டியிருக்கான். கணக்கில் நஷ்டம் காட்டியிருக்கான். எதிராளியானா கஜப்புளுகன் பாஸ்."

www.writersujatha.com

கணேஷ் மற்றொரு கேஸில் ஆழமாக ஈடுபட்டுவிட, மணி பதினொன்றானபோதுதான் வசந்த் ஞாபகப்படுத்தினான். "பாஸ், ரஞ்சனி வர்றதா சொன்னாங்களே?"

"நாளைக்கு வர்றாளோ என்னவோ! வசந்த் ஸெகோனால் கொஞ்சம் எடு."

"நோ, கிடையாது."

"தூக்கம் வரலைடா."

"உங்க பீப்பி எகிறுது!" அப்போது தொலைபேசி மணியடிக்க "வசந்த் இருக்காரா?" என்றது குரல்.

"வசந்த்தான் சாட்சாத், பேசறேன்."

"ரஞ்சனி பேசறேன் வசந்த். இந்த மகேந்திரன் ஸார் விவகாரத்தில ஒரு புதுசான திருப்பம்."

"என்ன?"

"போன்ல சொல்ல வேண்டாம்னு பார்க்கறேன். என்னால வரமுடியலை. டாக்ஸி கெடைக்கலை. நீங்க வர முடியுமா?"

"எங்க இருக்கீங்க?"

"ராயப்பேட்டையில டீச்சர்ஸ் காலனி."

"வந்தா ஒரு கப் ஓவல்டின் தருவீங்களா?"

www.writersujatha.com

"விஷயம் கொஞ்சம் விபரீதமா போய்கிட்டு இருக்கு. உடனே வந்தீங்கன்னா..."

"வரேன்! பாஸ், காரை எடுத்துட்டு போகவா?"

"என்னவாம்?"

"திருப்பமாம்."

"சரி, போய்ட்டு வா. ரூம் சாவியை எடுத்துட்டு போ."

"செக்கனாலை முழுங்காம இருங்க. வந்துருவேன். பம்பரம் மாதிரி தூங்கறாப்பல ரெண்டு பாட்டு போடறேன் காஸ்ட்டில..."

"போய்ட்டு வாடா"

**வ**சந்த் காரை எடுத்துக்கொண்டு மவுண்ட்ரோடு மார்க்கமாக வெலிங்டன் தாண்டி, ராயப்பேட்டை ஆஸ்பத்திரி கடந்து ஹைரோடில் செல்லும்போது மணி பதினொன்றரை.

சினிமா பார்த்தவர்கள் டப்பா கட்டு கட்டிக்கொண்டு விரைவாக நடந்து கொண்டிருக்க, தார் சாலையில் அரை டிராயர் தேர்தல் சின்னம் எழுதிக்கொண்டிருந்தான். இருபத்தைந்தாம் நாள் போஸ்டரை வற்றல் பசு ஒன்று உரித்துச் சாப்பிட்டுக்கொண்டிருந்தது. சைக்கிள் ரிக்ஷாகாரர்கள் தூங்கிக்கொண்டிருந்த சிலைக்கருகில் பாலாஜி நகரைத் தாண்டி அருகருகே இருந்த மூன்று மஞ்சள் வீடுகளில் அவள் கொடுத்த முப்பத்தாறாம் நம்பர் வீடு மூன்றாவதாக இருந்தது.

வசந்த் வாசல் கதவைத் தட்டினான்.

"யாரு?"

"ரஞ்சனி ஷர்மான்னு..."

"மாடி" பெண் குரல்.

"நாய் இருக்கா?"

"இல்லை."

"உங்க பேரு?"

"பத்மா. அஸ்பண்டு பேரு ராமநாதன்."

"வாழ்க" என்று வசந்த் மாடிப் பக்கம் மெல்லப் படியேறி, ரஞ்சனியின் கதவை அணுகி பொத்தானை அழுத்த அது உள்ளே மொழிந்தது.

பதில் இல்லை. கதவைத் தொடப்போய் அது தானாகவே திறந்துகொண்டது. வசந்த் ரத்தத்தை கவனித்தான்.

## 7

www.writersujatha.com

**வ**சந்த் கணேஷுடன், பதினெட்டு வருஷ சர்வீஸில் பலமுறை ரத்தத்தைப் பார்த்திருக்கிறான். கதவோரங்களிலும், கடலோரங்களிலும் உறைந்திட்ட செந்திட்டுகள் அவனுக்குச் சகஜம். அதனால் அப்போது அவன் அதிக அதிர்ச்சி அடையவில்லை. 'என்னடாது கேஸ் சாதாரண 'டௌரி' டெத்துன்னு நெனைச்சேன். வேற மாதிரி திரும்புதே...'

கதவை முழுவதும் திறந்தவன் உடனே ரஞ்சனி ஷர்மாவைப் பார்த்தான். சந்தேகமற அடிபட்டு ஒரு அபத்தமான கோணத்தில் கிடந்தாள். கதவின் அருகில் மிதியடியில் தலை; அங்கிருந்து வடமேற்காக கால் அருகே ஒரு எவர்சில்வர் கிண்ணமும் அவளுடைய கைப்பையும் at the edge of the body எல்லா புத்தகமும் கிடந்தது. மின்விசிறி ஓடிக்கொண்டிருந்தது.

ரஞ்சனி ஷர்மாவுக்குப் பின் மண்டையில் எங்காவது, பிளந்திருக்க வேண்டும். படுத்திருந்த வாக்கில் தலைமயிர், கரு ரத்தத்தில் நனைத்திருந்தது; உறையத் துவங்கியிருந்தது. வசந்த், "ரஞ்சனி, ரஞ்சனி" என்று கூப்பிட்டுப் பார்த்தான். என்னடாது, ஆள் காலியா? குனிந்து மூக்கருகில் விரல் வைத்துப் பார்த்தான். லேசாக மூச்சுள்ளதே?, மார்பை அழுத்திப் பார்த்தான். காதை வைத்துப் பார்த்தான். இதயம் எங்கோ ஒரு மைல் தொலைவில் கேட்டது.

வசந்த் சுற்றிலும் பார்த்தான். அறையில் டெலிபோன் இல்லை. இருந்தாலும் உபயோகப்படுத்துவது நல்லதல்ல-கீழ் வீட்டு ஜன்னலுக்குள் கேபிள் நுழைவதைக் கவனித்து அங்கே போய் கதவைத் தட்ட,

டெலிவிஷனில் சந்தியா படித்துக்கொண்டிருக்க அதையும் மீறி மிக்ஸியின் விர்ர் சப்தம் கேட்டது. வசந்த் மணிப் பொத்தானை அழுத்தி, பின் குறிப்பாக பின் கையால் கதவைத் தட்டிப் பார்த்தான்.

அந்தப் பத்மாதான் திறந்தாள்.

"என்ன அதுக்குள்ள?' என்று ஆரம்பித்தவள் வசந்தைப் பார்த்ததும் நிறுத்தி, "மறுபடி நீங்களா!" என்றாள் நெற்றியை சுருக்கிக்கொண்டு.

"என் பேர் வசந்த். மாடி வீட்டுக்கு வந்தேன். ஸாரி ஃபார் தி ட்ரபிள். அடைக்கோ வடைக்கோ அரைக்கறீங்க போல இருக்கு. கொஞ்சம் போன் பண்ணிக்கலாமா?"

"என்ன விஷயம்?"

"மாடில ரஞ்சனி ஷர்மான்னு..."

"தெரியும்."

"அவங்களுக்கு ஒரு விபத்து. இன்ஃபாக்ட் உயிருக்கு ஆபத்து."

"அய்யோ! வாங்க உள்ள என்ன ஆச்சு?"

"போன் பண்ணிட்டுச் சொல்றேன். இந்த டி.வி.யைக் கொஞ்சம் நிறுத்தினா நல்லது! இந்தி புரியாது எனக்கு."

வசந்த் கணேஷுக்குத்தான் முதலில் போன் செய்தான். "பாஸ், வசந்த்...விஷயம் தீவிரமாப் போச்சு. ரஞ்சனி ஷர்மா அடிபட்டு கிடக்காங்க!"

"கணேஷ், "ஓ மைகாட்! போய்ட்டாளா?"

"போயிண்டிருக்கா."

"ஆம்புலன்ஸுக்குச் சொல்லிட்டியா?"

"இல்லை."

"எனக்கு எதுக்கு போன் பண்ற முதல்ல...?"

"குழப்பம். படு சிக்கல். மூளை வேலை செய்யலை!"

"நீ மாட்டிக்கிலயே!"

"இல்லை."

"உடனே ஆஸ்பத்திரிக்கு போன் பண்ணி, இல்லை. அங்க யாராவது கார் வெச்சிருந்தா... ஏய் நீ கார்லதான் போயிருக்கே? அதை எடுத்துட்டு போலீஸ் வந்த உடனே ராயப்பேட்டா ஹாஸ்பிட்டல் காஷுவாலிட்டிக்குப் போ. நான் முதல்ல போலீஸுக்கு போன் பண்ணிட்டு வர்றேன்..."

www.writersujatha.com

"மகேந்திரன் டில்லி போயிருக்கறதா சொன்னார் அவர் அப்பா..."

"சரி நீ காரியத்தைப் பாரு. ஸேவ் ஹர்!"

"முயற்சி பண்றேன்..."

அவன் போனை வைத்ததும் பத்மாவைப் பார்த்தான். ரஞ்சனி வயதுதான் இருக்கும் எனத் தோன்றியது.

இல்லற வாழ்வின் இரண்டு மூன்று வருஷத் தளர்ச்சி உடம்பில் தெரிந்தது. நிச்சயம் ஒரு பிள்ளை பெற்றிருக்க வேண்டும்.

உள்ளே குழந்தை அழுதது.

"நினைச்சேன்! மேடம் நீங்க கொஞ்சம் வர முடிஞ்சா...ஹெல்ப் பண்ண முடிஞ்சா நல்லது."

"போலீஸ் கேஸா?"

"ஆமாம்!"

"எதுக்கும் என் அஸ்பண்டு கிட்ட ஒரு வார்த்தை..."

"அவர் எங்க இருக்கார் இப்ப?"

"ஆபீஸ்லருந்து வரலை இன்னும். எப்படியும் நீங்க போலீஸுக்குக் காத்திருக்கத்தானே வேணும்!"

www.writersujatha.com

"அதான் பார்க்கறேன். காத்திருந்தா இவங்களுக்கு உடனே உதவி கிடைக்காது; உயிர் போய்டுத்துன்னா எனக்குத் தூக்கம் வராது... ஒண்ணு செய்யறேன். நான் ரிஸ்க் எடுத்துக்கிறேன். ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டுப் போயிரலாம். போலீஸ் வர்ற வரைக்கும் வெய்ட் பண்ணலை."

"நானும் வரட்டுமா? ரஞ்சனியை பார்க்கலாமா?"

"வாங்க...குழந்தை அழுது."

"குட்டி இருக்கா!"

"அப்ப எதுக்கு பேசிக்கிட்டு! வாங்க, வாங்க." வசந்த் அந்தப் பெண்ணுடன் மீண்டும் ரஞ்சனியின் அறைக்குள் சென்றபோது, "உங்க பேர் பத்மாதானே?"

"ஆமாம்."

"பத்மா ரத்னம்னு ஒருத்தரை எனக்குத் தெரியும்... வாங்க வாங்க இதுதான் பாடி!"

பத்மா குனிந்து, "ரஞ்சி! ரஞ்சி!" என விளித்தாள்.

"தொடலாமா?"

"தொடுங்க பரவாயில்லை."

"மூச்சு இருக்காப்பல இருக்கே..."

"அப்படித்தான் எனக்கும் தோணுது. தூக்கலாமான்னா தயக்கமா இருக்குது. உங்களைப் பார்த்தா ஒண்டியாளா தூக்கக் கூடியவரா தெரியலை."

"என்ன செய்ய? ரஞ்சி! ரஞ்சி!" ரத்தம் இருக்கு பின்னால! வசந்த் தீர்மானித்து அவளை புஜங்களுக்குக் கீழ் கைக் கொடுத்துத் தூக்கினான். முதுகுப் பக்கம் கருஞ் சிவப்பாக நனைந்திருந்தது.

"ச்ச்ச்! நிறைய ரத்த சேதம்!"

"ஆனா மூச்சு இருக்கு."

பத்மாவும் வசந்தும் கைத்தாங்கலாக ரஞ்சனி ஷர்மாவை சுமந்து கொண்டு, அவன் காரில் பின் சீட்டில் உட்கார வைக்க அவள் அப்படியே சரிந்தாள்.

"நீங்க வந்துதான் ஆகணும். யாராவது புடிச்சிக்கிட்டாத்தான் கார் ஓட்ட முடியும் என்னால."

பத்மா தயங்க, "அஸ்பண்டு வந்துட்டா பரவாயில்லை. குழந்தை தனியா இருக்கு."

அவர்கள் பிரச்னைக்குத் தீர்வு போல அப்போது ஒரு போலீஸ் ஜீப் நிற்பதற்கு முன் இறங்கினார்.

"குட் இவினிங், எம் பேர் வசந்த்."

"தெரியும். கணேஷ் போன் பண்ணி சொன்னார். பாடியை ஏன் நகத்தினீங்க?"

"இது இன்னும் பாடி ஆகலை அதனால,"

"மூச்சு இருக்கா" ரஞ்சனியின் தலையை அசைத்து காயம் பார்த்தார்.

"ஆமாம் நூலு."

"எதுக்கு டிஸ்டர்ப் பண்ணிங்க. எவிடன்ஸ் கலைஞ்சுருக்குமில்லை."

"உயிரைக் காப்பத்தறதுக்கு, நீங்க வந்து காகிதங்களையெல்லாம் நிரப்பறதுக்குள்ள அம்மா பாதி தூரம் போயிருவாங்க."

"எங்க?"

"பரலோகம்."

இன்ஸ்பெக்டர். "ஏங்க நடு ராத்திரில ஜோக் அடிச்சுக்கிட்டு" என்றார்.

வசந்த், "பாடியைப்பத்தி நான் ஸ்டேட்மெண்ட் கொடுக்கறேன். லெட்ஸ் கோ" என்றான்.

ராயப்பேட்டை ஆஸ்பத்திரியில் நர்ஸைப் பார்த்து. "நல்லவேளை நீங்க ட்யூட்டியில இருக்கீங்க. பிழைச்சுருவாங்க"

www.writersujatha.com

"வாட்ஸ் த மாட்டர்."

"ட்யூட்டி டாக்டரைக் கூப்பிடுங்க. அவர் எங்க?"

"பேஷண்ட் பார்க்க போயிருக்கு."

"எல்லாரையும் சீக்கிரம் கூப்பிடுங்க."

ஒரு பெண் டாக்டர் வந்து, ரஞ்சனியின் கண் ரப்பையை பிரித்து டார்ச் அடித்துப் பார்த்தாள் "ஷி இஸ் இன் எ கோமா. இது எப்படி நடந்தது?"

"ஹெட் இன்ஜரி."

எழுப்பப்பட்ட சிங்கம்போல ஆஸ்பத்திரி செயல்பட்டது. ஆபரேஷன் தியேட்டர், ஐஸியு, எமர்ஜன்ஸி, ஸர்ஜிக்கல் வார்டு என்று பலதும் பேசிக்கொண்டிருக்க, ரஞ்சனி ஷர்மா வசந்தின் பார்வையிலிருந்து விலகி ஸ்ட்ரெச்சரில் வெள்ளைத் திரைக்குப்பின் மறைந்தாள்.

வசந்த் "அப்பாடா" என்று ஒரு சிகரெட்–கான்ஸ்டபிளிடமிருந்து வாங்கிப் பற்ற வைத்துக் கொள்ள கணேஷும் வந்தான்.

"வாட் ஹாப்பண்டு" என்றான்.

"அதைத்தான் வசந்த்கிட்டே கேட்டுக்கிட்டிருக்கேன். இந்தம்மாவை எதுக்குப் பார்க்க வந்தீங்க?" என்றார் இன்ஸ்பெக்டர்.

"ஒரு கேஸ் விஷயமா?"

www.writersujatha.com

"என்ன கேஸ்?"

"இவங்க கட்டிக்கப் போற ஐ.ஏ.எஸ். ஆபீசர் பேர்ல நாங்க கேஸ் போடப் போறோம்."

"மூத்த சம்சாரத்தை தீ வெச்சதா."

"டவ்ரி டெத்தா?"

"டெத்து. அவ்வளவுதான் தெரியும்."

"அதாவது இந்தம்மா புருஷன் இவங்களைத் தீ வெச்சு..."

"நாசமாப் போச்சு. இவங்களுக்குப் புருஷன் இல்லை. இன்னமும் கல்யாணம் ஆகலை."

“இரண்டாவது கல்யாணம்."

இன்ஸ்பெக்டர் வசந்தைப் பார்த்து நெற்றியைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டு, "ஏங்க போட்டு குழப்பறீங்க ராவேளையில.”

"கேஸே அப்படிங்க. முழுக்க விவரிக்க விடிஞ்சுரும்."

"யு ஸஸ்பெக்ட் பவுல் ப்ளே."

"அஃப்கோர்ஸ்" என்றான் கணேஷ்."

"பெண் டாக்டர் வெளியே வந்து, "இது போலீஸ் கேஸா?"

"ஆமாம்" என்றார் இன்ஸ்பெக்டர்.

"ரொம்ப ரத்த சேதம். மண்டையில ஸ்கல் ப்ராக்சர் ஆயிருக்கு. எப்படி ஏற்பட்டது? சாலை விபத்தா?"

"இல்லை டாக்டர்."

"இன்ஸ்பெக்டர் ஸார் பேப்பர்ஸ்ல ஏதும் சிக்கலில்லையே? எடுத்துக்கலாமில்லை?"

"நீங்க உங்க காரியத்தைப் பாருங்க. நாங்க பேப்பர்ஸ் எல்லாம் பாத்துக்கறம். பொழைப்பாங்களா?" என்றான் வசந்த்.

"சான்ஸ் இருக்கு."

“ஏதாவது பேசினா நோட் பண்ணி வெச்சுக்குங்க."

"அதெல்லாம் முடியாது."

கணேஷ் ஆஸ்பத்திரிக்கு வெளியே வந்து, இருவரும் ராயப்பேட்டா ஹைரோடு பக்கம் நடந்தார்கள். இரவு பகல் என்று பாராமல் சதா திறந்திருக்கும் டீக்கடையில் மசாலா டீ சாப்பிட்டார்கள். இன்ஸ்பெக்டர் நடந்தே அருகாமையிலிருந்த போலீஸ் நிலையத்துக்குச் சென்றார்.

"கணேஷ், இந்தக் கேஸ் ரொம்ப இன்ட்ரீகிங்கா இருக்கு."

"ஏதோ புதிய திருப்பம். வந்து சொல்றேன்னு போன் பண்ணினா ரஞ்சனி. அதுக்குள்ள அவளை யாரோ..."

"கீழ் வீட்டில யாரு?"

"நம்ம பத்மா, கணவன் மனைவி குழந்தை."

"அவங்களுக்கு ஏதாவது சத்தம் கேட்டுதாமா?"

"விசாரிக்க டயம் இல்லை."

கணேஷ் யோசித்து, இன்ஸ்பெக்டர்ட்ட சொல்லிட்டு இப்பவே திரும்பிப் போகலாம் என, "அவரையும் வேணும்னா அழைச்சுட்டு போகலாம்" என்றான் வசந்த்.

இருவரும் ரஞ்சனியின் வீட்டு மாடியை அணுகும்போது நிசப்தமாக இருந்தது. குப்பைத் தொட்டி அருகில் படுத்திருந்த நாய் அவர்களைக் குரைத்தபோது வசந்த் ஒரு கல்லை எடுக்க முற்பட்டபோது குப்பைத் தொட்டிக்குள் பாய்ந்து ஒளிந்து கொண்டது.

பேட்டையில் மொத்தம் மூன்று தெரு விளக்குகள் இருந்தன. ஒன்று ப்யுஸ். இரண்டாவது கண்ணடித்துக் கொண்டிருந்தது.

வசந்த் "பாஸ் சின்னதா ஒண்ணுக்கு, காலையில இருந்து போகவே இல்லை."

"உம்மாதிரி படிச்சவங்களாம் தெருவில ஒண்ணுக்கடிக்கிறதை நிறுத்தினாத்தாண்டா நம் நாடு உருப்படும்."

"ஒரு ஜோக்கு உண்டு பாஸ், ஒரு ராஜகுமாரிக்கு சுயம்வரம். அவளால செய்ய முடியாத காரியத்தைச் செய்து காட்டற ராஜகுமாரனுக்கு மணமாலைன்னா! ஒரு ராஜகுமாரன் கத்தி வீசினான். இவளும் வீசினாள். ஹைஜம்ப் பண்றான் இன்னொருத்தன். இவளும் ஜம்ப்பரா! அப்புறம் கடைசில ஒருத்தன் வந்தான்..."

"யார் வந்தான்?" பின்னாலிருந்து குரல் கேட்டது.

கணேஷின் குரல் இல்லை.

## 8

**வ**சந்த் தன் பின்னால் கேட்ட அன்னியக்குரலில் நின்று,

"இது யார் பாஸ் அசரீரி?"

"தெரியலையே! யாருப்பா?" என்றான் கணேஷ்.

பின்னால் இருந்தவன் முக அடையாளம் இருட்டில் தெரியவில்லை. கண்கள் ஓரம் மட்டும் ஒரு கணம் தெரு விளக்கின் ஒளியில் பளிச்சிட்டது. சிரித்தது வெள்ளைப் பட்டை போலத் தெரிந்தது. அந்தச் சிரிப்பில் ஹாஸ்யமில்லை. வெற்றுச் சிரிப்பு.

"என்னய்யா எங்காளு மேல கேஸ் போடறியாமே?"

"உங்காளு யாருய்யா?"

"தெரியாத மாதிரி கேக்கறல்ல! டே நவாபு, புடிச்சு சைஸ் பார்றா!"

'நவாபு' என்று அழைக்கப்பட்டவன் பக்கவாட்டு இருளிலிருந்து வெளிப்பட்டு வசந்தின் கழுத்தைப் பிடிக்க பல்லவன் கணேஷைப் பின்புறத்திலிருந்து கத்திரி போட்டு நிறுத்தி மூச்சுத் திணறும் வரை அழுத்தி வெட்டி வெட்டி அவனை உதிர்த்தான்.

வசந்த் குரல் வளையில் பதித்திருந்த விரல்கனை விலக்க விரயமாக பிரயத்தனித்தான். "லொக்...லொக்... என்னப்பா வே... ணாம்... லொக்... உங்க... லொக்...ளுக்கு...!"

"பீடா போடறியா!"

"அசந்தர்ப்பமா சொல்றியே!"

"பீடான்னா வெற்றிலை சுண்ணாம்பு இல்லாம வெறும் வாய்ல சிவப்பு! வேணுமா கண்ணு!"

"வேண்டாம் கண்ணா."

"அப்ப என்ன செய்யறே?"

"கேஸை விதட்ரா வாங்கறேன்."

"என்ன கணேசு?"

"சரி. ஆளை விடு! வசந்த்! வலி!"

,'....."

வசந்த் சட்டென்று திரும்பி அவன் இடுப்பில் முழங்காலால் உதைக்க மர்மஸ்தானத்தில் பட்டுவிட்டது!

"இருமு கண்ணா! இருமு. அப்பதான் உள்ள போனது வெளியே வரும். லொக் லொக்!"

"--த்தா அடிக்கறயடா!" என்று மற்றவன் கணேஷை புறக்கணித்து இவனிடம் வர, கணேஷ் பின்பக்கத்திலிருந்து ஒரு உதை உதைத்ததில் தடம் புரண்டு வசந்தின் காலடியில் விழ, வசந்த் பூட்ஸ் காலால் அவன் காதில் மிதித்தான். அய்யோ என்று அவன் சுருள, வசந்த் அவன் மயிரைப் பிடித்துத் தூக்கி, "கண்ணா பீடா போடறியா?" என்றான்.

"போடு வாத்தியாரே சிவப்பா இருக்கும்" என்று தாடையில் அடித்ததில் பல் கழன்று துப்பினான்.

அப்போது அவர்களருகே ஒரு ஆட்டோ ரிக்ஷா, வர, இருவரும் சட்டென்று அதில் ஏறிக்கொள்ள சடுதியில் அது புறப்பட்டு விலகியது.

வசந்த் கீழே இருந்து கல்லெடுத்து அதன் மேல் எறிந்தது படவில்லை... "தாளி பீடாவா குடுப்ப! பாஸ் என்னாச்சு! ரொம்ப அமுக்கிட்டானா?"

"ஆமாம். ரிப்கேஜ் எல்லாம் உடையறா மாதிரி வலிக்குது."

"உடனே டாக்டர் கிட்ட போகலாம். எனக்குக்கூட நகம் கீறி ரத்தம் வருது."

"யார் வசந்த், இவங்க?"

"எல்லாம் மகேந்திரன் ஆசாமிங்க! இவங்கதான் ரஞ்சனி ஷர்மாவையும் தாக்கியிருக்கணும்!"

"எங்கயோ ஆரம்பிச்சு எங்கயோ போவுது கதை! ஒரு மனைவியின் சாவுக்குப் பின்னால பல சிக்கல்கள்..."

கணேஷ் தன் கைக்குட்டையால் வசந்தின் முகத்தைத் துடைத்து, "கன்னலத்திலயும் கீறியிருக்காங்க!"

"பாஸ் முழங்காலால ஒண்ணு வெச்சேன்! கடலைக் கொட்டை உடையமாதிரி சப்தம். எதுக்காக மகேந்திரன் நம்மை ஆள் வெச்சு அடிக்கணும்?"

"கேஸ் போடறோமில்ல... அதுக்காக!"

"அவ்வளவு முட்டாளா அவர்? இந்த மாதிரி செய்யறதால நம்ம வைராக்கியம் அதிகமாகும்னு தெரியாதா அவருக்கு?"

இருவரும் மெல்ல நடந்து டாக்டர் குமாரின் டிஸ்பென்ஸரிக்குச் சென்றனர்.

"என்னது–ரத்த காயம்? ரெண்டு பேரும் சண்டை போட்டுகிட்டீங்களா?"

"சண்டை போட்டோம். வெளி ஆள் கூட!"

"வக்கீல் உத்தியோகத்தில் இது எல்லாம் உண்டா என்ன?"

"கூட்டிக் கொடுக்கறது தவிர பாக்கி எல்லாம் உண்டு!"

"தரையில விழுந்தீங்களா?"

"ஆமாம்."

"அடியாளுங்க."

"பார்த்துக்கங்க, இந்த மாதிரி கேஸ் எல்லாம் எதுக்கு எடுக்கறீங்க?"

"உங்க மாதிரி டாக்டர்கள்லாம் பிழைக்க வேண்டாமா. எத்தனை கொடுக்கணும் டாக்டர்?"

"பணம் வேண்டாம். ஒரு டெனன்ஸி கேஸ் இருக்குது. அதைக் கொஞ்சம் பாத்து ஒப்பினியன் சொன்னீங்கன்னா?"

"இப்பவேவா?"

"நாளைக்கு நீங்களும் பிஸி ஆயிருவிங்க. நானும் பிஸி ஆயிருவேன்."

அந்தக் கேஸில் வீட்டுக்காரனுக்கும் அதிகம் உரிமையும் இல்லை என்பதை விளக்கிவிட்டு திரும்பி வருவதற்குள் இரவு வெகுநேரமாகிவிட்டது. வந்து படுக்கையில் படுத்த கணேஷ் சற்றுநேரம் மின்விசிறியின் சுழற்சியைப் பார்த்துக் கொண்டிருந்தவன் சட்டென்று, "வசந்த் எழுந்திரு" என்றான்.

"என்ன பாஸ்?"

"ரஞ்சனி ஷர்மாவை ஆஸ்பத்திரியில விட்டு வந்தது தப்புடா!"

"ஏன்?"

"அவ உயிரோட இருக்கறது யாருக்கோ பிடிக்காமத்தான் தாக்கியிருக்காங்க! அவங்க மறுபடி ஆஸ்பத்திரிக்கு வந்து தாக்க மாட்டாங்கன்னு என்ன நிச்சயம்?"

"அதானே! போன் பண்ணிப் பாத்துரலாம்." வசந்த் நொண்டிக் கொண்டே போன் அருகே சென்று ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்குச் சுற்றி எமர்ஜென்ஸி வார்டு கேட்டான்.

"அலோ? அங்க ரஞ்சனி ஷர்மான்னு யாராவது படுக்கையில் படுத்திருக்காங்களா?"

www.writersujatha.com

"கொஞ்சம் இருங்க!"

சற்று நேரத்தில் இல்லீங்க. "வயசானவங்கதான் படுத்திருக்காங்க."

"அப்படியா? ரஞ்சனி ஷர்மான்னு..."

"கொஞ்சம் இருங்க. ரிஜிஸ்தரைப் பார்த்துச் சொல்றேன்...அவங்களை ஸர்ஜிக்கல் வார்டுக்கு அனுப்பியிருக்காங்க. வார்டு பாய் வந்து எடுத்துக்கிட்டுப் போனதா..."

ஸர்ஜிக்கல் வார்டில் இருந்த டெலிபோன் ஐந்து நிமிஷம் ஒலித்தது. யாரோ எடுத்தார்கள். "யாரும் இல்லீங்களே, எல்லாரும் தியேட்டர்ல இருக்காங்க. மந்திரிக்கு இரண்யா ஆப்பரேஷன். எமர்ஜென்ஸி."

"அங்க ரஞ்சனி ஷர்மான்னு ஒரு பொம்பளை அட்மிட் ஆயிருக்காங்க. அவங்க எப்படி இருக்காங்கன்னு!"

"இருங்க... என்ன பேர் சொன்னீங்க?"

"ரஞ்சனி ஷர்மா."

"இருங்க."

சற்றுநேரம் வசந்த் கணேஷின் முகத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தான். "என்னவோ உதைக்குது.,'

"என்னடா?"

மறுமுனை. "ஹலோ அப்படி யார் பேரும் ரிஜிஸ்டர்ல இல்லீங்களே!"

"ஆர் யூ ஷ்யுர்? சரியா பார்த்துச் சொல்லுங்க."

"அப்படி யாரும் இல்லீங்க."

வசந்த் போனை பொத்தி "ட்ரபிள்" என்றான்.

"போலீஸ் என்ன பண்றாங்க?"

"ஏங்க போலீஸ்காரங்க யாரும் இருக்காங்களா?"

"இல்லீங்களே!"

"இல்லையாம்."

**வ**சந்த் கணேஷ் இருவரும் புதிதாக உயிர் பெற்றவர்கள்போல, சட்டென்று சட்டை மாற்றிக்கொண்டு ஆஸ்பத்திரி நோக்கி விரைந்தனர். கா**ஷு**வால்ட்டியில் காகிதங்களை நிரப்பிக் கொண்டிருந்த அந்தப் போலீஸ்காரரிடம் போய், "இன்ஸ்பெக்டர் எங்க?" என்றான் வசந்த்.

"அவர் ஸ்டேஷன் போயிட்டார். ஏன்?"

"அந்தம்மா ரஞ்சனி ஷர்மா அவங்களை வார்டில காணோம்."

"ஆப்பரேஷன் செய்யப் போறதா சொன்னாங்க. அதான் வெளியே வந்தேன்."

"அங்கேயும் இல்லை அவங்க."

"உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"போன் பண்ணிப் பார்த்தோம்."

"நீங்க யாரு?"

"நண்பர்கள்! வக்கீல்ங்க! என்ன ஸார் அரைமணி முன்னாலதான் உங்ககிட்டருந்து சிகரெட் வாங்கி தம் அடிச்சேன்..."

"எந்த வார்டில விசாரிச்சீங்க? என்ன காயம் உங்களுக்கு?"

"காயத்தை அப்புறம் பார்க்கலாம். அந்தம்மாவைக் கோட்டை விட்டாச்சுன்னு நினைக்கிறோம்?" மூவரும் ஓடினார்கள்.

ஸர்ஜிக்கல் வார்டிலோ, ஐஸியுவிலோ, எமர்ஜன்ஸி வார்டிலோ, ஜெனரல் வார்டிலோ எங்கு தேடிப் பார்த்தாலும் ரஞ்சனி ஷர்மா இல்லை. எமர்ஜன்ஸியிலிருந்து ஸர்ஜிக்கல் வார்டு அழைத்துச் சென்றதற்கு அத்தாட்சி இருந்தது. ஆனால் அந்த வார்டில் அவள் இல்லை. ஆப்பரேஷன் தியேட்டருக்குள்ளும் இல்லை.

"எப்படி இது? சாத்தியமே இல்லை" என்றாள் நர்ஸ் மேட்ரன். ஸ்ட்ரெச்சர்ல வச்சு தள்ளிக்கிட்டுப் போனாங்க. என் கண்ணால பார்த்தேன்... வார்டு பாயும்... அந்த ஆளும்... வெயிட் எ மினிட். அந்த வார்டு பாய் புதுசா ஒரு பையன் போல இருந்தான். தொப்பி, வெறும் ஓவர் கோட்டு மட்டும் போட்டுகிட்டு..."

"சரியாப் போச்சு."

லிப்ட் அருகில் கீழே ஒரு வெள்ளைக் கோட்டும் தொப்பியும் கிடந்ததை அப்போதுதான் ஒரு ஆயா எடுத்து வந்தாள்.

"பாஸ்! போச்சு!" என்றான் வசந்த்.

"ஐ திங் ஸோ."

"வாங்க பாஸ் தேடலாம்!"

"எங்கடா தேடறது?"

"ஏங்க, அந்தம்மா ஆப்பரேசன்ல இல்லியா" என்றார் கான்ஸ்டபிள்.

"அந்தம்மாவை அழைச்சுட்டுப் போயிட்டாங்க!"

"யாருங்க?"

"கிங்கரர்கள்!"

"அது யாருங்க உறவுக்காரங்களா?"

www.writersujatha.com

"அய்யா இந்த ஓவர் கோட்டைப் பார்த்திங்கள்ல. இந்தத் தொப்பி என்ன சொல்லுது." கான்ஸ்டபிளிடம் கீழே கிடந்த உடைகளைக் காட்டினான் வசந்த்.

"யாரோ ஆஸ்பத்திரி வார்டு பாய் மாதிரி உடை உடுத்தி கொண்டு அந்தம்மாவைக் கடத்திக்கிட்டுப் போயிட்டாங்க."

"அபார மூளைங்க! அதாங்க!" லிப்ட்டில் இறங்கி பேஸ்மெண்ட் பகுதிக்கு வந்தார்கள். அங்கே விசாரித்ததில் "ஒரு வேன் மாதிரி வந்துதுங்க. ஸ்டெச்சர்ல வெச்சு, ஒரு அம்மாவை உள்ள ஏத்திக்கிட்டு..."

www.writersujatha.com

"வேன்'னா வெள்ளையா ஆம்புலன்ஸா?"

"இல்லைங்க, மாருதி மாதிரி."

"நம்பர் கிம்பர் ஏதாவது..."

"என்ன கலர்...?"

கணேஷ், "வசந்த் வா போகலாம்" என்றான்.

"எங்க பாஸ்?"

"நம்ம நண்பர் மகேந்திரன் ஐஏஎஸ்ஸைச் சந்திக்க."

"அவர்தான் டில்லி போயிருக்கரே!"

"அவர் டில்லி போகலைன்னு எனக்குச் சந்தேகம்!"

## 9

அவர்கள் இருவரும் மகேந்திரனின் வீட்டை அடையும்போது நள்ளிரவு கடந்து விட்டது. கணேஷ் வசந்திடம், "லாங் நைட்!" என்றான். "இன்னம் முடியவே இல்லை பாஸ்! இப்பதான் ஆரம்பிக்குது" மகேந்திரன் வீட்டுக் கதவைத் தட்டியபோது சற்று நேரம் பதிலே இல்லை.

www.writersujatha.com

"ஓட்டை வழியா பாக்கறாங்க பாஸ். கண்ணைக் குத்தட்டுமா?"

"யாரு?"

"அப்பாவாகத்தான் இருக்க முடியும்!" கதவு ஒருக்களித்து திறந்து, "என்ன வேணும்?" என்று கேட்டார் கோவிந்தராஜன்.

"மிஸ்டர் மகேந்திரன்!"

"அவன் டில்லிக்குப் போயிருக்கான்னு சொன்னேன் இல்லை?"

"அப்படியா?"

"உங்களுக்கு ஃபோன்ல சொன்னா நம்பிக்கை இல்லையா?"

"அப்படி இல்லை... உள்ள வரலாமா?"

"இந்த அகாலத்திலயா? மணி என்ன ஆறது?"

"ரஞ்சனி ஷர்மா தாக்கப்பட்டா!"

"யாரு?"

"ரஞ்சனி ஷர்மா. உங்க மகன் ரெண்டாவதா கல்யாணம் செய்துக்கப்போற பெண்."

"உயிர் இருக்கா?"

"தெரியவே இல்லை."

"ஏன்னா, ரஞ்சனி ஷர்மாவைக் காணோம்!"

"ஏம்பா நட்ட நடுராத்திரிலே இப்படி வந்து குழப்பறே!"

"இல்லை மாமா, நீங்கதான் குட்டையை ரொம்ப குழப்பியிருக்கிங்க."

"என்னவோ எல்லாம் காலைல பார்க்கலாம். எனக்கு தலைசுத்தல்!"

இருவரும் அந்த வீட்டை விட்டுப் புறப்பட்டுக் காரில் சற்று தூரம் சென்றதும், கணேஷ் காரை நிறுத்தினான்.

"என்ன பாஸ்! மாருதி நிக்காதே!"

"வசந்த்! நீ என்ன பண்றே, நேராப் போய் அந்த வீட்டில பின் பக்கமா சுவரேறிக் குதி..."

"குதிச்சு? எதையாவது திருடணுமா?"

"வேண்டாம். மகேந்திரன் இருக்கானான்னு பாரு. எனக்கென்னவோ அந்தாளு டில்லிக்குப் போகலைன்னு சந்தேகம்."

வசந்த், "என்னை ஜெயிலுக்கு அனுப்பாம விடப் போறதில்லை நீங்க."

"நான் போகட்டுமா?"

"வேண்டாம்."

"போடா, ஜெயில்ல போட்டா பெயில்ல எடுத்துர்றேன்!"

வசந்த் அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டு மெள்ள இருளோடு நடந்து, வீட்டின் பின்புறத்தை அடைந்து மாடியில் விளக்கு எரிவதைப் பார்த்து காம்பவுண்டு சுவரில் ஏறி அதிலிருந்து சஜ்ஜாவில் கால் வைத்து கார்ஷெட் மொட்டை மாடி மார்க்கமாக மாடி சன்னலை எய்தி உள்ளே எட்டிப் பார்த்தான்.

மகேந்திரன் சாட்சாத் அங்கே உட்கார்ந்துகொண்டு, வசந்தின் பார்வையில் இல்லாதவரிடம் "ரெண்டு பேரும் நிச்சயம் சந்தேகப்படறாங்கப்பா."

"ஒரு வழிக்கும் வரமாட்டாள்போல இருக்கு!"

"என்ன செய்யலாம்?"

"மினிஸ்ட்ரீல சொல்லிப் பாரேன்!"

"இல்லைப்பா, இவங்க கேஸ் போடட்டும் பரவாயில்லை."

"கேஸ் போட்டா தொலைஞ்சுடா நீ, நிச்சயம் அத்தனை சாட்சியும் உனக்கு எதிரா இருக்கு. அவ எழுதின லெட்டர்ஸ்!"

"அதுக்குத்தான் மாற்றுக் கடுதாசி காட்டப்போறமே!"

"அந்த வசந்த்ங்கறவன் கல்லுளி மங்கன். கோர்ட்டில நாற அடிச்சுருவாங்க. மகேந்திரா, இந்தக் கேஸை எப்படியாவது தவிர்க்கறது நல்லது! ரொம்ப தூரம் போய்டுத்து. சாட்சிக்காரன் கால்ல விழறதுக்கு பதிலா சண்டைக்காரன் கால்ல விழுங்கறாப்பல சதாசிவத்தின் கால்லயே விழுந்துரலாம்."

"ஒப்புத்துக்க மாட்டார்!"

"என்ன செய்யறது?"

"ஒரே வழிதான் இருக்கு?"

"என்ன?"

"கொஞ்சம் இரு. ஜன்னல்ல ஏதோ நிழல் தெரியறது."

வசந்த் சரேல் என்று ஒரு தேர்ந்த திருடனின் வேகத்துடன் செயல்பட்டு குதித்து இறங்கிவிட்டான்.

சன்னலைத் திறந்து மகேந்திரன் எட்டிப் பார்த்து, 'யாரு? யாரு?' என்று கேட்பதற்குள் மாருதிக்கு ஓடி வந்து விட்டான்.

"பாஸ்! கை குடுங்க. எப்படி உங்களுக்கு மகேந்திரன் டில்லி போகலைன்னு தெரியும்? ஏதாவது இட்சிணி வேலையா?"

"சொல்லு."

"மகேந்திரன் இஸ் வெரி மச் ஹியர். டில்லி போகலை. ரெண்டு பேரும் நாம கேஸ் போடறதைப்பத்தி ரொம்பக் கவலையா பேசிக்கிட்டாங்க."

"ரஞ்சனி ஷர்மாவைப் பத்தி பேச்சு வந்ததா?"

"இல்லை, ஒரே ஒரு வழிதான் இருக்குன்னு கடைசியில பேசிக்கிட்டாங்க. அந்த வழி என்னன்னு சொறதுக்குள்ளே, ஜன்னல்ல என்ன நிழலாடுதுன்னு பார்க்க வந்துட்டான். ஒரே குதி! பி.டி. உஷா மாதிரி ஓடி வந்துட்டேன்."

"சரி, இப்ப வக்கீல் உத்யோகம் இல்லைன்னா சுவரேறி குதிச்சு திருடலாம் நீ!"

"சே! நல்ல வழிகளிலேயே என் கலையைப் பயன்படுத்துவேன்--சில்க் ஸ்மிதா மாதிரி..."

"சரி, நாளைக்கு சதாசிவத்தினிடம் பேசி ஃபார்மலா ஒரு பெட்டிஷன் போட்டு கேஸைத் துவக்கிரலாம்..."

"ஜூரிஸ்டிக்ஷன் அகமதாபாத் பாஸ்!"

"அங்கேயும் போய் ஒரு பெட்டிஷன் சமர்ப்பிச்சுட்டு வரலாம். கொஞ்சம் ப்ரஸ்காரங்களைக் கூப்பிட்டு பப்ளிஸிட்டி கொடு... அவர்களுக்கு டவ்ரி டெத், ப்ரைட் பர்னிங் எல்லாம் அல்வா."

"சரி, அதிகாலையில போய் ப்ரதிமாவைப் பாத்துட்டு எல்லா காகிதங்களிலயும் கையெழுத்து வாங்கிண்டு வந்துர்றேன்."

"நானும் வர்றேன்."

"கையெழுத்து வாங்கறதுக்கு நீங்க எதுக்கு?"

"இல்லை. சதாசிவம் கூட கொஞ்சம் பேசணும். போன் பண்ணிட்டுப் போய்ட்டு வரலாம்..."

மறுதினம் ப்ரதிமாவுக்கு வசந்த் போன் பண்ண "ஹாய்! நான்தான் வசந்த் பேசறேன்."

"எந்த வச...ஹலோ வசந்த்."

"ஞாபகம் இருக்குதானே?"

"தாராளமா!"

"உங்க கையைக்கூட ஒருமுறை புறா மாதிரி தடவிக் கொடுத்தேனே!"

"சரி என்ன விஷயம்?"

"கேஸ் விஷயமா சில கையெழுத்துக்கள் வாங்க வேண்டும். எப்ப வரட்டும்."

“எப்ப வேணா வரலாம்.”

"காலேஜ் இல்லையா?"

"நீங்க வரிங்கன்னா லீவு எடுத்துக்கறேன்... கேஸ் எடுத்துக்கறதா தீர்மானிச்சுட்டிங்களா?"

"ஆமாம்."

"வெரி குட். வாங்க வசந்த் காத்திருக்கேன். எப்ப வரிங்க?"

"பாஸ், எத்தனை மணிக்கு போகலாம்?"

கணேஷ் 'பத்து' என்று விரல்களால் காட்டினான்.

"எதுக்கும் பந்தோபஸ்தா இருங்க. மகேந்திரன் ஒரு மாதிரி முரட்டு ஆசாமி. நேற்றிக்கு என்ன ஆச்சு தெரியுமா? ரஞ்சனி ஷர்மான்னு அவர் செக்ரட்டரி, அவர் இரண்டாவது

கல்யாணம் செய்துக்கப் போறவ, அவளை யாரோ தாக்கி...ஆஸ்பத்திரில அட்மிட் ஆயி, ஆஸ்பத்திரியிலயும் அவளைக் காணம்!'

"அப்படியா?"

"அதை ஏன் கேக்கறிங்க! அதுக்கப்புறம் எங்களைத் தாக்க ரெண்டு வெத்து குண்டர்களை அனுப்பியிருந்தார்... ராத்திரி டிஷ்யும்! டிஷ்யும்!"

"அப்படியா!"

"உங்க மாப்பிளை ரொம்ப பொல்லாதவர், பார்க்கறதுக்கு சாது மாதிரி இருந்துண்டு."

"அதைத்தான் நான் ஆரம்பத்திலயே சொல்லிக்கிட்டு இருந்தேன்! யாரும் நம்பலை. கண் தெரியாத எங்க அப்பாவையே அடிச்சுருக்காங்க... உங்களைத் தாக்க தயங்க மாட்டாங்க!"

"எதுக்கும் ஜாக்கிரதையா இருங்க."

"பத்து மணிக்கு வந்துருங்க."

"வெச்சுரவா?"

"வெச்சுருங்க."

"நிஜமாவே வெச்சுரவா?"

"நிஜமா வெச்சுருங்க."

"போடா சீ! வைடா போனை" என்று கணேஷ் அதட்ட வசந்த் தன் மார்பை தொட்டுக் கொண்டு "பாஸ் அந்தப் பெண்ணுக்கு நிஜமாவே என் மேல காதல்."

"நோ சான்ஸ்."

"பெட்டிஷன்ல கையெழுத்துப் போட்ட கையோட ரிஜிஸ்த்ரார் ஆபீசுக்கு அழைச்சுட்டுப் போகலாமா, திறந்திருக்குமா?"

"மடையா, உனக்கெல்லாம் ஜென்மத்தில் கல்யாணம் கிடையாது. அங்கங்க சைட் அடிச்சுக்கிட்டு இரு. அதான் உன் விதி."

"ஏன் பாஸ்?"

"யு ஆர் நாட் த மேரியிங் டைப்."

"இந்தத் தடவை நிச்சயம் கல்யாணம்ன்னு அன்னிக்கு கிளி ஜோஸ்யம் சொல்லித்து!"

"யாருக்குன்னு சொல்லையே!... இந்தப் பெட்டிஷனைப் பாரு, ட்ராப்ட்தான்."

வசந்த் அந்த மனுவின் மாதிரியைப் படித்துப் பார்த்தான். இப்பல்லாம் 'க்ரைம்ஸ் எகய்ன்ஸ்ட் விமன்'னா தனியாகவே ஒரு எஸ் பி. அம்மா இருக்காங்க. அவங்களுக்கும் ஒரு மனு போட்டுரலாம். அப்புறம் தொகுதி எம்.எல்.ஏ., சமூக நலத்துறை."

"முதல்ல போலீஸ் டிப்பார்ட்மெண்ட்டுக்கு."

"இன்ன தெருவில் வசிக்கும் சதாசிவமாகிற நான், என் முதல் மகள் நாராயணி மகேந்திரன் ஒய்ஃப் ஆஃப் ஜி. மகேந்திரன்... பாஸ் அவர் என்ன உத்யோகம்?"

"தெரியலை. ஏதோ ஓ.எஸ்.டி.ன்னாங்க. டிப்பார்ட்மெண்ட்டே நிழலா இருக்குது."

மனுவுக்கு உரிய டிராப்ட் காகிதங்களைத் தயாரித்துக் கொண்டு கணேஷும் வசந்தும் புறப்பட மணி ஒன்பதே முக்கால் ஆகிவிட்டது. பூந்தமல்லி ஹைரோடில் சிக்னலுக்கு அருகே ஒரு விபத்து ஏற்பட்டு, போக்குவரத்து மோசமாக அடைப்பட்டிருந்தது. வாகனங்கள் விலகி ப்ரதிமாவின் வீட்டை அடைய பத்து நாற்பதாகிவிட்டது.

## 10

பூட்டியிருந்த கதவருகில் நின்றுக்கொண்டு மோவாயைத் துடைத்து கணேஷ், "இதுக்கு என்ன அர்த்தம் வசந்த்?"

"பெரிய எழுத்தில ஆபத்து. ப்ரஃதிமாவையும் அவ அப்பாவையும் அடுத்தப்படியாகக் கடத்திக்கிட்டுப் போயிருக்கானா?"

"யாரு?"

"யாரு, கதாநாயகர்தான், மகேந்திரன் ஐ.ஏ.எஸ்."

"இருக்கலாம்."

"பாஸ், இப்பக் கதை வசனம் முழுவதும் புரியுது. பளிங்கு மாதிரி."

"என்ன?"

"ப்ரதிமாவின் அக்கா நாராயணியைக் கொடுமைப்படுத்தித் தற்கொலையோ கொலையோ ஆயிருக்குது. கோவிந்தராஜன் முழியே சரியில்லை. நாராயணியின் மரணத்துக்குக் காரணம் நிச்சயம் மாப்பிள்ளை குடும்பம்தான். அதில் சந்தேகமில்லை தானே?"

www.writersujatha.com

"இல்லை. சொல்லு."

"ஆனா இந்த ரஞ்சனி ஷர்மா..."

"இவளை இரண்டாவதா கல்யாணம் செய்துகொள்ள முயற்சித்திருக்கிறார். அவ முதல்ல ஒப்புத்துக்கிட்டாலும் நாம கேஸ் போடறம்னு அவளுக்குத் தயக்கம் ஏற்பட்டு மேற்கொண்டு விசாரிச்சிருக்கா..." வசந்த் மூச்சு வாங்கிக் கொண்டான்.

"உண்மை வெளியே வந்திருக்கு. அதுக்குத்தான் நம்மைப் பார்க்க வரதா சொல்லியிருக்கா. அது எப்படியோ மகேந்திரனுக்குத் தெரிஞ்சு போய் ஆள் அனுப்பிச்சு மண்டைல நாலு சாத்து சாத்தியிருக்காங்க. அவ உயிர் போகலை. ராயப்பேட்டை ஆஸ்பத்திரியில இருக்கான்னதும் அவளை எப்படியோ கடத்திட்டுப் போயிருக்காங்க."

"இன்னேரம் காலிங்கறியா?"

"ஆமா."

"இவங்களையும் காணம். கவலையா இருக்குது, வசந்த்."

"நம்ம வந்து பயப்படுத்தினாங்க பாருங்க வெத்து குண்டங்க, அவங்க இவங்களையும்...இல்லை பாஸ்."

"ஏண்டா?"

"அங்க பாருங்க."

எதிரே சதாசிவமும் ப்ரதிமாவும் வந்து கொண்டிருந்தார்கள்!

"நல்லவேளை, இவளுக்கு ஏதும் ஆகலை. என்ன ஸார் எங்க போயிருந்தீங்க?" சதாசிவம் கிட்ட வந்ததும் கேட்டான்.

அவர் கணேஷின் குரலை அடையாளம் கண்டு கொண்டு "அய்யோ! அது ஏன் கேக்கறே கணேஷ், தக்க சமயத்தில் வந்தீங்க."

"என்ன ஆச்சு மறுபடியும் அடிதடியா?" என்று ப்ரதிமாவைக் கேட்டான் வசந்த்.

ப்ரதிமா, "உள்ள வாங்க வாசல்ல நின்னுட்டுப் பேச வேண்டாம்."

உள்ளே சென்றதும், "நீங்க ரெண்டு பேரும் ராத்திரி துணையா இருக்கணும் எங்களுக்கு."

"ஒரு ஆள் போதுமே! நான் ஒருத்தன் போதுமே. பாஸுக்கு ரொம்ப ஜோலி."

கணேஷ், "என்ன நடந்தது?"

"என்ன என்னவோ பயங்கரமா நடக்குது மகேந்திரன். ஆள் வெச்சு எங்களைத் தீர்த்துக் கட்டிறப் பார்க்கறான்."

"யாராவது வந்தாங்களா?"

"வீட்டுக்கு வெளியே வந்து சத்தம் போட்டுட்டுப் போனாங்க நான் தனியா இருக்கறப்ப. அப்புறம் ப்ரதிமா தனியா போனபோது அவளை கிட்னாப் பண்ண முயற்சி பண்ணாங்க. நல்லவேளை எதித்த வீட்டில ஒரு எஸ்.ஐ. இருக்கார். அவர் தக்க சமயத்தில் வந்து காப்பாத்தினார். போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் புகார் கொடுத்துட்டு வரோம். கணேஷ் இந்தாளு ரொம்ப இன்காரிஜிபிள்!"

"மகேந்திரன் என்ன வேணாலும் செய்வான். கொலைக்கும் அஞ்சாதவன்."

"வாஸ்தவம்தான். சமீபத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள்ள நிறைய மூர்க்கத்தனத்தை பார்ப்தோம். ரஞ்சனி ஷர்மான்னு ஒரு பொண்ணு ஆபீஸ்ல..."

"தெரியும். என்னவோ அடிபட்டு கிடக்குறாளாமே. எப்படி இருக்கா?"

"எப்படி இருக்கான்னு சொல்ல முடியாத நிலை."

"ஏன்?"

"மாயமா மறைஞ்சாச்சு ஆஸ்பத்திரிலருந்து."

"அய்யய்யோ" ப்ரதிமா பயந்துபோய் நகத்தைக் கடிக்க,

"நீங்க எதுக்கு நகத்தைக் கடிக்கறீங்க! நாங்க வந்துட்டமில்லை? மாடில சௌகரியமா படுத்துக்க வசதி இருக்கா?"

"கணேஷ், நீங்க இந்த கேஸ் முடியற வரைக்கும் எங்களை விட்டு விலகவே கூடாது."

"கேஸ் போட்டுருவமா?"

"நிச்சயம் போட்டுத்தான் ஆகணும் அவன் கொட்டத்தை அடக்க."

"தட்ஸ் தி ஸ்பிரிட் சதாசிவம். கவலைப்படாதீங்க. உங்க பொண்ணை கண்ணும் கருத்துமா பாத்துக்கிட்டு கேஸ் போட்டு இந்த ஐ.ஏ.எஸ்ஸை தகர்க்கலைன்னா எம் பேரு வசந்த் இல்லை!"

"அப்பா இப்பதான் நிம்மதி" என்றாள் ப்ரதிமா.

"கொஞ்சம் யூக்கலிப்ட்ஸ் ஆயில் கைல தேச்சுக்கிட்டா சரியாயிடும். வரிங்களா?"

"இப்பவா"

"இப்ப இல்லை" என்றான் கணேஷ்.

"உக்காருங்க. சில பெட்டிஷன்கள் தயாரிக்கணும். ஒரு போலீஸ் கம்ப்ளெயிண்ட் கொடுக்கணும். அகமதாபாத் காகிதங்களை எல்லாம் கொண்டாங்க."

"அப்பாவும் பாஸும் கேஸை விவரமா பேசிக்கிட்டு இருக்கறப்ப நாம டிஸ்டர்ப் பண்ண வேண்டாம் ப்ரதிமா. வாங்க மாடிக்கு போகலாம்."

"இங்கேயே பேசுங்க."

"உங்களுக்கு டிஸ்டர்பா இருக்கும்."

கணேஷ் வசந்தை முறைத்துப் பார்த்து, "வசந்த்! நோ மங்க்கி ட்ரிக்ஸ்" என்றான்.

"பாஸ், ட்ரஸ்ட் மி."

ப்ரதிமாவுடன் மாடிக்குப் போய் பால்கனியிலிருந்து தெருவில் போவோர் வருவோரைப் பார்த்துக் கொண்டிருந்த வசந்த்,

"ப்ரதிமா உங்களை எப்ப முதல்ல பார்த்தேன்? மறக்கவே இல்லை. காவிக் கலர்ல சொக்காயும், கிளிப்பச்சை நிறத்தில மேல்துண்டும் காதில் நீலத்தில தொங்கட்டாணும் அணிந்து பல்லுக்கு க்ளிப் போட்டிருந்திங்க எடுத்துட்டிங்களா?"

"எடுத்துட்டேன்..."

www.writersujatha.com

"அந்தச் சமயத்திலேயே எனக்கு டெம்பரேச்சர் ஒரு எட்டு டிகிரி செல்ஷியஸ் எகிறுனது இன்னும் குறையல்லை தொட்டுப் பாருங்க."

"எதனால?" என்றாள்.

"அய்யோ இவ்வளவு இன்னொஸண்டா, இவ்வளவு மில்க்கா நீங்க? த்ஸொ."

"நீங்க பேசறே எனக்கு தமாஷா ஆறுதலா இருக்கு வசந்த்! எத்தனை பயம்மா இருந்தது தெரியுமா அவங்க ஜன்னல் மேல கல்லெறிஞ்சப்ப."

www.writersujatha.com

"அப்படியா! மார் படக்கு படக்குனு அடிச்சுக்கிச்சா?'

"ஆமா."

"எங்கே பார்க்கலாம்" என்று வசந்த் தொட்டுப் பார்த்தான்.

"ஆமா புறாக் குஞ்சு மாதிரி அடிக்குது."

அவள் இயல்பாக அவன் கையை நீக்க, "யுக்கலிப்ட்ஸ் தேச்சா சரியாப் போய்டும்."

"ஆயில் இல்லையே."

"ஏதாவது ஆயில் இருக்காதா வீட்டில்? தேங்காண்ணெய்? வி.வி.டி?"

"இருக்கு."

"கொண்டாங்க தேச்சு விடறேன்."

"எங்க?"

"அது ஆளுக்கு ஆள் மாறும். அவங்கவங்க தேஜஸைப் பார்த்துத் தீர்மானிக்கணும்."

அவள் நிஜமாகவே தைலம் எடுத்துவர, "லெட்மி ஸீ உங்களுக்கு இடுப்பில் தேய்க்கலாம்னா இடுப்பே இல்லையே கிட்ட வாங்க."

அப்போது கணேஷ் நுழைந்து, "கிட்டவா. நானும் வரட்டுமா என்ன அது தைலம் எல்லாம்."

www.writersujatha.com

"பயத்துக்கு தேய்க்கலாம்னாரு வசந்த்."

"ஆரம்பிச்சிட்டியா, போடா கீழ. மிஸ் இவன் உத்தேசம் தைலம் தேய்க்கறதோட நிக்காது. இவனை நம்பாதீங்க."

"இல்லையே. தமாஷா பேசிக்கிட்டுத்தானே இருக்கார்."

"தமாஷா பேசிக்கிட்டு, வாடா சீ."

"கரடி கரடி" என்று அவனை திட்டிக்கொண்டு கீழே வர, சதாசிவம் கையெழுத்துப் போட உதவிக்குக் காத்துக் கொண்டிருந்தார்.

"வசந்த் இதை நாளைக்கு நியரஸ்ட் போலீஸ் ஸ்டேஷன்ல கொடு. முதல்ல ஒரு பெட்டிஷன்–ப்ரேயர் ரி ரி– ஓப்பன் தி கேஸ்; வி ஹங் ரீஸன்ஸ்டு பிலீவ் தட் மை டாட்டர் நாராயணி ஒய்ப் ஆஃப்..."

ப்ரதிமா டீ போட உள்ளே போக, வசந்த் சதாசிவத்தின் அருகில் உட்கார்ந்து கொண்டு, "பயப்படாதீங்க மாமா ஸார். கோர்ட்டில் பூந்து விளையாடுவோம்"

"முதல்ல இது கோர்ட்டுக்கு வராது. போலீஸ் விசாரிக்கணும்."

"பாஸ், ஒரு ரிட் போட்டுட்டா என்ன. ரிட் ஆப் மாண்டமஸ்."

"போடலாம் போடலாம்."

ப்ரதிமா டீ கலக்கிக் கொண்டே உள்ளே வந்தவள், "அப்படின்னா என்ன?"

"அதாவது ப்ரதிமா, வந்து ரிட்டில் அஞ்சு வகை இருக்கு. ஸர்ட்டிரியோராரி, ஹேபியஸ், கார்ப்ஸ், மாண்டமஸ்...

"டேய் போதும்டா! ப்ரதிமா இவன் ரொம்ப ரீல் விடுவான். சந்து கிடைச்சா போதும்."

ராத்திரி ரம்மி ஆடினார்கள், சதாசிவம் எட்டரைக்கே படுத்துவிட்டார். வசந்த்தை ரூமுக்குப் போய் சில ஆடைகளை எடுத்து வர அனுப்பி வைத்தான் கணேஷ். ப்ரதிமா சாப்பிட்டுவிட்டு, "உங்க வசந்த் நல்லவர், ரொம்ப நல்லவர். ரொம்ப தமாஷ் அந்த ஆளு."

"ப்ரதிமா அவன் ரொம்ப கொஞ்சுவான். ஓசைப்படாம கணக்குப் பண்ணிடுவான். ஏமாத்திருவான்! உலகத்தில இருக்கிற அத்தனை பெண்களும் அவனுக்கு இஷ்டம்."

சதாசிவம் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தவர். "ஆமா ப்ரதிமா கணேஷ் சொல்றதைக் கேளு. ஹி இஸ் எ மெர்ச்சுர்ட் மேன்."

"இந்தப் புஸ்தகம் எல்லாம் யார் படிக்கிறாங்க?"

"நான்தான்" என்றார் சதாசிவம்."

"அப்ப ஒரு காலத்தில் உங்களுக்குக் கண்ணு..."

"தெரிஞ்சுக்கிட்டு இருந்தது. நாலு வருஷமா க்ளாக்கோமா வந்து ஆபரேஷன் கொஞ்சம் லேட்டாப் போய் ஆப்டிக்கல் நெர்வ் வீக்கா போயி நாலு வருஷமா பார்வை மங்கிப் போச்சு."

கணேஷ் அலமாரியிலிருந்து புத்தகங்களைப் புரட்டினான்.

"உங்களுக்கு ராபின்க்கு பிடிக்கும்போல" என்றான்.

ராத்திரி ப்ரதிமாவுடன் வினோதமான செஸ் ஆடினான்.

ஒவ்வொரு மூவையும் அவள் சதாசிவத்திடம் சொல்ல, "பிஷப்பால யானை வெட்டு" என்று அவர் அந்த செஸ் போர்டின் வடிவத்தை மனப்பாடத்தில் ஆடினார். கணேஷ்தான் ஜெயித்தாலும், "ரிமார்க்கபிள் ஸார். க்ராஃபிக் மெமரி!"

"கண் தெரிஞ்சப்ப நிறைய செஸ் ஆடியிருக்கேன்" என்றார்.

வசந்த் "ஸாருக்கு கண் மட்டும் தெரிஞ்சா உலகத்தையே..."

"தெரிய வேண்டாம்பா, என் பொண்ணு செத்துப் போனதை பார்த்திருக்க வேண்டாம்பா" என்றபோது அவர் கலங்கிய கண்களில் கண்ணீர் வரம்பிட்டது.

கணேஷ், "கவலைப்படாதீங்க ஸார், உங்க மாப்பிள்ளைக்கு தண்டனை கிடைக்கும்படி செய்யறோம்."

www.writersujatha.com

"அவன் தூக்கு தண்டனை பெறக்கூடாது. ஆயுள் தண்டனை கெடைச்சு அணுஅணுவா செய்த காரியத்துக்கு வருத்தப்படணும். தூக்கில போட்டா நிமிஷத்தில காரியம் முடிஞ்சுர்றது. அவன் ஜெயிலுக்குப் போறதுக்கு முன்னாடி ஒருமுறை என் முன்னால கொண்டு வர ஏற்பாடு செய்யுங்க கணேஷ்."

"எதுக்கு?" என்றான் வசந்த்.

"அப்படியே மூஞ்சில ப்ளேடால கீறணும்! நெருப்புப் பெட்டி வச்சு சட்டையைப் பற்ற வைக்கணும்" என்றார் சதாசிவம். வெறுப்பில் அவர் கண்கள் ஒளிர்ந்தன.

## 11

மறுதினம் வசந்த் சுறுசுறுப்பாக போலீசுக்கு மனு தயார் செய்தான். "எந்தப் போலீஸ் ஸ்டேஷன்னுதான் பாஸ் குழப்பமா இருக்கு."

"சதாசிவம் இருக்கற ஏரியாவிலதான் கொடுக்கணும். சம்பவம் நடந்தது அகமதாபாத்."

"அவங்க கேஸை ட்ரான்ஸ்ஃபர் பண்ணிக்கட்டும். நம்மை பொறுத்தவரை எந்தப் போலீஸ் ஸ்டேஷன்ல வேணா புகார் பண்ணலாம்."

"கொஞ்சம் பப்ளிஸிட்டியோட இதை பண்ணலாம் பாஸ், பத்திரிகைகாரங்களைக் கூப்பிட்டு."

"வேண்டாம் வசந்த். மிகைப்படுத்த வேண்டாம் 'ஹைப் வேண்டாம்."

www.writersujatha.com

வசந்த் அவன் சொல்வதைக் கேட்காமல் டெலிபோனை சுழற்றி, "யாரு ஜயந்தா? எப்படி இருக்க? சிஸ்டர் சௌக்யமா? கல்யாணம் ஆய்டுத்தா? என்ன ஒரு பாதகம்! எங்கிட்ட ஒரு வார்த்தை சொல்லக்கூடாதா ஜயந்த். நான் உன்னைக் கூப்பிட்டது எதுக்குன்னா" கணேஷ் அவனை முறைத்துப் பார்ப்பதைக் கவனிக்காமல்...

"மகேந்திரன்னு ஒரு பட்சி... ஐ... ஏ.எஸ். ஆபீசர் இருக்கார். அவங்க ஒய்ஃப் சமீபத்தில எரிஞ்சு போய்ருக்காங்க. அதை ஹஷ் பண்ணியிருக்காங்க. மனைவி சந்தேகமான சூழ்நிலைல இறந்ததால கேஸை மறுபடி கிளப்பப்போறோம். கொஞ்சம் பப்ளிஸிட்டி வேணும்."

வசந்த் போனை வைத்தான்.

"ஃப்ரண்டு ஜெயந்த், பிடிஐ. பாஸ் கொஞ்சம் தலை வாரிக்கங்க. போட்டோ எடுக்கறப்ப தலை கலைஞ்சிருக்க கூடாது."

"வசந்த் நீ பண்றது ரொம்ப தலைகீழ்த்தனமா இருக்கு. கேஸை அவங்க எடுத்துக்கிட்டப்புறம் பப்ளிஸிட்டி, அதும் அளவா."

"பாஸ் உங்களுக்கு விவரம் தெரியாது. இதுக்கெல்லாம் ப்ரஸ் கவரஜ் வேணவே வேணும், பாருங்க டிவிலகூட வருவாங்க. இப்பல்லாம் பயங்கர ஆட்டானமி."

ஜயந்த் சொல்லி வைத்தாற்போல அரைமணிக்குள் போட்டோ கிராபர் இளைஞனுடன், "வந்தாச்சு" என்றான் வசந்த். "ஜயந்தா, வா சொல்றேன். ஆதிபர்வத்திலிருந்து."

"சொல்லு... சார் ஒதுங்கிக்கிறிங்களா..." 'பளிச் பளிச்' கணேஷ் நடப்பது பிடிக்காமல், "மிஸ்டர் ஜெயந்த், முதல்ல நாங்க பெட்டிஷன் கொடுக்கப்போறம் அதுக்கப்புறம்...டு ரீ ஓப்பன், தி கேஸ்."

"பயப்படாதிங்க. யாரு இந்த ஐ.ஏ.எஸ். சொல்லுங்க?"

"மகேந்திரன்னு!"

"பேட்டி முடிஞ்ச உடனே அவரையும் போய்ப் பாத்துரலாம். விக்ட்டிம் பேரு...?"

"நாராயணி."

"ஆமா. அப்பா பேரு சதாசிவம், தங்கை பேரு ப்ரதிமா."

"தங்கைங்கள்ள ஸ்பெஷலிஸ்டாச்சே இவன். ஸார் கணேஷ் இவனை எப்படி வெச்சுக்கிட்டிருக்கிங்க? ரொம்ப உமனைஸராச்சே!"

"டேய், அதெல்லாம் திருத்திட்டேண்டா. பெண்களையே ஒரு நா விட்டு ஒரு நா மறந்துட்டேன். துறந்துட்டேன். ஒரே ஒரு பெண்தான் கொஞ்சம் வாட்டறா. நீ என்ன பண்ற, சதாசிவத்தைப் பேட்டி எடுக்கறப்ப என் கூட வந்துரு. என்னைக் கூப்பிட்டுரு, என்ன?"

"சரி."

அவன் நோட்டுப் புத்தகத்தில் விவரமாக கிறுக்க ஆரம்பிக்க கணேஷ், "வசந்த் ஐம் கோயிங்..."

"எங்க பாஸ்?"

"வெளியே. பேட்டியெல்லாம் முடிச்சுட்டு வா," ஆயாசத்துடன் புறப்பட்டான்.

கேஸ் அத்துமீறுகிறது. அதிகம் விளம்பரம் ஆரம்ப காலத்தில் கூடாது. எத்தனையோ விவரங்கள் சரிவரத் தெரியவில்லை. ரஞ்சனி ஷர்மா எங்கே? அவள் காணாமற் போனதைப் பற்றி ஒரு ரிப்போர்ட் கொடுக்க வேண்டாமா? யாராவது கொடுத்திருப்பார்கள். காவல்காத்த எட்கான்ஸ்டபிள் பதிவு செய்திருக்கலாம். போலீஸ் நிலையத்தில் விசாரித்தால் என்ன?

மெல்ல நடந்து காரின் சாவியைத் திறக்குமுன் கொஞ்சம் யோசித்தான். மாருதியின் கதவில் உள்பட்டன் நின்றுக்கொண்டிருந்தது. வரும்போது பூட்டியது ஞாபகம் வந்தது.

யாரோ கரவைத் திறந்திருக்கிறார்கள். சீட்டருகில் ப்ளோர் போர்டில் ஒரு பெட்டிபோல வைத்திருந்தது. கணே**ஷு**க்கு சகலமும் உயிர்பெற்று ஜாக்கிரதையானான். அந்தப்

பெட்டியிலிருந்து ஒரு மின் இணைப்பு இருப்பதைப் பார்த்தான். இப்போது அவன் முழுதும் உஷாராகி, காரை தொடக்கூட விருப்பமில்லாமல் மறுபடி உள்ளறைக்கு வந்தான். "வசந்த் கொஞ்சம் வர்றியா?"

"என்ன பாஸ்?"

"கார்ல எதோ ஸ்ட்ரேஜ்ச் ஆப்ஜெக்ட் இருக்கு."

அதற்குள் பேட்டி எடுத்த ஜயந்த் போட்டோக்காரருடன் மோட்டார் சைக்கிளில் ஏறிச் செல்ல...

வசந்த் எட்டிப் பார்த்து, "திஸ் இஸ் சீரியஸ். மகேந்திரன் கொலைக்கும் அஞ்சமாட்டார்போல இருக்கு. பாஸ் நேரா இக்னிஷனுக்கு கனெக்ஷின் இருக்கு. ஸ்விட்சை போட்டிருந்தா வெடிச்சிருக்கும் தப்பிச்சிங்க. மச்சம் தீர்க்காயசு..."

"வசந்த், பார்த்து பார்த்து."

மெல்ல கதவைத் திறந்து லாவகமாக பிரித்து, சீட் அருகில் வைத்திருந்த அந்த பார்ஸலை வெளியே எடுத்து அதை ஆராய்ந்தான்.

"வெடிச்சிருந்தா கூரை பிஞ்சிருக்கும்... பாஸ், எனக்கென்னவோ இந்தக் கேஸ் பின்னணியில வேற ஒரு நரம்பு ஓடுதுன்னு தோணுது. கேவலம் ஒண்ணரைணா டவ்ரிக்காக இத்தனை வன்முறை கொஞ்சம் அதிகமாகப் படலை."

"ஆமா வசந்த் எனக்கும் அதுதான்."

"இந்த மாதிரி டப்பா எல்லாம் பஞ்சாப்லதான் விக்கறாங்கன்னு நினைச்சேன். நம்மூருக்கே வந்திருச்சா."

"வசந்த் டோண்ட் டச் இட்."

"இல்லை பாஸ். ரொம்ப க்ருட்பாம் இது. சும்மா பாட்டரி கனெக்ஷன் கொடுத்து சர்க்யுட் கம்பளிட் ஆனா ஸ்பார்க் வரும். வெடிக்கும்."

"எதுக்கும் ஒரு ஓரமாகவே வை. போலீசுக்கு ஒப்படைச்சுரலாம்."

"அவங்க பெரிசா பாம் டிஸ்போஸல் ஸ்க்வாடு கொண்டு வரட்டும்."

"ஒரு ஓரமா வெராந்தாவில வெச்சுரு..."

"பாஸ், உங்களுக்கு பஞ்சாப் ரோட்வேஸ் ஜோக் சொன்னேனோ..."

**போ**லீசுக்கு சொன்னபோது, வசந்த் சொன்ன மாதிரி ஒரு படையே வந்து சேர, அந்த டப்பாவை ஜாக்கிரதையாக கையாண்டு எடுத்துச் செல்ல "கணேஷ், கொஞ்சம் ஸ்டேஷன் வரைக்கும் வந்துட்டு போங்க" என்றார் இன்ஸ்பெக்டர் திருநாவுக்கரசு என்கிறவர்.

"சொல்லுங்க யாருக்கு உங்க மேல பாம் வெக்கறாப்பல விரோதம்?"

"அதை ஏன் கேக்கறிங்க அரசு, மகேந்திரன்னு ஒரு ஐஏஎஸ் அதிகாரி இருக்காரு..."

"என்ன டிபார்ட்மெண்ட்?"

"அது என்னவோ பேர் தெரியாத டிபார்ட்மெண்ட். அவர் முதல் மனைவி இறந்ததை சந்தேகப்பட்டு ஒரு பெட்டிஷன் கொடுக்கறதா ஒப்புக்கிட்டு அதிலிருந்து வந்தது வினை. ராத்திரி ஆளுங்களை வெச்சு அடிக்க முயற்சி. மாமனார்காரர் கண் தெரியாத கிழவர், அவரை அடிச்சுப்போட முயற்சி. அப்புறம் ப்ரதிமான்னு சிஸ்டர் இன்லா..."

"ஐ.ஏ.எஸ். ஆபிசரா?"

www.writersujatha.com

"ஆமாங்க."

"ஆச்சரியமா இருக்குதுங்க."

"அப்புறம் கேளுங்க. ராயப்பேட்டா ஆஸ்பத்திரியில் என்ன ஆச்சுன்னா..."

வசந்த் எல்லா விவரங்களையும் சொல்ல அரசு, "உங்களுக்கு ஒரு போலீஸ் ப்ரொட்டக்ஷன் போட்டுத் தரச் சொல்லட்டுங்களா?"

"வேணாம். ஆறிலயும் நூறிலயும் சாவுன்னு வள்ளுவர் சொன்னாரு."

"மகேந்திரன்னு கேள்விப்பட்ட பேரா இருக்கு. ஏம்பா, எட்கான்ஸ்ட்பிள்..."

"சற்று நேரம் முன்னாடி அவர்தான் ஒரு கம்ப்ளெய்ன்ட் கொடுக்கணும்னு போன்ல சொன்னாருங்க" என்றார் எட்கான்ஸ்டபிள்.

"என்னவாம்?" என்றார் கணேஷ்.

"இந்த மாதிரி நீங்க ரெண்டு பேரும் கேஸ் போடுவன்னு தொந்தரவு பண்றிங்களாம். ஹரஸ்மென்ட், பயமுறுத்துறிங்களாம்?"

"அடப்பாவி அப்படியா சேதி?"

"அவரையே போய்ப் பார்த்துரலாமே. போலீஸ்ல அதையே தீரவிரமா எடுத்துறதுக்கு முன்னாடி."

"ரஞ்சனி ஷர்மா எங்கேன்னு கேளுங்க அவனை."

www.writersujatha.com

"நீங்களே கேளுங்களேன்."

வசந்த், கணேஷ், இன்ஸ்பெக்டர் திருநாவுக்கரசு மூவரும் மகேந்திரனின் வீட்டுக்குப் போனபோது, கோவிந்தராஜன்தான் வரவேற்றார். நாராயணியின் படம் ப்ரேம் போட்டு மாட்டியிருந்தது ஹாலில்.

"உக்காருங்க வரச்சொல்றேன்" என்றார். உள்ளே போனார்.

“பாத்தா அப்படியே பீஸ்ஃபுல்லா இருக்கே..."

சற்று நேரத்தில் மகேந்திரன் உள்ளே வந்தார். வெள்ளை ஜிப்பாவும் வேட்டியும், துல்லியமாக இருந்தார்.

"ஹலோ இன்ஸ்பெக்டர், ஹலோ மிஸ்டர் கணேஷ் சௌக்கியமா? வசந்த், எப்படி இருக்கிங்க?"

"என்ன ஸார் நாடகம்?"

திருநாவுக்கரசு, "ஸார் இவங்க உங்க பேர்ல பெரிய கம்ப்ளெயிண்ட் கொடுக்கப் போறாங்க."

"அப்படியா. என்னவாம்?" என்றார் புன்னகையுடன்.

கணேஷ், "ஸார் பாசாங்கு ஏதும் வேண்டாம். வி ஆர் கோயிங்டு ஃபைல் எ பெட்டிஷன். உங்களை அப்படியே குடைஞ்சு எடுத்துடப் போறோம்."

"எதுக்கு?"

"உங்க மனைவி இறந்ததை, கேஸை ரீ ஒப்பன் பண்றதுக்கு."

"யாருக்காக கேஸ் போடப் போறிங்க? ஹூ இஸ் தி பெட்டிஷனர்?"

"சதாசிவம், உங்க மாமானார். அப்புறம் ப்ரதிமா உங்க ஸிஸ்டர் இன்லா."

மகேந்திரன் இன்னமும் புன்னகைமாறாமல் இருந்தது கணேஷுக்கு வினோதமாகப் பட்டது.

"சதாசிவம், ப்ரதிமா, அப்படித்தானே? அப்பா கொஞ்சம் அவங்களைக் கூப்பிடறிங்களா?"

அப்போதுதான் அருகே கோவிந்தராஜனும் நின்று கொண்டிருப்பதைக் கவனித்தான்.

அவர் உள்ளே செல்ல, சற்று நேரத்தில் சதாசிவமும் ப்ரதிமாவும் வந்து நிற்க...

"சொல்லுங்க ஸார்."

சதாசிவம் தெளிவாக, "இன்ஸ்பெக்டர்! தேர் ஹஸ் பீன் எ டெர்ரிபிள் மிஸ் அண்டர்ஸ்டாண்டிங். என் மாப்பிள்ளை மகேந்திரன் குற்றவாளியே இல்லை. அவர் மேல சந்தேகப்பட்டது ரொம்ப தப்பு. நாங்க எதும் கேஸ் போடப் போறதில்லை."

வசந்த், "ஸார் அடிக்கு பயந்துண்டு சொல்றார்... தனியா கூப்பிட்டு கேளுங்க. ரஞ்சனி ஷர்மா கேளுங்கோ, வேர் இஸ் ஷி."

"காட்டறேன் வாங்க" என்றார் மகேந்திரன்.

## 12

'ரஞ்சனி ஷர்மா உயிரோட இருக்காங்களா?" என்றான் வசந்த் அசந்து போய்.

"ஆமா. ஜே ஜே ஆஸ்பத்திரியில் ரூம் நம்பர் எட்டில, ஸ்பெஷல் வார்டில் இருக்காங்க. வேகமா குணமாயிட்டு இருக்காங்க."

"ரஞ்சனி ஷர்மா?"

"சாட்சாத்" என்றார் மகேந்திரன் புன்னகை தவறாமல்.

வசந்த் கணேஷைப் பார்த்து, "ஸார், ராயப்பேட்டை ஆஸ்பிட்டல்ல இருந்து காணாம போயிரவே..."

"என்ன சொல்றீங்க? புரியற மாதிரி சொல்லுங்க."

மகேந்திரன் நிதானமாக "இன்ஸ்பெக்டர், நான் புரியற மாதிரி சொல்றேன். நண்பர்கள் கொஞ்சம் அதிகமா கற்பனை உள்ளவங்க. ரஞ்சனி ஷர்மான்னு எங்க ஆபீஸ் ஸ்டாஃப்ல ஒரு பெண் இருந்தா அவளை யாரோ முகமில்லாத எதிரிகள் தாக்கி..."

"யாரோ இல்லை, ஸார்தான் தாக்கிருப்பார். எங்கள அவசரமாக கூப்பிட்டனுப்பி, போய்ப் பார்த்தா தாக்கல்– ராயப்பேட்டை ஆஸ்பத்திரி..."

"அந்தப் பொண்ணை நான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன். தாக்குவேனா? நான் செய்தது அவளை ராயப்பேட்டை ஆஸ்பத்திலிருந்து அழைச்சுட்டுப்போய் ப்ரைவேட் நர்ஸிங் ஹோம்ல சேத்ததுதான். அதை இவங்க மிஸ்டேக் பண்ணிட்டு..."

"இல்லை. சதாசிவம், என்னங்கறிங்க இப்ப?"

"கணேஷ், வசந்த், என் மாப்பிள்ளையோட உண்மையான குணம் இப்பதான் தெரிஞ்சது. என் பெண் நாராயணி விபத்திலேதான் செத்திருக்கா. மாப்பிள்ளை காரணமே இல்லை. நிரபராதி. ஐ வாஸ் மிஸ்டேக்கன் கணேஷ். உங்க ரெண்டு பேருக்கும் தொந்தரவு கொடுத்ததுக்கு ரொம்ப ஸாரி. லீகல் அட்வைஸ்க்கு என்ன பீஸ் உண்டோ அதை வாங்கிண்டு..."

"சபாஷ்" என்று வசந்த் கை தட்டினான். இப்ப ரெண்டு பேரும் ஒரே கட்சியா? அதெப்படி ஸார் ஓவர் நைட் மாறிட்டீங்க? மகேந்திரன் வாங்கிட்டாரா உங்களையும்?"

"வசந்த், நாக்கை அடக்கிப் பேசுங்க. ஒரு கவர்மெண்ட் ஆபீசரை இன்ஸல்ட் பண்றிங்க."

"என்ன ஸார், எங்களை அடிச்சுப் போட ஆள் அனுப்பிச்சது நீங்க இல்லைங்கறிங்க?"

"நீங்க சொல்றதே புரியலை."

சதாசிவம். "வசந்த் ப்ளீஸ், கணேஷ் இந்தக் கேஸை தயவு செய்து தொடர வேண்டாம்னு கேட்டுக்கறேன்."

"அப்ப சுட்டி! ப்ரதிமா நீங்க என்ன சொல்றீங்க?"

"அப்பா சொல்றபடி செய்துருங்க வசந்த்."

"எப்படி எல்லோரும் ஸ்விச் போட்டாப்பல மாறிட்டிங்க? ஏதோ இட்சிணி வேலை. மகேந்திரன் கங்ராட்ஸ். எங்க வாழ்நாள்ளயே இதைவிட முட்டாளா உணர்ந்ததே இல்லை நாங்க, வாழ்த்துக்கள்! கல்யாண கடுதாசு அனுப்புங்க. ப்ரதிமா, உங்களை சந்திச்சதிலே சந்தோஷம். இன்ஸ்பெக்டர், ஸாரி ஃபார் தி ட்ரபிள்! கோமாளித்தனமா நடந்துட்டோம், ஸாரி. ஸாரி! தேர்தலுக்கு முன்னால வேட்பாளர் சொன்னாப்பல எல்லோருக்கும் ஸாரி! வர்றோம் என்ன?"

மாருதி காரில் ஏறி சீறிப் புறப்பட்டபோது, "என்ன பாஸ்! கொட்டைச்சுட்டாங்க. "குருவுக்கு நாமம்போட்டு கோபால பெட்டியில கை போட்டது போல"...என்ன ஆச்சு?"

கணேஷ் சிந்தனையில் இருந்தான்.

"எங்க போறோம்? அதுக்காவது பதில் உண்டா? சிம்பிளான கேள்வி."

"ரூமுக்குத்தான். வேற எங்க?"

"ஆத்து ஆத்துப் போவுது. ஒரு பீர் சாப்பிட்டாகணும்."

"அதுக்கு முன்னாடி ஜே ஜே ஆஸ்பத்திரிக்குப் போ."

"என்ன விசேஷம்?"

"ரஞ்சனி ஷர்மாவை ஒருமுறை பார்த்துட்டுப் போலாம்."

"எதுக்கு?"

"சும்மா கேள்வி கேக்காதே. கேஸ் ஒரு மாதிரி போவுது,"

"இனிமே செல்லாக்காசு பிரயோஜனமில்லை. விட்டுட்டு பேசாம ஒரு கல்யாணி பியர் இங்ச்சுட்டு படுத்தா."

"வா வசந்த்."

**ஜே.**ஜே. ஆஸ்பத்திரியில் ரிஸப்ஷனில் விசாரித்ததில் ரஞ்சனி ஷர்மா ஸ்பெஷல் வார்டில் படுத்திருப்பதாகச் சொன்னார்கள்.

"பார்க்க முடியுமா?"

"ஸாரி ஸார். விஸிட்டர்ஸ் ஸ்ட்ரிக்ட்டா அலவ்ட் இல்லைன்னு சொல்லியிருக்காங்க."

"யாரு?"

"அஸ்பண்டு."

"முதல்தா ரெண்டாவதா?"

"ஸாரி ஸார்!"

கணேஷ், "வா வசந்த்" என்றான்.

"ஆக ஷர்மா உயிரோடு இருக்கா! அஜய் ஷர்மா, சேத்தன் ஷர்மா, ரஞ்சனி ஷர்மா."

காரில் வீட்டுக்குப் போய்க் கொண்டிருக்கும்போது கணேஷ் சட்டென்று, "வசந்த், கன் வேணும்" என்றான்.

"கன்னா?"

"ஆமாம்."

"தோட்டா போட்டதா, இல்லை...வெத்தா?"

"தோட்டா போட்டது?"

"சுடறதுக்கா?"

"பின்ன எதுக்கு பிரயோகப்படுத்துவாங்க?"

"பயப்படுத்தறதுக்கும் பாஸ்!"

கணேஷ் வசந்த்தைப் பார்த்து, "கில்லாடிரா. மனசில இருக்கிறதை எப்படியோ படிக்கிறே."

"பாஸ், உங்க இதயம் கிளாஸ் கண்ணாடி. யாரைப் பயப்படுத்தப் போறீங்க?"

"சொல்றேன்."

"நான் சொல்லட்டுமா?"

"என்ன?"

"சதாசிவம்,"

கணேஷ் மறுபடி முறைத்துப் பார்த்து, "மேலே சொல்லு."

"அதுக்கு மேல உங்க எண்ண ஓட்டத்தைத் தொடர முடியலை. டூ ஃபாஸ்ட்."

"சதாசிவம் எதுக்காக மனசு மாறினார்?"

"ப்ரதிமாவை முதல்ல பயப்படுத்திப் பார்க்கலாமே. எங்கிட்ட விட்டுருங்க. போட்டு கன்ன வெச்சு துளைச்சர்றேனே."

"உனக்கு வேற வேலை இருக்கு!"

"என்ன?"

"ரஞ்சனி ஷர்மாவை எப்படியாவது பார்க்கறது."

"உள்ள விடமாட்டேங்கறாங்களே!"

"நீ பூராத ஆஸ்பத்திரியாடா? என்ன செய்வியோ. ரஞ்சனி சர்மாவைப் பார்த்து, அவ நம்மகிட்ட என்ன சொல்ல வந்தாங்கறதை தெரிஞ்சுக்கணும்."

"அவ்வளவுதானே, டன். ஜே.ஜே. ஆஸ்பத்திரியில மேரிக்குட்டின்னு யாராவது நர்ஸ் இருந்தே ஆகணும், அவகிட்ட தேங்கா பறிச்சுட்டா போச்சு."

கணேஷுக்கு ரெகுலேஷன் ரிவால்வர் ஒன்று நண்பனிடம் பெற்றுக் கொடுத்தபின் வசந்த் ஆஸ்பத்திரிக்குப் போனான்.

"ரொம்ப நாளா இடது பக்கம் வலிங்க. மாடிபடி ஏறினா மூச்சு வாங்கறது."

"டாக்டர் இல்லியா?" என்றாள் அந்த நர்ஸ். "ட்யூட்டி டாக்டர் இதப்ப வராது."

"உங்க பேரு மேரியா?"

"இல்லியா. ஓமனா."

"ஓமனா, உங்களைப் பார்த்தா என் சிஸ்டர் ஓர்மை வராது."

"மலையாளம் அறியுமா?"

"கொறச்சு. உங்க புஞ்சிரி இருக்கு பாருங்க. அந்த அளவுக்கு."

அந்தப் பெண், "ஏய்! ட்யூட்டியில் இப்படியெல்லாம் சம்சாரிக்கக் கூடாத்து" என்றாள்.

"எப்படியாவது நீங்க தொட்டதிலேயே வலிபாதி போய்டுத்து. ட்யூட்டி டாக்டர் எப்ப வரும்?"

"இதப்ப வரும்."

"யார் ட்யூட்டி டாக்டர்?"

"சார்ட்டில் போட்டிருக்கு.

"சார்ட் எவட?"

"அடுத்த மூரியில."

"பார்க்கலாமோ?"

"ஓ...தாராளம்."

"உங்க கண்ணைப் போல" என்று சொல்லிவிட்டு சார்ட்டைப் பார்க்கப் போன வசந்த், நழுவி மாடிப்படிகளில் விருட்டென்று ஏறி, ஸ்பெஷல் வார்டு விசாரித்து எட்டாம் நம்பர் அறைக்கு ஒரு நிமிஷத்தில் வந்துவிட்டான்.

பிஸிஷன்ஸ் ரெஸ்ட் ரூம் என்று பார்த்தான். அதில் மாட்டியிருந்த ஸ்டெத்தையும் பார்த்தான்.

டாக்டர் வசந்த் உள்ளே நுழைந்து, ட்யூட்டியில் இருந்த நர்ஸைப் பார்த்து, "பேஷண்ட் இஸ் ஸ்லீப்பிங்கா" கேட்டான்.

"எஸ் டாக்டர்."

"பிபி எடுத்தீங்களா?"

"எடுத்தோம்."

"மறுபடி எடுக்கணும். எழுப்புங்க."

"டாக்டர் எழுப்பக் கூடாதுன்னு,"

"நான் சொல்றேன், எழுப்புங்க."

சிஸ்டர் தயக்கத்துடன் ரஞ்சனி ஷர்மாவை எழுப்ப அவள் கண் விழித்தாள். "ஹலோ, எப்படி இருக்கீங்க?'--சிஸ்டர் பிபி எடுத்து வரச் சென்றாள்.

அவளுக்கு நேரமாயிற்று. வசந்தை அடையாளம் கண்டு கொள்ள.

"வசந்த்! நீங்க எப்படி?"

"அதெல்லாம் அப்புறம் ஷர்மா, ஆர் யு இன் டேஞ்சர்?"

"ஆமாம்" என்றாள்.

"யார்ட்டருந்து, மகேந்திரன்தானே?"

"இல்லை."

"பின்ன யாரு?"

அவள் சொல்லி முடிப்பதற்குள், "சிஸ்டர் என் ஸ்டெதைப் பாத்தீங்களா?" என்று உள்ளே வந்த நிஜ டாக்டர், "ஹலோ, யாரிது? செக்யூரிட்டியைக் கூப்பிடுங்க சிஸ்டர்" என்று சொல்ல, வசந்த் "டாக்டர், வாங்க. நான் ரஞ்சனியோட கஸின், ஹௌ இஸ் ஷீ?"

"நீங்க டாக்டரா?"

"ஆமாம் ஹார்ட் ஸர்ஜன். எப்படி இருக்கா? பல்மனரி இடிமா போல இருக்கே!"

"பல்மனரி இடிமாவா, யார் சொன்னது?"

"சரியாப் பாருங்க டாக்டர், வில் யு லீவ் அஸ் எலோன். செஸ்ட்டை எக்ஸாமின் பண்ணனும். உங்க ஸ்டெத் எங்க, தொலைச்சுட்டிங்களா?"

"ரெஸ்ட் ரூம்ல வெச்சிருந்தேன். பாத்ரூம் போயிருந்தேன் காணம்."

"ஏதாவது அடையாளம்?"

"இதே போலத்தான் பச்சை கலர்?"

'எக்ஸ்க்யுஸ் மி" என்று அவர் சொல்ல, வசந்த் மறுபடி "சொல்லுங்க ரஞ்சனி. யார் உங்கள துன்பப்படுத்தறது? மகேந்திரன்தானே?"

"இல்லை."

"பின்ன?"

"தாத்தா"

வசந்த் "யாரு தாத்தா?" என்பதற்குள் ஓமனா உள்ளே வந்தாள்.

## 13

"இதோ இந்தாளுதான். அவுட்பேஷண்ட்டா உள்ள வந்து..." என்று நர்ஸ் ஓமனா உதடு துடிக்கச் சொல்ல "யார்றா நீ?"

"போலீஸ்" என்றான் வசந்த்.

"ஸாரி, யார் ஸார் நீங்க?"

"ஒரு கேஸை விசாரிக்க..."

"இவர் போலீஸ் இல்லை. லாயர்" என்றாள் ரஞ்சனி ஷர்மா.

"போச்சு. காலை வாரி விடறீங்களே?"

"போலீஸுக்கே போன் பண்ணிட்டாப் போச்சு" என்று ட்யூட்டி டாக்டர் போனை எடுத்தார்.

"அதுகெல்லாம் தேவையிருக்காது. நானே அங்கதான் பொடி நடையா போயிண்டிருக்கேன்."

"அலோ போலீஸ் ஸ்டேஷனா?"

"அதுக்கெல்லாம் தேவையில்லைன்னா சின்னக் குழந்தை மாதிரி பிடிவாதம் பிடிக்கறீங்களே."

வசந்த் சந்தர்ப்பம் பார்த்து நழுவ விரும்ப "எங்க போறது?" என்றாள் ஓமனா.

"வா, என்னை பிடிச்சுப் பாரு. போகாம தடுத்துப் பாரு ஓமனா... கிட்ட வந்தால் சவுட்டும்."

"அய்யோ டாக்டர்! யாரு?"

"டேய், இங்க வா?"

"டேய் கீய்னு எல்லாம் கூப்டாதீங்க. நான் என்ன தப்பு செய்தேன்? விசிட்டர்ஸ் பாஸ் இல்லாம நுழைஞ்சேன். அவ்வளவுதானே?"

டாக்டர் அவன் கையைப் பிடிக்க வந்ததை முரட்டுத்தனமாகத் தள்ளினான்.

"டோண்ட் டச் மி! கொலை கேஸை விசாரிச்சுட்டு இருக்கோம்! ரஞ்சனி, அப்புறம் உங்களை வந்து சந்திக்கிறேன். ஏதாவதுன்னா இந்த போன் நம்பருக்கு கால் போடுங்க."

வசந்த் நழுவ ஆர்டர்லி அவனைப் பிடிக்க முயற்சிக்க வந்தான். நின்று அவனை காட்டமாக முறைக்க அவன் தயங்கினான்.

"மரியாதை கெட்டுப் போய்டும்" என்று நிதானமாகவே நடந்து சென்றாள்.

"சும்மா தடாலடி பண்ணிட்டு வந்துட்டேன் பாஸ்!" என்றான் கணேஷிடம்.

"ஆமா, நீங்க போன காரியம் என்ன ஆச்சு?"

"ரொம்ப இன்ட்ரிகிங்."

"என்ன?"

"சதாசிவத்தைப் பாக்க போனேனா? எல்லாம் வராந்தாவில நாற்காலிகளைப் போட்டுண்டு சதாசிவம், ப்ரதிமா, ஐ.ஏ.எஸ்., கோவிந்து எல்லாரும் 'சியர்ஸ் சியர்ஸ்'னு செலிப்ரேட் பண்ணிண்டிருக்கா நிலா வெளிச்சத்தில, லைம் ஸோடா ஸ்காட்சு."

"கன் எடுத்து போனது வெத்துதானா?"

"எல்லாம் நிஜமாவே சமாதானமாய்ட்டாங்க."

"பாஸ் விட்டுர வேண்டியதுதான்."

"ரஞ்சனியைப் பார்த்தியா?"

"பார்த்தேன் பாஸ். முழு விவரமும் கிடைக்கல. அதுக்குள்ள வேசங் கலைஞ்சிடுத்து."

"என்ன விவரம் கெடச்சுது?"

"தாத்தாதான் காரணம்னா."

"தாத்தாவா? யாரு?"

"யாரை சொல்றான்னு கேக்கறதுக்குள்ள ஓமனா குலுங்க குலுங்க வந்தாச்சு."

“ஓமனாவா? யாரது?"

"நர்ஸ்"

"ஏண்டா, நான் உன்னை நர்ஸ் பேர் கேக்கவா அனுப்ச்சேன்."

"அந்த தகவல்தான் உருப்படியா தெரிஞ்சது."

"தாத்தாவா? கோவிந்தராஜனைச் சொல்றாளோ?"

"இருக்கலாம். என்னவோ அவர் முழியே சரியில்லை."

"மொத்தத்துல எல்லாரும் ஒரு கட்சியா சேர்ந்துண்டப்புறம் நாம எதுக்கு மன்றாடணும்?"

"அதானே, வாங்க கிளப்புக்கு. ஒரு கை ரம்மி ஆடிட்டு தோத்துட்டு வரலாம்."

வசந்தும், கணேஷும் காரில் கிளப்புக்குப் போகையில் பின்னவன் சிந்தனை வசமாகியிருந்தான்.

"பாஸ், டெண்டிஸ்ட் ஜோக் சொல்லட்டுமா?"

"வேண்டாம்."



www.writersujatha.com

"ரொம்ப கடுப்பா இருக்கீங்க போல."

"வசந்த், நான் சதாசிவம்கூட செஸ் ஆடினேனே, ஞாபகம் இருக்கா?"

"என்னைக்கு? நான் இல்லைன்னு நெனைக்கிறேன். ப்ரதிமா கூடப் போய்ட்டேன்."

"அந்த ஆட்டத்தில ஒண்ணு கவனிச்சேன்."

"என்ன?"

www.writersujatha.com

கணேஷ் மவுனமாகி விட்டான்.

"என்ன பாஸ், நான் உண்டா இல்லையா?"

கணேஷ் தொடர்ந்து "அந்த புத்தகத்தில கையெழுத்து போட்டிருந்த தேதி."

"எந்தப் புத்தகத்தில? எந்த கையெழுத்து?"

"சதாசிவம், சதாசிவம் நோ."

"என்ன சொல்றீங்க? ஒரு எழவும் புரியலை."

"காரைத் திருப்பு."

"எதுக்கு?"

"சதாசிவத்தைப் பாக்கணும்."

"எதுக்கு?"

"ப்ரதிமாவைப் பாக்கணும்."

வசந்த் காரைத் திருப்பி சதாசிவத்தின் வீட்டுக்குச் சென்றபோது, அவர்கள் இன்னமும் வாசல் வராந்தாவில் வெளிச்சத்தில் உட்கார்ந்து உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். வசந்த் காரை முதலிலேயே அணைத்து, கதவை மெல்ல சார்த்துவிட்டு அருகே வந்தார்கள்.

www.writersujatha.com

"ஹலோ, மே வி ஜாய்ன் யு..."

திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தார்கள். உடனே மவுனம் நிலவ, ப்ரதிமாதான் "ஷ்யர், ஒய் நாட்?" என்றாள்.

வசந்த் காலி நாற்காலியை இழுத்துப் போட்டுவிட்டு, "என்ன ஸார், எல்லோரும் சேர்த்துண்டு பாஸை கடுப்பாக்கிட்டீங்க?"

கணேஷ் ஓரமாக நின்று கொண்டிருக்க, மகேந்திரன் அருகில் ப்ரதிமா உட்கார்ந்துகொண்டு அவளிடம் அவர் கைரேகை காட்டிக் கொண்டிருந்தார்.

மகேந்திரன், "உட்காருங்க கணேஷ்."

"இருக்கட்டும்."

"உங்க ப்ரெஃபஷனல் செலவுகள் எல்லாம் எத்தனை ஆச்சுன்னு சொன்னா கணக்குப் போட்டு கொடுத்துருவோம்."

கணேஷ் சிரித்தான்.

ப்ரதிமா, "ஸாரி! அப்பா உங்களுக்கு ட்ரபிள் கொடுத்துட்டார்ல்லை?"

"பரவாயில்லை" என்றான் வசந்த்.

மகேந்திரன், "என்னைப்பத்தி உங்ககிட்ட ஒரு கெட்ட அபிப்ராயத்தை ஏற்படுத்தி..."

"எல்லாம் என் தப்பு. மாப்பிள்ளை தங்கம்னா தங்கம். மகேந்திரன் என்னை மன்னிச்சேன்னு இன்னும் சொல்லலையே?"

"அப்பா அவர்தான் பரவாயில்லைன்னு பலமுறை சொல்லிட்டார்ப்பா."

"நான் ஒரு மடையன், மடையன்" என்று தலையில் அடித்துக் கொண்டார்.

கணேஷ், "இன்னைக்கு நியூஸ் பேப்பர் இருக்குதுங்களா?" என்றான்.

"என்ன?"

"மகேந்திரனைப் பத்தி உங்களைப் பத்தி எல்லாம் செய்தி வந்திருக்கே!"

"என்ன பேப்பர்ல?"

"எக்ஸ்பிரஸ்தானே?"

"அதில என்ன வந்தது?"

"மகேந்திரனை பத்தி பி டி ஐ ரிப்போர்ட் வந்திருக்கு. நீங்க படிக்கலையா சதாசிவம் சார்?"

ப்ரதிமா இதற்குள் அதை எடுத்துக்கொண்டு வர, அதை சதாசிவம், "முதல் பக்கத்திலேயே கொட்டையா தலைப்பு செய்தி வந்திருக்கே! சதாசிவம், உங்க பேரும் வந்திருக்கு!"

சதாசிவம் "எங்கே பாக்கலாம்" என்றார். அதைப் பிடுங்கிக் கொண்டார்.

சதாசிவம் அந்தச் செய்தித்தாளை எடுத்துப் பார்க்க கணேஷ், "மிஸ்டர் சதாசிவம், கண் தெரியாதவர் எப்படி இவ்வளவு ஆர்வமா பேப்பர் படிக்கிறீங்க?"

சதாசிவம் திடுக்கிட்டு, "ப்ரதிமா படிச்சு சொல்லு" என்றார்.

ப்ரதிமாவும், "அப்பா, எப்படி நீங்க?" என்று ஆச்சரியப்பட்டாள்.

"இப்பல்லாம் சுமாரா தெரிய ஆரம்பிச்சுடுத்தும்மா!'

"உங்கிட்ட சொல்லலையா?"

கணேஷ், "சார் உங்களுக்கு எப்பவுமே கண் நல்லாவே தெரிவே தெரியும்னு எனக்கு ஒரு சம்சயம்."

"சேச்சே, என்னப்பா நீ?"

"எதுக்கு பொய் சொல்றீங்க?" என்று வசந்த் சட்டென்று நாற்காலியை எடுத்து அவர் மேல் ஓங்க சதாசிவம் சட்டென்று தழைந்து கொண்டார்.

"கண் தெரியாதவர் எப்படி இப்படி பதுங்கறீங்க. கொரில்லா மாதிரி! அதும் ராத்திரியில!"

"அதானே" என்றான் கணேஷ்.

"சொன்னேனே இப்பல்லாம் நல்லாவே தெரியறது"

ப்ரதிமா, "அப்பா, எதையாவது எங்கிட்டருந்து எல்லாரும் மறைக்கிறீங்களா?"

"இல்லைம்மா, அபத்தம்,"

"அப்படி இருந்தா சொல்லிடுங்கப்பா. என்ன அத்திம்பேர்?"

"எனக்கு எதும் தெரியாதம்மா. கேஸ்னாங்க கேஸ் இல்லைன்னாங்க. அவ்வளவுதான்."

ப்ரதிமா, "வசந்த், நீங்களாவது இங்க என்ன நடக்குதுன்னு சொல்விங்களா?" என்றாள். அவள் கண்களில் சந்தேகம் தெரிந்தது.

வசந்த், "எங்களுக்கு தெரிஞ்சா உங்களுக்குச் சொல்லலாம். தெரியலையே! உங்க கேஸே ஏதோ அப்ஸர்ட் ட்ராமா மாதிரி இருக்கே! பாஸ்க்கு தெரியறாப்பல இருக்கு. ஆனா சரியா சொல்லமாட்டார். ரொம்ப அழுக்குணி!"

சதாசிவம், "கேஸ் எல்லாம் முடிஞ்சு போச்சும்மா ப்ரதிமா. இப்ப போட்டு உழப்பாதே!"

கணேஷ் சதாசிவத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"கொஞ்சம் கொஞ்சமா புரியுது ஸார்" என்றான்.

சதாசிவம், மகேந்திரன் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு, "என்ன சொல்றீங்க கணேஷ்?"

"முதல்ருந்தே கதை வேறதானே?"

"நாராயணி மறைந்ததைப் பற்றி கேஸ் போடறதை விட போடறதா பயமுறுத்துறதுதான் முக்கியம்னுபடுது. அதுக்காகத்தான் எங்க ரெண்டு பேரையும் அணுகி..."

"நீங்க சொல்றது அர்த்தமாகலை."

மகேந்திரன் எழுந்து, "காலைல ஆஃபீஸ் போகணும். அப்புறம் இதைப்பத்தி சாவகாசமா பேசலாம்."

கணேஷ் மகேந்திரனைப் பார்த்துக் கொண்டே "என்ன ஆபீஸ் ஸார் உங்களுது?"

"எ நேம்லஸ் ஆபீஸ் கணேஷ். ஹோம் மினிஸ்ட்ரியை சேர்ந்தது."

"அதானே பார்த்தேன்" என்றான் கணேஷ்.

## 14

கணேஷை மகேந்திரனும் சதாசிவமும் மாறி மாறிப் பார்த்தார்கள். "சொல்லுங்க சார்."

"என்னத்தைச் சொல்லறது?"

"ஆதியோடந்தமா எல்லாத்தையும் சொல்லிட்டா விட்டுருவோம். இல்லை, பாஸ் புடிச்சார்னா உடும்புப் பிடி. கண்டுபிடிக்காம விடமாட்டார்."

"இதில கண்டுபிடிக்க என்ன இருக்கு கணேஷ்?" என்றார் மகேந்திரன். "ரொம்ப சிம்பிளான கேஸ். நாராயணி விபத்தில் செத்துப்போனது என்னவோ சதாசிவத்துக்கு சம்மதமில்லை. என் பேர்ல சந்தேகம் வந்து உங்களைக் கூப்பிட்டு கேஸ் போடச் சொன்னார். இப்ப உண்மையைத் தெரிஞ்சுக்கிட்ட அப்புறம் கேஸை வாபஸ் வாங்கிட்டார். அவ்வளவுதான்."

"எல்லாம் சரிதான். அதுக்காக ஸார் எதுக்காக கண் தெரியாத மாதிரி பாவனை பண்ணணும்."

"எனக்கு நிசமாவே கண் சரியா தெரியலை கணேஷ், வைத்தியம் பார்த்துகிட்டு இருக்கேன். சொன்னா நம்புங்க."

"ப்ரதிமா நீங்க என்ன சொல்றீங்க. உங்கப்பா பேப்பர் படிக்கிறதைப் பார்த்து அதிர்ச்சியடைஞ்சுட்டீங்களே."

ப்ரதிமா தன் தந்தையைப் பார்த்து, "எனக்குக் குழப்பமாவே இருக்குது கணேஷ். அப்பா எதுக்காக கண் தெரியாத மாதிரி நடிக்கணும்? அதுக்குக் காரணம் இல்லாதவரையில் அவர் சொல்றதை நம்பத்தான் வேணும் இல்லையா?"

சதாசிவம் ப்ரதிமாவைப் பார்த்து, 'ப்ரதிமா எனக்கு கண்குறையா தெரிஞ்சாலும் உன்னுடைய ஸிம்பத்திக்காக கண் தெரியாத மாதிரி மிகைப்படுத்தினேன்."

"அதை நான் நம்பத் தயாரில்லைப்பா."

"மேலும் கேளுங்க மிஸ்டர் மகேந்திரன். நீங்க ரஞ்சனி ஷர்மாங்கற பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கப்போறது வாஸ்தவம்தானே?"

"ஆமாம்."

"அந்தப் பெண் என்கிட்ட ஏதோ சொல்ல முயற்சி பண்ணப்போய் அவளைச் சொல்ல விடாம தொடர்ந்து யாரோ தாக்கிக்கிட்டு இருக்காங்க. இப்பக்கூட ஜே.ஜே. ஆஸ்பத்திரில இருக்காங்க."

"அவளையே கேட்கலாமே."

"கேட்டேன் தாத்தான்னா."

'ரெண்டு தாத்தா இருக்காங்க. கோவிந்தராஜன், சதாசிவம் உங்க ரெண்டுபேர்ல யார் ஸார் சூத்திரதாரி?"

சதாசிவம் கோவிந்தராஜனும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு, "நீங்க என்ன சொல்றீங்கன்னே புரியலை" என்றார். "மகேந்திரா உனக்கு ஏதாவது புரியறதா?"

கணேஷ், மகேந்திரனையே பார்த்துக் கொண்டிருக்க, அவர், "கணேஷ், வாட்ஸ் இன் யுவர் மைண்ட். கொஞ்சம் புரியும்படி சொன்னீங்கன்னா—அது ஒரு விதத்தில அதீதமான கற்பனையா இருந்தாலும் கேக்க தயாரா இருக்கோம்."

"அதான், பரவால்லை சொல்லுங்க" என்றார் சதாசிவம்.

கணேஷ், ஒருமுறை வசந்த்தைப் பார்த்து, "என்ன வசந்த் சொல்லிடலாமா?"

"விடலாம் பாஸ்."

"சொல்லிடு."

"அய்யோ, எனக்கு உங்க மனசில இருக்கிறதில பாதி அம்பேல்." கணேஷ், "சதாசிவம் எல்லாமே, உங்க திட்டம்னு வெச்சுக்கலாமே?"

"என்ன திட்டம்?"

"மகேந்திரனைப் பயமுறுத்தி காரியம் பண்ண வெக்கணும்னு நீங்க விரும்பினீங்கன்னு வெச்சுக்கலாம்."

"என்ன காரியம்?"

"அதைப் பத்தி இப்பவே பேசவேண்டாம், ஏதோ ஒரு காரியம். அதைச் செய்யறதுக்கு மகேந்திரனை அடிபணிய வெக்கணும்னா அவர் மேல ஏதாவது புகார் லிட்டிகேஷன் கொண்டுவரதா சொல்லிட்டு காம்ப்ரமைஸ் வரதுக்கு கண்டிஷனா..."

மகேந்திரனும் சதாசிவமும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள, "சொல்லுங்க. சுவாரஸ்மா இருக்கு கற்பனை."

"கற்பனை இல்லை. நாராயணி இறந்தது சந்தேகமான சூழ்நிலை. அதனால எங்களைப் போல க்ளெவர் லாயர்ஸ் ரெண்டு பேரை வெச்சு நிறைய பப்ளிஸிட்டி கொடுத்து கேஸ் போட வெச்சா, மகேந்திரன் சொல்றதுக்கு சம்மதிக்கலாமில்லையா?"

"என்ன சொல்றதுக்கு சம்மதிக்கணும்?"

"ஏதாவது அவர் உத்தியோகம் சம்பந்தப்பட்ட சமாச்சாரம்னு வெச்சுக்கங்க."

மகேந்திரன், "ரொம்ப சுவாரஸ்யமான விஷயம். ஆனா எங்கிட்ட அப்படிப்பட்ட சென்ஸிட்டிவ் சமாசாரம் எதும் இல்லை."

"விலை போகக்கூடிய ரகசியம்."

"அப்படி என்ன ஒரு ரெவின்யு ஆபீஸர்கிட்ட இருக்க முடியும்?"

"மிஸ்டர் மகேந்திரன் நீங்க இப்ப இருக்கிற டிப்பார்ட்மெண்ட் பேர் என்ன?"

"எதுக்கு?"

"பெயர் இல்லாத முகமறியாத இலாகான்னு சொன்னிங்க இல்லை."

"இண்டலிஜென்ஸ் சம்பந்தப்பட்டது."

"என்ன இண்டெலிஜென்ஸ்?"

"மன்னிக்கணும். அதை நான் யார்ட்டயும் சொல்லக் கூடாது."

"பரவாயில்லை" என்றான் கணேஷ். "இப்ப நீங்க சொல்லாட்டாலும் வசந்த் கண்டு பிடிச்சுருவான் ஒரு நாளைக்குள்ள."

"என்னப்பா என்ன என்னவோ பேத்தறே!" என்றார் சதாசிவம்.

"பேத்தல் இல்லை ஸார். எல்லாமே பொருந்துது. இத்தனை நாள் வரைக்கும் மாப்பிள்ளையைக் கண்டா அத்தனை வெறுப்பா இருந்தவரு, எப்படி திடீர்னு மனசு மாறி முந்திரி பருப்பு சாப்பிடுறிங்க கூட?" என்றான் வசந்த்.

"சமாதானமாய் போய்ட்டோம். குற்றச்சாட்டு தப்புன்னு உணர்ந்தாச்சுன்னு சொன்னேனே."

"எப்படி திடீர்னு மாறிப் போச்சு?"

"ஏதாவது சம்பவம் இருக்க வேணுமா இல்லையா?"

"அப்படி ஏதும் இல்லை."

"நான் சொல்லட்டுமா? மகேந்திரன் நீங்க சொன்னதுக்கு சம்மதிச்சுட்டார்."

"என்ன சொன்னேன்?"

"ஏதாவது கேட்டதைக் கொடுக்க நீங்க கேட்டதைக் கொடுக்க."

ப்ரதிமா குறுக்கிட்டு, "வசந்த் நீங்களாவது கொஞ்சம் புரியும்படியா சொல்லக்கூடாது?"

வசந்த் இப்போது கணேஷின் சிந்தனைத் தொடரைப் பிடித்துவிட்டான். "பாஸ் இருங்க, நான் டிவில நிரோத் விளம்பரம் மாதிரி விளக்கமா சொல்லிடறேன். ப்ரதிமா உங்கப்பாவுக்கு நிஜமாகவே கேஸ் போட இஷ்டமில்லை. அவருக்கு மகேந்திரன் கிட்டருந்து அலுவலக ரகசியங்கள் தேவைப்படறது. யாரோ அதுக்கு நல்ல விலை கொடுக்கறதா பேரம் பேசியிருக்காங்க. அதுக்காக மகேந்திரனை எப்படி சம்மதிக்க வெக்கறது?

அதுக்கு உங்க அக்கா கேஸ் அகப்பட்டது. அதை வெச்சு பயமுறுத்தி, அவர் ரெப்புட்டேஷன் காரியர், ரெண்டாவது கல்யாணம் எல்லாமே கலைஞ்சு போகக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திக் கேஸ் ரொம்ப தீவிரமாகித் தோத்து போய்டும்ங்கற சூழ்நிலையில் அவர் பப்ளிஸிட்டியை விரும்பாம அந்தப் பயத்தில் மகேந்திரன் சம்மதிச்சிருக்கார்னு வெச்சுக்க."

"எக்ஸலண்ட்" என்று மகேந்திரன் கைதட்டி, "இதில எதையும் நீங்க நிரூபிக்க முடியாது. எல்லாமே கட்டுக்கதை. போய்ட்டு வாங்க" என்றார்.

'வரோம். ஆனா இதை விடமாட்டோம். டில்லில தெரு வைத்தியன் காது குடையறான் பாருங்க அந்த மாதிரி குடையப் போறோம்."

"ஆல் தி பெஸ்ட்" என்றார் மகேந்திரன்.

ப்ரதிமா. "என்னப்பா இரண்டு பேரும் உளர்றாங்க. கேட்டுக்கிட்டே இருக்கிங்க? நீங்க பண்ண சதியா எல்லாம்? என்ன ரகசியம் அத்திம்பேர்?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லைம்மா."

"இன்னும் ஒரு ரெண்டு மணி நேரத்தில அத்தனையும் வெளியே வந்துரும் பாருங்க. ஸ்ட்ரைக் முடிஞ்சதும் கார்ப்பரேஷன் குப்பை வண்டி மாதிரி."

"போடா" என்றார் சதாசிவம்.

கணேஷ் மகேந்திரனைப் பார்த்து, "ஸாரி மகேந்திரன் நீங்க சொன்னாப்பல எல்லாமே என்னுடைய கெஸ் ஒர்க்தான். யூகம்தான். இந்த மாதிரித்தான் நடந்ததுன்னு சொல்லலை. இந்த மாதிரி நடந்திருக்கலாம்னு சொல்றோம், அவ்வளவுதான்.

"அவ்வளவுதான்" என்று எழுந்து அவன் கையை இறுக்க பலமாகக் குலுக்கினார்.

திரும்பப் போகும்போது வசந்த், "என்ன பாஸ்? கடைசில புத்தியைக் காட்டிட்டீங்களே. சேம் சைட்கோல் போட்டுட்டிங்களே?"

"வசந்த் முதல்ல மகேந்திரன் என்ன வேலை பார்க்கறார்? அவர் உத்தியோகம் என்ன? எந்த டிபார்ட்மெண்ட்? எல்லாம் தெரியணும்."

"அதுக்கு முன்னாடி ரஞ்சனி ஷர்மா என்ன சொல்ல வந்தா. அதைத் தெரிஞ்சுக்கணும்."

"எல்லாம் சரிதான் பாஸ். நீங்க சொன்னாப்பலயா நடந்தது?"

"சும்மா ஒரு தடலாடி பண்ணிப் பார்த்தேன்."

"நேரடியா ஒரு விளக்கம் இருக்கலாமில்லையா?"

"அந்தாளு எதுக்காக கண் தெரியாத மாதிரி ஆக்ட் பண்ணணும். அதான் பொருந்தலை வசந்த்."

"ஏதோ காரணம் சொன்னாரே?"

"சரியாயில்லை."

"அப்புறம் அந்தக் கேஸ்ல இருந்த வயலன்ஸ்–நம்மை அடிக்க பாத்தது–ரஞ்சனி ஷர்மாவை தாக்கினது"

"பாஸ் சதாசிவத்தையும்தான் அடிக்கப் பாத்திருக்காங்க. ஏதோ ஒரு அத்தியாயத்தில அவர்கூட அடி வாங்கலை?"

"ஆமா அது எப்படி இதில பொருந்தது?"

வசந்த் சற்று யோசனைக்குப் பின் "விட்டுரலாம். பாஸ், மொட்டைத்தலையும் முழங்காலுமா இருக்குது.

ரஞ்சனி ஷர்மாவைப் பார்க்க ஜே.ஜே. ஆஸ்பத்திரிக்கு போனபோது கேட் மூடிவிட்டார்கள். இருட்டில் மேலே பார்த்தார்கள். கணேஷ், "பின்னால சர்வீஸ் ஸ்டேர்கேஸ் தெரியறது பாரு."

"ஏறிட்டா போச்சு. உங்ககூட தொழில் பண்றதில இன்னும் கன்னம் வெக்கலை."

"எத்தனை கன்னம் வெச்சிருக்க?"

"அந்தக் கன்னத்தைச் சொல்லலை பாஸ்."

ஸ்பெஷல் வார்டில்போய் அவர்கள் சேர்ந்தபோது வார்டின் பொது மேஜையில் நர்ஸ் எழுதிக்கொண்டிருக்க வசந்த், "ஓமனா" என்றான்.

அவள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

"ஓமனா நான்தான் வசந்த்."

குரல் எங்கிருந்து வருகிறது என்று விசாரிப்பதற்குள் வசந்த் இடம் மாறினான் கணேஷ் பதுங்கியிருந்தான்.

"வாங்க பாஸ்."

இருவரும் வார்டில் நுழைந்தபோது, ரஞ்சனி ஷர்மா ரத்த வெள்ளத்தில் கிடந்தாள்.

## 15

கணேஷ் வசந்துடன் வார்டில் நுழைய நர்ஸ் ஓமனா கூக்குரலிட்டாள்.

ரஞ்சனி ஷர்மா அமைதியாகப் படுத்திருந்தாலும் அவளைச் சுற்றிலும் ரத்தம் செதிள் செதிளாகப் படிந்திருந்தது.

"ஆள் காலி பாஸ், க்ளோஸ்."

"கொஞ்சம் லேட்டா வந்துட்டோம்."

"ஓமனா உயிர் இருக்கா பாருங்க."

இதற்குள் மற்ற நர்ஸ்கள் ட்யூட்டி டாக்டர் எல்லாரும் வந்துவிட–

"எப்படி ஆச்சு?"

"இ யாளு ரெண்டு பேரும் பர்மிஷன் இல்லாத்த உள்ள நுழைஞ்சுது போலீஸுக்கு சொல்லணும். வார்டு பாய்! இவங்களைப் பிடிச்சு வையுங்கப்பா."

"அதுக்கெல்லாம் தேவையில்லை. நாங்களே போலீஸுக்குச் சொல்லிடறோம்."

"முதல்ல மகேந்திரனுக்கு போன் பண்ணனும். வா வசந்த்."

"எப்படி வார்டுல எல்லாரும் இருக்கறப்ப..."

"சன்னல் வழியா யாரோ குதிச்சிருக்காங்க. சன்னல் கண்ணாடி உடைஞ்சிருக்கு பாருங்க."

"அய்யோ, இப்பதான் அந்தம்மா பேசிக்கிட்டு இருந்தாங்க."

"விதி."

www.writersujatha.com

கணேஷ் கைக்குட்டையை எடுத்து முகத்து வியர்வையைத் துடைத்துக் கொண்டான். "ரொம்ப சிக்கலான கேஸ் இது. போலீஸ் வர்ற வரைக்கும் இந்த இடத்தைவிட்டு அசையாதீங்க."

"சரிங்க. சிலை மாதிரி உக்காரவா? டாக்டர் பயப்படாதீங்க. நாங்க ரெண்டு பேரும் லாயர்ஸ். பொறுப்புள்ள குடிமக்கள்.

"பாஸ், பாஸ், யாருங்கறீங்க?"

"இன்னும் புரியலை வசந்த்."

"இந்தம்மா ரஞ்சனி நம்மகிட்ட ஏதோ போன் பண்ணி சொல்ல வந்தபோது ஆரம்பிச்ச வினை. ஞாபகமிருக்கா?"

இருவரும் வார்டின் காரிடாருக்கு வந்து போலீஸ் வரக் காத்திருந்தார்கள்.

"வசந்த் முதல்லருந்து ஒரு ஓட்டு ஓட்டிரலாம்மா? கதையைச் சொல்லு."

"ப்ரதிமாவும், சதாசிவமும் நம்மகிட்ட வந்தாங்க கேஸைச் சொன்னாங்க."

"அப்ப ஞாபகமிருக்கா? நீ ஒருமுறை அவரிடம் பேர் கேட்டபோது சதாசிவம் ஸார் ஒருமுறை நடேசன்னார்."

"அப்படியா? எனக்கு ஞாபகமில்லை."

"நீதான் ப்ரதிமாவைப் பார்த்துக்கிட்டு இருந்தியே. அப்பவே சதாசிவத்துக்கு தன்னுடைய உண்மையான பெயரைச் சொல்றதில தயக்கம் இருந்திருக்கு. கவனிச்சியா?"

"கில்லாடி பாஸ் நீங்க."

"அப்புறம் மகேந்திரனைப் போய்ப் பார்த்தோம். அந்தச் சூழ்நிலையில் வரதட்சிணைக் கொடுமையையும், வேணம்னிட்டே எரிச்சதையும் பொருத்த முடியலை. "எதுக்காக நாராயணியை நான் கொல்லணும்'னு உருக்கமா கேட்டார் மகேந்திரன். நம்பும்படியாத்தான் இருந்தது இல்லையா?"

"கடிதங்கள் காண்பிச்சதைச் சொன்னபோது மகேந்திரன் கொஞ்சம் ஜகா வாங்கிவிட்டார்."

"இதைவிட முக்கியம் அவர் இன்னைக்கு எஸ்.ஏ. வரார். மீட்டிங் இருக்குன்னு சொன்னாரே அதைக் கவனிச்சியா?"

"இல்லை பாஸ்."

"எஸ்.ஏ.ன்னா என்ன?"

"தெரியாது பாஸ்."

"நான் தெரிஞ்சுண்டேன். ஸைன்டிஃபிக் அட்வைஸர்."

"மகேந்திரன் வேலைல இருக்கிறது ராணுவ ஆராய்ச்சி சம்பந்தமா ஒரு பெயர் தெரியாத இலாக்கா."

வசந்த் யோசித்து, "அச்சா அச்சா" என்றான். "இப்பக் கொஞ்சம் மஞ்சு விலகறது."

"நாராயணியை அவங்க நேரடியா கொன்னிருக்காட்டாலும், ரொம்பக் கொடுமைப்படுத்தியிருக்காங்கன்னு தெரியறது. இந்தப் ப்ரசெண்ட் மூடு ஆஃப் தி கண்ட்ரி, நாட்ல இப்ப உள்ள உணர்ச்சிகரமான சூழ்நிலையில் நம்ம கேஸ் போட்டிருந்தா நிச்சயம் ஜெயித்திருக்கும். மகேந்திரனுக்கும் அவர் அப்பா, அம்மாவுக்கும் தண்டனை கிடைச்சுருக்கும். இதை மகேந்திரன் நல்லாவே தெரிஞ்சிண்டிருந்தார்."

அதுக்காகத்தான் டாட்டர் இன்லா எழுதினதாக கடுதாசியெல்லாம் காட்டி நம்மைக் குழப்பப் பார்த்தான். ரொம்ப டெஸ்பரேட்டா போயிட்டாங்க. நாராயணியை ஒரு வைல்டு காரக்டரா காட்ட பரிதாபகரமான முயற்சி. கடிதத்தில் இருந்த கையெழுத்தும் சதாசிவம் காட்டின கடிதத்தில இருந்த எழுத்துக்களும் வேறுபட்டதை கவனிச்சேன். கையெழுத்து பொய்யெழுத்துன்னு எக்ஸ்பர்ட்டு கூட சொல்லிட்டாரு."

"மகேந்திரன் சதாசிவத்தை ஆள் வெச்சு அடிச்சாரா?"

"இருக்கலாம். அல்லது சதாசிவம் அடிபட்ட மாதிரி பாசாங்கும் பண்ணியிருக்கலாம். கேஸை எடுத்துக்கலாமா, வேண்டாமான்னு தீர்மானமில்லாம இருந்ததாலே தன் பக்கம் அனுதாபத்தைச் சம்பாதிக்கிறதுக்காக அவர் ஆடிய ஒரு டிராமாவாகக்கூட இருக்கலாம். மகேந்திரனின் ஆட்கள் அவரை அடிச்சதா சொன்னது நீயும் ப்ரதிமாகிட்ட, காதல் கீதல்னு குழைய ஆரம்பிச்சே."

"அதுவந்து சும்மா ஒரு பாவலா பாஸ். கட்சிக்காரங்க கூட காதல் பண்றது என் ரத்தத்தில் புகுந்த சமாச்சாரம்."

"மகேந்திரனுக்கு மற்றொரு சிக்கல். ரஞ்சனி ஷர்மா அவரை மறுகல்யாணம் பண்ணிக்கறதுக்கும் இந்தக் கேஸ் ஒரு தடையா இருந்திருக்கு. ரஞ்சனி தீர்மானமில்லாத பெண். முதல் மனைவியை மகேந்திரன் ஃபாமிலி ஒருவேளை கொடுமைப்படுத்திக் கொன்றிருக்கக்கூடும்னு சந்தேகம் வந்ததும் கொஞ்சம் தயங்க ஆரம்பிச்சுட்டா. நம்மகிட்ட கூட வந்து சொன்னா பாரு."

"அவளை விசாரிக்கப்போய், அவ ராத்திரி அடிபட்டிருந்ததை பார்த்தமா...?"

"கேஸ் டாப் கியருக்கு தாவிருச்சு."

"ஆமாடா அதுக்கப்புறம் அவளை ஆஸ்பத்திரி மாற்றி அமர்க்களமெல்லாம் ஆயி, நம்மை வந்த வெத்து ஜனங்க உதைக்க முயற்சி பண்ணி..."

"இப்படி ரெண்டு கட்சியும் ரொம்ப பலாத்காரத்தில இறங்கிற நிலையில திடீர்னு அய்யா மனசு மாறிட்டார்."

"யாரு?"

"சதாசிவம். ஸ்விட்சு போட்டாப்பல."

"ஆமாம். அதுக்கு என்ன அர்த்தம்னு யோசித்துப் பார்த்தபோது எனக்கு ஒரு ஐடியா தோணிச்சு வசந்த்."

"என்ன பாஸ்?"

"நாராயணி கேஸ் எல்லாம் மேம்போக்கான காரணம். உண்மையான காரியம் மகேந்திரன் மேல கேஸ் போடறதா ஆணித்தரமான சாட்சியங்களுடன் பயப்படுத்தி மகேந்திரனை எப்படியாவது சம்மதிக்க வைக்கறதுதான் குறிக்கோள். இதுக்கு சதாசிவத்தின் பின்னால ஒரு பின்னணியில் ஒரு கோஷ்டி இயங்க அவங்கதான் இந்த அடிதடி எல்லாம் ஏற்பாடு பண்ணியிருக்காங்க."

"எதுக்கு?"

"மகேந்திரன் எங்க வேலை பார்க்கறார்னு தெரிஞ்சா இது க்ளியராகும்."

"அதுக்கும், இதுக்கும் என்ன சம்பந்தம்?"

"அவர்கிட்ட அரசாங்க பாதுகாப்புகளைப் பற்றிய ரகசியம் ஏதாவது அதிக விலை போறதா இருக்கக்கூடும்."

வசந்த் யோசித்து சட்டென்று பிரகாசமாகி, "பாஸ், கில்லாடி பாஸ் நீங்க. இப்ப பளிங்கு மாதிரி புரியது."

"எனக்கு இன்னும் புரியலை."

"எல்லாமே க்ளியர்–நாட்டின் மிஸ்ஸைல் அல்லது ராணுவ ஆராய்ச்சி பற்றிய ரகசியங்களை மகேந்திரனிடமிருந்து வாங்கிக் கொடுத்தா நிறைய பணம் தர்றேன்னு சதாசிவத்தை ஒரு பார்ட்டி அண்டியிருக்கலாங்கறீங்க."

"சதாசிவம் தன் மாப்பிள்ளையை பயமுறுத்தி, கேஸ் போடுவேன். வேலை போய்டும்னு பயப்படுத்தி கேஸ் போடாம இருக்கறத்துக்கு கண்டிஷனா விலையா ரகசிய ஃபைல்களைக் கேட்டிருக்கலாம்."

"எக்ஸலண்ட்."

"மகேந்திரனுக்கு ரஞ்சனி ஷர்மாவைக் கல்யாணம் பண்ணிக்க வேண்டிய கட்டாயம்; வேலை இழக்காம இருக்க வேண்டிய கட்டாயம். இரண்டு காரணங்களுக்காகவும் அந்த ரகசியத்தை விற்கச் சம்மதிச்சிருக்கலாம். இல்லாட்டி வெத்து வரதட்சிணை கேசுக்கு இத்தனை அடிதடி இருக்கக்கூடாது. என்ன சொல்ற?"

"ரைட்."

அப்போது மகேந்திரன் அவசரமாக மாடி ஏறி வந்து, "எங்கே அவ? எங்கே அவ? என்றார். "மிஸ்டர் கணேஷ். என்னாச்சு?"

"ஸாரி மிஸ்டர் மகேந்திரன், ரஞ்சனி இஸ் டெட்."

"ஓ காட்! கொன்னுட்டாங்களா? அய்யோ!"

உள்ளே சென்று ரஞ்சனியின் உடலருசில் உட்கார்ந்து விசித்து அழுதார் மகேந்திரன். "அய்யோ உன்னைக் கல்யாணம் செய்துக்கத்தான் எல்லாத்துக்கும் சம்மதிச்சேனே!"

போலீஸ் இன்ஸ்பெக்டர்–"மிஸ்டர் மகேந்திரன், இந்தக் கொலையை யார் செய்திருக்க முடியும்னு சந்தேகம் இருக்குதா?"

"இருக்கு" என்றார்.

"யாரு?"

"சதாசிவத்தின் ஆட்கள்."

"சதாசிவங்கறது?"

"என் மாமனார்."

"அப்படியா?"

"எதுக்காக கொலை செய்தாங்க?" என்றான் கணேஷ்.

"கணேஷ்! உங்களுக்குத்தான் தெரிஞ்சு போச்சே. ரிமார்க்கபிள்! ரொம்ப க்ளோஸா உண்மைக்கு அருகே வந்தீங்க. ரஞ்சனிக்கு நிறைய தெரிஞ்சு போச்சு."

"என்ன?"

"நா, எம்மேல சதாசிவம் கேஸ் போடாம இருக்கறதுக்கு பதிலா அவருடைய கோஷ்டிக்கு நான் மிஸ்ஸைல் சம்பந்தமான சில ரகசியங்களை விற்க ஒப்புக்கிட்டது."

"வித்துட்டீங்களா?"

"விற்க சம்மதிச்சுட்டேன். இன்னைக்குத்தான் டாக்குமெண்ட் கைமாற இருந்தது."

"எவ்வளவுக்கு?"

"சதாசிவத்துக்கு மூணு கோடி. அதில பத்தில ஒரு பாகம் எனக்கு."

கணேஷும் வசந்தும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள, வசந்த், "கை கொடுங்க பாஸ்" என்றான்.

மகேந்திரன், "மிஸ்டர் கணேஷ் யூக சக்தியினால உண்மைக்கு ரொம்ப கிட்டக்க வந்தீங்க. அடுத்தது உங்களைத்தான் அவங்க குறி வெச்சாங்க. ரஞ்சனியை இந்த ஆஸ்பத்திரியில கொண்டுவந்து வச்சது நான்தான். அது அவங்களுக்குத் தெரியாது. நீங்க வந்திருந்தபோது சொல்லிட்டீங்க. சதாசிவம் உடனே அடியாளுங்களுக்கு போன்

பண்ணியிருக்கார். கொலைக்காரங்க முந்திகிட்டாங்க. ரஞ்சனி! மை லவ்! இனிமே எதுக்குப் பணம் எனக்கு? யாருக்காக நான் சம்பாதிக்கணும்?"

"மகேந்திரன், சதாசிவம் உங்க எல்லாரையும் இயக்கிய சூத்திரதாரி யாரு தெரியுமா? சொல்றீங்களா?" என்றான் கணேஷ்.

மகேந்திரன், "சொல்லிர்றேன்! ரஞ்சனி இறந்து போனப்புறம் எனக்கு இனிமே என்ன? எல்லாரையும் பட்டியல் கொடுத்துச் சொல்றேன்! இன்ஸ்பெக்டர்! கொஞ்சம் வாங்க" என்றார். அதற்குள் அந்த டாக்டர், "ப்ளீஸ், கொஞ்சம் விலகிட்டிங்கன்னா, அந்த டெத் ரிப்போரிட்டை எழுதிர்றேன். மிஸ்டர் மகேந்திரன் வர்றீங்களா?" என்றார்.

டாக்டருடன் மகேந்திரன் செல்ல, கணேஷை பலமாக கைகுலுக்கி, வசந்த் "பாஸ் ஒண்ணுவிடாம பக்கத்திலே இருந்த மாதிரி சொல்லிட்டீங்களே! எப்படி பாஸ்? ப்ரொட்டீன் அதிகமா இல்லை மீன் அதிகமா சாப்பிடறீங்களா?"

கணேஷ் புன்னகைத்தவன் சட்டென்று சீரியஸாக, "வசந்த்! டாக்டர்!" என்றான்.

வசந்த் உடனே புரிந்துகொண்டு, "ஓமனா! அந்த டாக்டரை முன்னால பாத்திருக்குது?"

"இல்லியே. அவர் பாத்தா புதுசாட்டம் இருக்கு."

"நாசமாய்ப் போச்சு. இன்ஸ்பெக்டர்! வாங்க க்விக்!"

மகேந்திரனை டாக்டர் அழைத்துச் சென்ற அறைக்குள் அவர்கள் விருட்டென்று நுழைய...

மகேந்திரன் மண்டையில் 'டாக்டர்' துப்பாக்கி வைத்து அதன் குதிரைக்குள் விரல் செலுத்தி...

வசந்த் இங்கிருந்து பதினாறடி வேங்கைபோலப் பாய்ந்து, டாக்டர்மேல அப்படியே கரபூம் என்று விழுவதற்குள் துப்பாக்கி வெடித்துவிட, ஆனால் குறி தவறி மேல் சுவற்றில் சிராய்த்தது.

நர்ஸ்களும், வார்டு பாய்களும் கூக்குரலிட அந்த இடத்தின் பொது குழப்பத்திலிருந்து வெளிப்பட்ட வசந்தும் கணேஷும் வாசலில் காத்திருந்த நடேசனையும், ப்ரதிமாவையும் பார்த்தார்கள்.

"என்ன ஆச்சு?" என்றார் நடேசன்.

"குறி தவறிடுச்சு நடேசன்."

"உள்ளே போங்க. மாப்பிள்ளை தப்பிச்சார்?"

"ப்ரதிமா, இரு பாத்துட்டு வர்றேன்."

ப்ரதிமாவைப் பார்த்து, "அவ்வளவு இன்னஸெண்டா நீங்க?" என்றான் வசந்த்.

"என்ன வசந்த்?"

"உங்கப்பா கண் தெரியாத மாதிரி பாசாங்கு பண்ணது தெரியலையா?"

"தெரியாது வசந்த். நிசமாவே தெரியாது வசந்த்."

"அப்ப உங்க குடும்பமே ஸப்ஜாடா ஜெயிலுக்கு போகப் போறது. நீங்க தனியா இருந்தீங்கன்னா ஒரு நடை நம்ம வீட்டுக்கு வாங்க. மெக்ஸிகோ சலவைக்காரி ஜோக் சொல்றேன். அப்பாவை அனுப்சுட்டு எங்காத்துக்கு வரியா?"

"எங்க அனுப்சுட்டு?"

"ஜெயிலுக்கு."

www.writersujatha.com

"பை" என்றான் கணேஷ்.

"இருங்க பாஸ். ப்ரதிமா பாவம் தனியா! ப்ரதிமா, நீ என்ன பண்றே! மாத்திக்க புடவை, டூத் பேஸ்ட் மட்டும் போதும் எடுத்துண்டு தம்பு செட்டி ஸ்ட்ரீட்டுக்கு வந்துடு. ரெண்டு பேரும் சேந்துண்டு பூப்பறிக்கலாம்."

"சரி வசந்த்" என்றாள் ப்ரதிமா.

*(முற்றும்)*

www.writersujatha.com